www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

June பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් செப்.27—ஒக்.03,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 276

## காலநிலையும் கள மாற்றமும்



## கிராம அநியாயம்
## கிழக்கு படுகொலைகள்



## டாக்டர் இடி அமீன்

## ஏன் அழுதார் சுவலட்சுமி?



படிப்பகம்

# முரசம்

## மலையக வன்முறை

**அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.**

இரத்தினபுரியில்
மலையகத் தமிழர்கள்மீது
இனவாதத் தாக்குதல்கள்
கட்டவிழ்த்துவிடப்பட்டன!

தகுந்த நேரத்தில்
பொலிசார் நடவடிக்கை
எடுக்கத் தவறினார்கள்!

உடனே நடவடிக்கை
முடுக்கிவிடப்பட்டிருந்தால்
அப்பாவி மக்களின்
சொத்துக்கள் நாசமாவதைத்
தடுத்து நிறுத்தியிருக்கலாம்!

'நன்றாகக் கொடுத்து
முடிக்கட்டும்!' என்று
விட்டுப் பிடித்ததைப்போன்றே
தாமத நடவடிக்கைகள்
சந்தேகம் தருகின்றன!

கடந்த காலங்களில்
பாதுகாப்புத்தரப்பினரின்
முன்னிலையில்தான்
இனப்படுகொலைகள்
நடத்தி முடிக்கப்பட்டன
என்பதும் மறக்க முடியாதது!

மலையகத் தமிழர்கள்
பேரினவாதிகளால்
தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும்
பாராமுகமான போக்கையே
பலமுறை கண்டுமுள்ளோம்!

பொலிசாரின் மெத்தனமான
போக்கைக் கண்டிக்க
அரசியல்வாதிகளும்
முன்வரவில்லை!

மலையகத் தமிழர்கள் மீதான
தாக்குதலை
வடக்கு-கிழக்கு
தமிழ்க் கட்சித் தலைவர்கள்
கண்டிக்காமல் இருந்ததும்
கவனிக்கப்பட வேண்டியதே!

மலையகத் தமிழர்களது
குடியுரிமை பறிக்கப்பட்டபோது
தந்தை செல்வா எதிர்த்து
குரல் கொடுத்திருந்தார்!

திம்பு மாநாட்டில்
இனப்பிரச்சனைக்கு
அரசியல் தீர்வு காண்பதற்கான
அடிப்படைக் கோரிக்கைகளில்
மலையகமக்களது குடியுரிமைக்
கோரிக்கையையும்
போராளிகள் முன்வைத்தனர்!

ஆனால், இன்று
ஜனநாயகப் பாதையில் (?!)
தாம் செல்வதாக
வாய் நோகக் கூவும்
தமிழ்க் கட்சிகளுக்கு
எல்லாமே மறந்துபோயின!

வடக்கு-கிழக்கில்கூட
தங்களுக்கு வாக்குப் போடக்கூடிய
மக்களின் பிரச்சனைகளை
மட்டுமே பேசிப்
பெயரெடுக்கும் கட்சிகளாக
குறுகிவிட்டன தமிழ்க் கட்சிகள்!

அதனால்தான்
யாழ் நிவாரண வெட்டைக்
கண்டிப்பதாக நடித்தவர்கள்
வன்னி நிவாரண வெட்டை
கண்டுகொள்ளாமல் இருந்தனர்!

வாக்குச் சீட்டு வியாபாரிகளாக
மாறிவிட்ட தமிழ்க் கட்சிகளிடம்
பரந்த நோக்கை
எதிர்பார்ப்பது இயலாதது!

இவர்கள்
மலையகத் தமிழர்கள்
தாக்கப்பட்டபோது
மௌனம் சாதித்ததும்
ஆச்சரியமல்லத்தான்!

மலையக அரசியல் சக்திகளும்
இந்த அநியாயத்தின்போது
மிக நிதானமாக
பிடில் வாசித்துள்ளன!

அரசில் தங்களுக்குள்ள
செல்வாக்கைப் பயன்படுத்தி-
தாமதம் காட்டிய
பொலிஸ் தரப்புமீது
தக்க நடவடிக்கைக்கு
நெருக்கியிருக்கலாம்!

இரத்தினபுரியில்
ஆளும் தரப்பு பா.உ.
கொல்லப்பட்டபோது
அங்கு பணியாற்றிய
பொலிஸ் அதிகாரிகள்மீது
நடவடிக்கை எடுக்கப்பட்டது!

இனவாத வன்முறையைத்
தடுக்கத் தவறியவர்கள்மீது
நடவடிக்கை எடுக்கமட்டும்
அரசு ஏன் தயங்குகிறது?

வன்முறைகளைத் தடுக்காமல்
இருந்துவிட்டு-பின்னர்
விசாரணைக்குழுக்கள்
நியமித்துள்ள செய்தி
தகுந்த பரிகாரமாகாது!
தேவையானது-
தக்கநடவடிக்கையும்
நஷ்டஈடுமே!

அவ்வாறு செய்தால்தான்
மலையகத் தமிழர்கள்மீதான
வன்முறைகள் தொடர்வதைக்
கட்டுப்படுத்தலாம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!'

மகாகவி பாரதியாரின் கூற்று இது. எச் சமயத்திலும் இத்தத்துவம் பொதுவானதொன்றாக விளங்குகிறது. சமயதத்துவம் எதிலும் விரோதம், குரோதம் போன்ற மாறுபாடான எவற்றுக்கும் இடம் இல்லை.

'அன்பே சிவம்' என்றுதான் சிவநெறி பகர்கிறது. அன்பும் சிவமும் வேறல்ல; உயிர்களனைத்தையும் ஒன்றெனக் கருதி அன்பு செலுத்துபவனே உண்மையான சைவன் ஆவான்.

சைவம் எந்த உயிரையும் வதைப்பதை ஏற்பதில்லை. இதனால்தான் உயிரை வதைத்து அதன் ஊனை உண்ணுவதை சைவம் தவிர்க்கிறது. அனைத்து சீவராசிகளிடத்திலும் உயிராக ஒன்றியிருப்பது-ஆன்மா- அந்த ஆன்மாவே சிவம்.

தாவரங்களிலும் உயிர் இருப்பதை சைவம் என்றோ உணர்த்தியிருக்கிறது. மனிதன் உயிர்வாழ உணவு தேவை. ஆகவே உயிருடன் நடமாடித் திரியும் பிராணிகளை உணவுக்காக வதைப்பதை சைவம் தவிர்த்து நிற்கிறது. அங்குமிங்கும் நடமாடாமல் ஒரே இடத்தில் நிலையாக நிற்கும் மரம் செடிகொடி, கிழங்கு போன்றவற்றை மட்டும் உணவாகக் கொள்ளலாம் என்கிறார்கள்.

ஞானிகளும் யோகிகளும் கானகத்தில் தவம் செய்யும் பக்குவமடைந்த நிலையில், அவர்கள் மரங்களிலிருந்து காய்ந்து உதிர்ந்த இலைகளையும், கனிந்து விழுந்த கனிகளையும் மட்டுமே உணவாகக் கொள்ளுகின்றனர்.

ஞானேந்திரன்



## தவ்பா (பாவ மீட்சி பெறுதல்)

அல்லாஹ் கூறுகிறார்:- "முஃமின்களே! நீங்கள் அனைவரும் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். மேலும் ஈமான் கொண்டவர்களே! தூய்மையான நிலையில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள்." (குர் ஆன்)

அகர்ருப்னுல் யஸார் (ரலி) அவர்கள் ரசூல் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள். "மனிதர்களே! அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருங்கள். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுங்கள். நிச்சயம் நான் ஒவ்வொரு நாளும் நூறுமுறை பாவமன்னிப்புத் தேடுகிறேன்"... ரசூல் (ஸல்) கூறியதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

"உங்களில் ஒருவன் தனது ஒட்டகத்தை காட்டு வனாந்திரத்தில் தவற விட்டு விட்டான். பின்னர் அதனை (தேடி) கண்டுபிடித்து விட்டான். இந்நிலையில் அவன் அடைகின்ற மகிழ்ச்சியைவிட அதிக அளவிற்கு ஒரு அடியான் பாவ மன்னிப்புக் கோரும்போது இறைவன் மகிழ்ச்சியடைகிறான்."

ஆதமுடைய மக்கள் அனைவரும் பாவம் செய்யக் கூடியவர்களே. அதில் எவர் பாவமன்னிப்புத் தேடி மீட்சி பெறுகிறாரோ அவரே சிறந்தவர். எனவே பாவம் செய்து விட்டால் அதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான் என்று கூறுவது தவறு. இதுவும் பாவமாகும். அல்லாஹ் எல்லாப்பாவங்களையும் மன்னிப்பான்- ஆனால் அவனுக்கு இணைவைப்பதைத் தவிர்ந்த ஏனைய பாவங்களை. ஆகவே உயிர் உடலை விட்டுப் பிரிவதற்கு முன் பாவ மன்னிப்புத் தேடி வெற்றி பெறுவோமாக.

எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

# கவிதைப் போட்டி இல.273

## பரிசுக்குரிய கவிதை

### இல்லையடி

**காணாமற் போனோரைக்
கண் இமைகள் வெட்டாமல்
தோணும் வரை பார்த்தும்
தோற்றியதே இல்லையடி?**

**செல்வி தமிழரசி- ஈச்சந்தீவு-
கிண்ணியா.**

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பயனில்லை!

நீங்களந்த வாசலிலே
நின்று பயனில்லை!
செம்மணிக்குச் சென்றவர்கள்
திரும்பி வரப் போவதில்லை!

அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம், கண்டி.



### வழிகாட்டி

அச்சம் தவிர்!
உறுதி கொள்!
நாளைய சந்ததி
உன்முகம் பார்த்து
பாடம் கற்கும்!

ம. திருவரசுராசா-வவுனியா.

### அச்சம்

அச்சத்தின் சுவடுகள்
அகம் விட்டு மறையு மட்டும்
எச்சத்தம் கேட்டாலும்
இதயமெல்லாம் படபடப்பு!

பசறையூர் மலலிகா பத்மநாதன்

### இரண்டும்....

யாரு வாரார்....?
ஓட்டுக்கா.... வேட்டுக்கா?
இரண்டும் ஒன்றல்லோ!

சிவம் பிரியதர்ஷனி-
ஹல்கரனோயா.

### திடீர்க் கைது!

பிடிபட்டுப் போனவர்...
விடுபட்டு வருவரோ?!
திகிலுற்று நிற்பவர்க்கு...
ஆறுதல் சேதி தருவா(ர்யா)ரோ...?

கோட்டைமுனை-வாஹிட் ஏ. குத்தூஸ்.

### சறுக்கும்

ஆனைக்கும் அறுகம்புல்லில்
அடிசறுக்கும்-பாவையரே; உம்
பார்வையிலே எம் பார்வை
அடி சறுக்கும் காண்!

'திக்கவயல்'-மன்னார்.

### தப்பியதால்....

செம்மணிக்குள்...
எத்தனை கண்மணிகள்...?
அகப்பட்டிருந்தால்....
அங்குதான்
இப் பெண்மணிகள்!


இரா. மணிசேகரன்-
பூண்டுலோயா.

### பரிசு!

கொடுமைகளைத்
தாங்குவதும்;
குடும்பத்தோடு
ஏங்குவதும்;
போர் எமக்குத் தந்த
பொன்னான
பரிசுகளோ?

ரேணுகா நிபாய்தீன்-
ஏறாவூர்-02.

# கவிதைப் போட்டி இல.276



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய

படப்பிடிப்பு: சி.சத்தியமூர்த்தி-முல்லைத்தீவு.

கடைசித் திகதி: 03.10.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.276
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



# வாசக(ர்)சாலை

என் அன்புள்ள முரசிற்கு!

முரசில் அன்பும், பாசமும் கொண்ட பல்லாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன். நான் முரசு வேண்டியதும் முதல் பார்ப்பது இடி அமீனின் உண்மைத் தொடரைத்தான். இத் தொடரை தரும் ரசிகனுக்கு எனது உள்ளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.முகிர்த்தனன், இலண்டன்.

அன்பின் முரசே! உங்கள் அபிமானிகளில் நானும் ஒருவன். தினமுரசு எப்போ கிடைக்கும்? என்று எதிர்பார்ப்பவன் நான். எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு முரசு பார்க்கிறார்கள்.

'திருமறை தரும் பொது நெறி' மிக மிக மகிழ்ச்சி தருகின்றது. 'இராஜகுமாரன்' அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

ச.சாத்வீகராசா, களுவாஞ்சிக்குடி.

'முள் நிலவு' உண்மையிலே என்னை மிகவும் கவர்ந்து விட்டது. ராஜேஸ்குமார் எழுதிய தொடர்களில் இது மிகவும் வித்தியாசமானது. இதை எழுதி வரும் ராஜேஸ்குமார் இதே போன்று பல கதைகள் எழுத வேண்டும். அவற்றை முரசு வெளியிட வேண்டும்.

ஏ.ரேணுகா, கணேசபுரம், வவுனியா.

முரசே!

சிலவேளைகளில் நீ எம்மை வந்தடையத் தாமதமாகின்றாய். ஆகவே இதற்கு பாரபட்சமற்ற விசாரணைக்கமிஷன் நியமித்து என்ன-ஏது என்று கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டாம். ஆனால் நேரத்திற்கு கிடைக்க வழி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விக்கி முத்தையா, கனடா.

முரசே! காதிலை பூ கந்தசாமி எமது விருப்பிற்குரியவராகி விட்டார். அரசியல் நீரோட்டத்தில் குளிக்க வந்த சிவப்புச் சட்டைகளின் சாயம் கழுவப்பட்டு காவிநிறமாகி வருவதையிட்டு பயமாக உள்ளது. ஏனென்றால் இவர்கள் அமைக்கப்போகும் வழிபாடு, கால் தொழுதல் ஆசிரமங்களுக்கு சீடர்களாக தமிழ் இளைஞர்களை கட்டாயமாக சேர்த்து 'கட்டாய வழிபாட்டு பயிற்சி'யும் வழங்கிவிடுவார்கள்.

இ.நிக்ஷன், ஜெயபுரம், கிளிநொச்சி.

அன்பின் முரசிற்கு,

நீ உன்னில் தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பரிலும் சூப்பர். சூடு, சுவை, சுவாரசியம் கூடிக்கொண்டு போவதனால் மறு வாரம்வரை காத்திருக்க முடிவதில்லை. 'அரசியல் தொடர்', 'இலக்கிய நயம்', இடி அமீனின் அதிர் இடி, 'முள் நிலவு' அருமையிலும் அருமை.

ம.இயூஜின், நீர்கொழும்பு.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.**

## அதே தவறு

காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகள் தொடர்பாக அரசியல் தொடரில் குறிப்பிட்டிருந்தீர்கள். விடுதலைப் புலிகளின் பெரும் தவறு அது என்பதில் சந்தேகமில்லை. சிங்கள இனம் தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குவதும் தவறுதான். தமிழ்த் தேசிய இனம் அதே தவறை முஸ்லிம்கள்மீது செய்யக்கூடாது.

ஆர்.டிக்ஷன், மட்டக்களப்பு.

## சொல்லாமலே...

அன்பு முரசுக்கு;

முஸ்லிம்கள் கிழக்கில் படுகொலை செய்யப்பட்டதை அற்புதன் விவரித்தார். முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஆடிய கூத்துக்களைத் தொடர்ந்துதான் அந்த விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்தன. அதையிட்டு அற்புதன் முழுதாகக் கூறாமல்விட்டது ஒரு குறையே!

சி.உருத்திராபதி, ஏறாவூர்.

## தடுத்தும் கேட்கவில்லை

முரசு வெளியிட்ட கணிப்புப்போலவே யாழ் மாநகர முதல்வரது துயர முடிவு அமைந்துவிட்டது. ஆட்சியாளரின் நலனுக்கான மரணமே இது என்றால் மிகையில்லை. ஆட்சியாளர்களுக்கு தேவையான தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டபோதே பத்திரிகைகளும், விமர்சகர்களும், ஏன் யாழ்ப்பாண மக்கள்கூட 'இத் தேர்தலை நிராகரியுங்கள்' என்றுதானே கூறினர். 'கிணற்றுக்குள் குதிக்கிறோம்; பந்தயம் பிடி' என்று அறிந்தே குதித்தனர். ஆனாலும் மனித உயிர்கள் இப்படி அநியாயமாகப் போவது சஞ்சலமே!

சி.சித்திரவேல், சுன்னாகம்.

## பொம்மலாட்டம்

முரசே!

செம்மணி புதைகுழிகளை தமிழ்க் கட்சிகள் கூறியும்கூட தோண்ட முன்வரவில்லை அரசாங்கம். யாழ் மாநகர முதல்வர் கொலையை ஜனாதிபதி அவர்கள் கண்டித்திருந்தார். சமாதானத்திற்கு ஏற்பட்ட சிதைவு எனவும் கூறியிருந்தார். அதே சிவபாலன் தலைமையில் புதைகுழிகளைத் தோண்டுமாறு தீர்மானம் இயற்றியது யாழ் மாநகரசபை. சமாதானம் விரும்பிய(?) அவர்கள் விருப்பத்தை அரசு ஏன் நிறைவேற்றவில்லை? யாழ் மாநகர மேயருக்கு அரசு பாதுகாப்பு கொடுத்திருந்ததேதவிர, அவர் கூறிய கருத்துக்களை காதுகொடுத்துக் கேட்கவில்லை. பொம்மலாட்ட பொம்மைகள்தான் தமிழ்க் கட்சிகள். மறைந்த மேயரும் விலக்கல்ல.

மு.தனுஷ்கோடி, யாழ்ப்பாணம்.

## அதனால் தானோ?

செம்மணி புதைகுழிகள் தொடர்பாக 'முரசு' தந்த தகவல்களும், செய்திகளும், இராஜதந்திரியின் அலசலும் பல உண்மைகளை வெளிக் கொண்டுவந்துள்ளன. புதை குழியை தோண்டுமாறுதானே தமிழக்கட்சிகள் கூறின. எப்படி தோண்டுவது யார் முன்னிலையில் தோண்டுவது என்று கூறவில்லையே. அதுதான் தோண்டி முடிந்துவிட்டதோ?

எம்.சுசிலா, யாழ்ப்பாணம்.

## வன்னித்துயர்

வெண்ணிலா சூரியகுமாரன் எழுதிய கதை வன்னித் துயரை கண் முன்னால் நிறுத்தியது. எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அற்புதமான புதிய எழுத்தாளர்களை உருவாக்கி வரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

எஸ்.சிவரஞ்சன், வவுனியா.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ் நகரில் குண்டு வாகனப் பீதி!

## நகருக்குள் வாகனங்கள் புகத் தடை!

(நமது நிருபர்)

**யா**ழ் நகருக்குள் குண்டுவாகனம் ஒன்று புகுந்துவிட்டதாக கடந்தவாரம் பீதி கிளம்பியது.

உடனடியாக நகரில் உள்ள பல கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் நடமாட்டம் இல்லாமல் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. பின்னர் அது வெறும் புரளி என்று தெரிந்தது.

யாழ் நகருக்குள் குண்டு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று சுற்றித்திரிகிறது என்று பிறிதொரு பீதியும் கிளம்பியுள்ளது.

நகருக்குள் உள்ள முக்கிய இலக்குகளைக் குறிவைத்து கரும் புலிகள் ஊடுருவி உள்ளனர் என்றும் கதைகள் பரவியுள்ளன.

இதனையடுத்து யாழ் குடாநாட்டில் இருந்து யாழ் நகருக்குள் பிரவேசிக்கும் பிரதான பாதைகள் சில மூடப்பட்டன. நகருக்குள் வாகன நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

இதற்கு முன்னரும் கரும்புலி தினம் போன்ற நாட்களில் நகரின் பிரதான வீதிகள் மூடப்பட்டு வாகன நடமாட்டம் தடுக்கப்படுவது வழக்கமாகும்.

யாழ் மாநகர சபை குண்டுவெடிப்பை அடுத்து யாழ் நகரில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் அவசியம் நேர்ந்துள்ளது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு மக்களது அதிருப்தி ஏற்படாமல் இருக்க மேற்படி வதந்திகளும் உதவலாம்.

எனினும். வதந்திதானா? அல்லது உண்மையிலேயே கரும்புலிகளின் வாகனம் ஏதாவது நகருக்குள் உள்ளதா? என்பது உறுதியாகத் தெரியவில்லை.

### தேடுதல்- சுற்றிவளைப்பு

யாழ் நகரில் திடீர்த் தேடுதல்களும், சுற்றிவளைப்புகளும் நடத்தப்பட்டுவருகின்றன. எந்த நேரத்தில், எது நிகழுமோ? என்ற பீதியில்தான் மக்கள் நடமாடுகின்றனர்.

சுற்றிவளைப்பு- தேடுதல்கள் மத்தியிலும் யாழ் நகருக்குள் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் யாழ் குடாநாட்டில் படையினர் பதுங்கியிருந்து விரிக்கும் வலைகளில் புலிகள் சிக்கிக் கொள்ளுவதும் தொடர்கிறது.

18.09.98 அன்று தென்மராட்சி பகுதியில் படையினர் பதுங்கியிருந்தனர். புலிகளின் அணி ஒன்று அவர்கள் பதுங்கியிருந்த இடத்தைக் கடந்தபோது தாக்குதலுக்கு இலக்காகியது.

புலிகளின் அணியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே தப்பிச் சென்றது. ஒரு புலி பலியானார். புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளரே பலியானதாக ஒரு தகவல் கூறுகிறது.

வடமராட்சியிலும் பதுங்கியிருந்து படையினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரு புலிகள் பலியானார்கள். ■

# 'குடியுரிமை வழங்குவதும் கெடுதியாம்!'

## எதிர்க்கட்சித் தலைவருக்கு கண்டனம்

**பு**லிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்று ரணில் கூறியதை வைத்து அவருக்கெதிரான பாரிய எதிர்ப்பிரசாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரானவர்கள், பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள் என்ற போர்வைகளில் பேரினவாத சக்திகளே இந்த எதிர்ப்பிரசாரத்தில் குதித்துள்ளன.

இவர்களை பின்னணியில் நின்று ஆளும் தரப்புக்குச் சார்பானவர்களே தூண்டிவிட்டு வருவதாக கூறப்படுகிறது.

தங்கள் அரசியல் போட்டிகளுக்காக கடந்த காலத்திலும் இவ்வாறுதான் பேரினவாதச் சக்திகளை உசுப்பிவிட்டன அரசியல் கட்சிகள். தற்போதும் அவ்வாறுதான் நடந்து வருகிறது.

அரசின் தீர்வு யோசனைகளுக்கு எதிராக பேரினவாத சக்திகளைத் தூண்டிவிட்டதில் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் சிலருக்கு முக்கிய பங்கு இருந்தது.

இப்போது அதே சக்திகள் ரணிலுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

'பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம்' என்ற பெயரில் ரணிலுக்கு பகிரங்க கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

முழுக்க இனவாதமாக எழுதப்பட்ட அக்கடிதத்தின் இறுதியில் மட்டும், பொதுஜன முன்னணியையும் ஒரு சாட்டுக்காக கண்டித்துள்ளனர். கடிதம் முழுவதும் ஐ.தே.கட்சியை சாடியே அமைந்துள்ளது.

மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்குவதும் பிரிவினையை ஊக்குவிக்கும் என்று எச்சரித்துள்ளது அந்த இயக்கம். ■

# "மறு அறிவித்தல் வரைக்கும் விமான சேவையை நிறுத்துக!"

## இரண்டாவது எச்சரிக்கை!

**யா**ழ் குடாநாட்டுக்கான விமான சேவையை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட இரண்டு விமான சேவை முகாமையாளர்களுக்கும் புலிகள் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மேற்படி அறிவித்தல் புலிகளின் கடிதத் தலைப்பில் அல்லாமல், தமிழீழ நிர்வாக சேவையின் கடிதத் தலைப்பில் அனுப்பப்பட்டுள்ளது. இக் கடிதத் தலைப்பு முன்னரும் நிர்வாகம் தொடர்பான அறிவிப்புக்களுக்கு புலிகளால் பயன் படுத்தப்பட்டுள்ளது.

எனவே புலிகள்தான் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

"அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு சலுகைகள் வழங்கி, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களைக் கவர்ந்திழுத்து போராட்டத்தை மழுங்கடிக்க அரசு முனைகிறது. அதற்கு இடமளிக்க மாட்டோம்!" என்று முன்னர் புலிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

வடபகுதிக்கான கப்பல் சேவைகள் படையினருக்கும் உதவியாக அமைவதால் அவற்றை சீர்குலைப்பது தவிர்க்க முடியாதது என்று புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர். அச் செய்தி முரசிலும் பிரசுரமாகியது. அந்த அறிவித்தலின் பின்னரே கப்பல்கள் சில புலிகளால் கடத்தப்பட்டன.

### திடீர் எச்சரிக்கை

மிக நீண்டகாலமாக நடத்தப்பட்டுவரும் யாழுக்கான விமான சேவைகளுக்கு புலிகள் இதற்கு முன்னர் எப்போதும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை.

சமீபத்தில் புலிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே எச்சரிக்கை அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட இரண்டு விமான சேவைகளிலும் சீருடையினர் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும், பொதுமக்கள் காத்திருக்கத்தக்கதாக அவ்வாறு பல பறப்புக்களை குறிப்பிட்ட ஒரு விமான சேவை நடத்தி முடித்ததாகவும் புலிகளுக்கு தகவல் எட்டியதாம். சீருடையினர் வற்புறுத்தாத போதும், தமது சேவையாகக் கருதியே குறிப்பிட்ட நிறுவனங்கள் அவர்களுக்காக போக்குவரத்து நடத்தியதாம்.

பொதுமக்களுக்காக என்று கூறப்படும் விமான சேவையை புலிகள் நிறுத்துவதும் தவறு; அதேநேரம் பொதுமக்களுக்கான போக்குவரத்துக்களை சீருடையினர் பயன்படுத்துவதும் தவறு என்று நடுநிலை நோக்காளர்கள் கூறியுள்ளனர்.

### மறு அறிவித்தல்

புலிகளின் எச்சரிக்கைக் கடிதத்தில் மறு அறிவித்தல்வரை நிறுத்துமாறே கேட்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டுக்கான அரசியல் துறைப் பொறுப்பாளரான தூயவன் கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளார்.

முதல் கடிதம் அனுப்பியும் பயன் இல்லை என்பதால் இரண்டாவது கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், விமானம் தாக்குதலுக்கு உள்ளாகி தமிழ் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் அதற்குரிய தண்டனையை குறிப்பிட்ட முகாமையாளர்களே பெறவேண்டும் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் முகாமையாளர்கள் தமது அலுவலகங்களை மூடிவிட்டனர்.

தற்போது குறிப்பிட்ட விமான சேவை நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்களை நியமித்து அலுவலகம் நடத்துகின்றன. பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. ■

# மீனவர் படகுமீது தாக்குதல்

## இரு மீனவர்கள் பலி

(நமது நிருபர்)

**தி**ருக்கோணமலை சல்லிக்கடலில் இரு தமிழ் மீனவர்கள் தாக்குதலில் பலியாகினர். அவர்கள் சென்ற படகும் நிர்மூலமாக்கப்பட்டது.

மேலும் ஒரு மீனவர் படகு முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டபோதும் அதிலிருந்த மீனவர்கள் இருவரும் கடலில் குதித்து தப்பினார்கள். அவர்களை சிங்கள மீனவர்களே காப்பாற்றி கரைசேர்த்தனர்.

20.09.98 ஞாயிறு அன்று அதிகாலை 3.30 அளவில் மேற்படி சம்பவம் இடம் பெற்றது. தங்கவேலாயுதம் குணசேகர் (19), ஒரு பிள்ளையின் தந்தையான கோபால சிங்கம் கிருஷ்ணமூர்த்தி (21) ஆகியோரே பலியாகினர்.

25 முதல் 30 வரையான மீன்பிடிப் படகுகள் நின்று மீன்பிடித்துக் கொண்டிருந்த பகுதியிலேயே திடீர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சல்லிக்கடலில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த பகுதி கெவுலியா என்று அழைக்கப்படும். இங்கு மீன்பிடிக்க கடற்படை தடைவிதித்துள்ளது. ஆயினும் இப்பகுதியை விட்டால் வேறெங்கும் மீன்பிடிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. மூவின மீனவர்களும் இங்கு மீன்பிடிப்பது வழக்கம்.

இச்சம்பவத்தின் பின்னர் இலங்கை அரச தொடர்பு சாதனைச் செய்திகளில்- முல்லைக்கடலில் பயங்கரவாதிகளின் படகுகள் அழிக்கப்பட்டதாக விபரிக்கப்பட்டது.

சல்லிக்கடலில் இவ்வாறு மீனவர் படகுக்ள் தாக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

# பதவி விலகுமாறு பொது அறிவித்தல்!

## இலக்குகளைவிட்டு விலகுமாறும் கோரிக்கை

**யா**ழ் குடாநாட்டின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு கோரி முன்னரும் எச்சரிக்கைவிடப்பட்டது. 'தமிழின விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் 'ரோனியோ' செய்யப்பட்ட பிரசுரங்களே முன்பும் அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரும் அதே பெயரில் பிரசுரம் ஒன்று வெளியானது. தேர்தலில் போட்டியிடவேண்டாம் என்று அதில் கோரப்பட்டிருந்தது.

யாழ் மேயர் சிவபாலனின் மறைவுக்கு பின்னர் தற்போதும் 'தமிழின விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் பகிரங்க எச்சரிக்கைப் பிரசுரம் ஒன்று வெளியாகியுள்ளது.

'ஓயாது தொடரும்' என்ற தலைப்பிலான இப்பிரசுரம் யாழ் குடாநாட்டில் உள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சிறிலங்கா அரசு விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரசாரத்திற்கு யாழ் குடாநாட்டையே பயன்படுத்துகிறது. இங்கு இராணுவ ஆட்சி நிலவும்போது, வெளியுலகுக்கு இயல்பு வாழ்க்கை திரும்பிவிட்டது போலவும், தமிழ் மக்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

முன்னாள் மேயர் சரோஜினியின் தாக்குதல் நடவடிக்கைக்குப் பின்னர் நாம் சகல பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை உறுப்பினர்களுக்கும் கடிதங்கள்மூலம் எச்சரித்தோம். ஒரு சிலர் அதற்கு ஒத்துழைத்து தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

எமது நடவடிக்கைக்கு சவால் விடுவது போன்றே மாநகர சபை உறுப்பினர்கள் நடந்துகொண்டனர்.

நாம் இனி தனிப்பட்ட சபை உறுப்பினர்கள் எவருக்கும் எச்சரிக்கை அனுப்பப்போவதில்லை. இதனை பொது அறிவித்தலாகக் கருதி உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும். இல்லையெனில் அவர்கள் யாராக இருந்தாலும் நாம் நடவடிக்கை எடுத்தே தீருவோம்.

அண்மையில் நடந்த தாக்குதலில் சில பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அதற்காக நாம் மனவருத்தம் கொள்கிறோம். எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

எனினும் முன்னரே பலமுறை இவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டுவிட்டது. இராணுவத்தின் நிகழ்வுகள், தமிழ்க் கட்சிகளின் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்ள வேண்டாம் என்று நாம் கூறியிருந்தோம்.

தாக்குதல் நடைபெறக்கூடிய இடங்கள் என்று நீங்கள் கருதும் இலக்குகளில் இருந்து தூரவிலகியிருக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம்!" என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# 'நாங்கள் கொலைக்கான இலக்குகள்'

## கூட்டணிப் பிரமுகர் நீலன் தெரிவிப்பு!

**"சா**தகமான-பாதுகாப்பான சூழ்நிலை உருவாகும்வரை யாழ்ப்பாண மாநகர சபை அலுவல்களை நடத்துவதற்கு நாம் சித்தமாயில்லை," என்று தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நீலன் திருச்செல்வம் தெரிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு இவ்வாறு கூறியிருப்பதாக அதன் முன்பக்கச் செய்தி கூறுகிறது.

இது தொடர்பாக டாக்டர் திருச்செல்வம் மேலும் கூறியிருப்பதாவது:

"மேயர் சிவபாலன் கொலை செய்யப்பட்டமை எமது கட்சிக்கு பலத்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே அமைதியான சூழ்நிலை ஏற்படும்வரை அங்கு செயற்பட நாம் விரும்பவில்லை. இவ்வாறு பலி கொடுக்க நாம் தயாராயில்லை. முன்னாள் மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் கொலை செய்யப்பட்டு மூன்று மாதங்களில் அவருக்குப் பதிலாகப் பதவியேற்ற திரு.சிவபாலனையும் பறிகொடுத்துவிட்டோம்.

நாங்கள் வெளிப்படையாகவே கொலைக்கான இலக்குகளாக்கப்பட்டுள்ளோம். தீர்க்கமானதொரு முடிவெடுக்கும்வரை பிரதிமேயர் திரு. பி.ரவிராஜ் கொழும்பிலிருந்த வண்ணம் கடமைகளைச் செய்வார். அமைதியான சூழல் ஏற்படும் வரை மாநகர சபை ஆணையாளர் நிர்வாக அலுவல்களைக் கண்காணிப்பார்..." என்று கூறியுள்ளார்.

ஆனால் கூட்டணியின் யாழ் மாவட்டக் கிளை வேறு விதமான கருத்துக்களைக் கூறிவருகிறது. ■

# புலிகளுக்கு மண்டேலா ஆதரவு!

## கொழும்பு வார இதழ் விவரிக்கிறது

**"வி**டுதலைப் புலிகள் இயக்கம் போன்ற அந்நிய இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பிரிட்டன் புதிய சட்டங்களைக் கொண்டு வரப்போகிறது. இதே அடிப்படையில் வேறு பல ஐரோப்பிய நாடுகளும் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று தெரிகிறது. இதனால் எல்.ரி.ரி.ஈ. இயக்கம் பிரிட்டனிலுள்ள தனது அலுவலகங்களை தென் ஆபிரிக்காவுக்கு மாற்றக்கூடும் என்று நம்பப்படுகிறது" இவ்வாறு கொழும்பு வார இதழான 'சண்டே ரைம்ஸ்' கூறுகிறது.

தென் ஆபிரிக்காவில் தமிழர்கள் மற்றும் திராவிட இனத்தவர்களான தெலுங்கு பேசும் மக்கள் ஏறத்தாழ 6 இலட்சம் பேர் வாழ்கின்றனர். 19ம் நூற்றாண்டில் தென் இந்தியாவிலிருந்து தென் ஆபிரிக்கா சென்று குடியேறிய தென் இந்தியத் தொழிலாளர்களின் வழிமரபினரே இவர்களாவர்.

வெள்ளையர் ஆதிக்கத்தின்போது, தென் ஆபிரிக்கக் கறுப்பு இனத்தவர்களுடன் சேர்ந்து அடக்கு முறைக்கு இவர்களும் ஆளாக்கப்பட்டனர். அடக்குமுறையை எதிர்த்து தொடர்ந்து போராடிய இவர்கள், இன விடுதலைக்காகப் போராடும் விடுதலைப்புலிகளுக்குத் தொடர்ந்து அனுதாபம் காட்டி வருவது கண்கூடு.

'ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ்' வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தது. அக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட ஏனைய ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்களும் ஆபிரிக்க தேசியக் காங்கிரசுக்கு ஆதரவு வழங்கி வந்துள்ளன.

அன்று ஆயுதம் ஏந்திப் போராடிய காங்கிரஸ் தொண்டர்கள் டாக்டர் நெல்சன் மண்டேலாவின் ஆட்சியில் தேசிய உளவுத் துறையில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அன்று எல்.ரி.ரி.ஈ.யின் ஆதரவாளர்களாகவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திடசங்கற்பம்

தென்னாபிரிக்காவில் பல தமிழ் அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. கலாசார-மத அமைப்புக்கள் என்ற பெயரில் இயங்கும் இவை புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றன. பெருவாரியான பணமும் புலிகள் இயக்கத்துக்காகச் சேகரிக்கப்பட்டு வருவதும் வெளிப்படை.

'நேட்டால் இந்தியன் காங்கிரஸ்' பொருளாளர் ஹசீம் சீதற் என்பவர், "நெல்சன் மண்டேலா, தனது போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்குக் கைமாறு செய்யத் திடசங்கற்பம் பூண்டுள்ளார். அவருடைய பட்டியலில் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் பெயரும் இருக்கிறது!" என்றார்.

அணிசாரா நாடுகளின் உச்சி மாநாடு தென் ஆபிரிக்காவின் டெர்பன் நகரில் தொடங்குவதற்கு முன்னதாக ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு விடுதலைப்புலிகள் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தனர். பூட்டான் தலை நகரான திம்புப் பேச்சுவார்த்தைகளின் முடிவுக்கேற்ப ஈழத் தமிழர் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வினை எட்டுவதற்கு சிறிலங்கா அரசைத் தூண்டுமாறு அன்னாரை புலிகள் இயக்கத்தினர் கோரியிருந்தனர்.

"டெர்பன் நகரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மிகப் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடைபெற்றது தெரிந்ததே" என்றும் 'சண்டே ரைம்ஸ்' தன் கட்டுரையில் தெரிவித்துள்ளது. ■

# மண்எண்ணெய் விநியோகத்தில் கட்டுப்பாடு!

## மன்னார் மாவட்டம் இருளில்!

(மன்னார் நிருபர்)

**ம**ன்னார் மாவட்டத்தில் தற்போது கடுமையான முறையில் அமுல்படுத்தப்பட்டு வரும் மண்எண்ணெய் விநியோகக் கட்டுப்பாடு காரணமாக இம் மாவட்டத்தின் பெரும் பகுதி இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தலைமன்னார், நானாட்டான், முசலி போன்ற பகுதிகளும், அதனை அண்டியுள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலும் வாழ்பவர்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்கு மண்எண்ணெய் கொண்டு செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி பகுதியில் வாழ்பவர்கள் இரவு வேளைகளில் விளக்கு வைக்க முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாண்டு டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ■

# வர்த்தகர் கடத்தல்

**வ**வுனியாவில் வைத்து வர்த்தகசங்க உபதலைவர் சண்முகராஜா என்பவர் புலிகளாலேயே கடத்திச் செல்லப்பட்டார்.

ஓட்டோ ஒன்றில் அவரைக் கடத்திச் சென்ற புலிகள் எச்சரித்துவிட்டு விடுதலை செய்தனர்.

வர்த்தகர் சங்கத்தினரை தம்மை வந்து சந்திக்குமாறு விடுத்த அறிவித்தலை அலட்சியம் செய்தது ஏன்? என்று கேட்டே எச்சரித்தனராம்.

பாதுகாப்பு நிறைந்த பகுதியான வவுனியா நகரில் இருந்து வர்த்தகரை புலிகள் கடத்திச் சென்றமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ■

# ஆலயம் சென்றோர் வீடியோவில்

## மயூராபதி ஆலயம் முன் நோட்டம்

**கொ**ழும்பு மயூராபதி ஆலயத்துக்கு சென்ற பக்தர்கள் வீடியோ கமராவால் படம் எடுக்கப்பட்டனர்.

18.09.98 வெள்ளிக்கிழமை மாலையே இச்சம்பவம் நடந்துள்ளது. தனியார் வீடியோ நிறுவனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திய சீருடையினரே படப்பிடிப்பை நடத்தச் சொன்னார்களாம்.

பக்தர்கள் அறியாத வகையில் வீடியோ கமராவில் படம் எடுக்கப்பட்டனர்.

இச்செயலானது தமிழ் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்திலும் குறுக்கிடுவது போன்றது என்று சமய ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். ■


படிப்பகம்

# ரூபராணிக்கு இலக்கியவாதிகள் புகழாரம்

## கண்டியில் நடந்த வெளியீட்டு விழா!

(கண்டி நிருபர்)

"தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியதால் தினமுரசு இன்று புகழ் பெற்ற பத்திரிகையாயிற்று." இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் கண்டியில் தெரிவித்தார்.

பிரபல எழுத்தாளர் ரூபராணி ஜோசப்பின் 'ஒரு வித்தியாசமான விளம்பரம்' (முரசில் வெளியான அவரது கதைகளின் தொகுப்பு) என்ற சிறுகதைத் தொகுதியின் நூல் வெளியீட்டு விழா கண்டி சிட்டி மிஷன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. 'துரைவி' வெளியீடாக வந்த இந்த நூலை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இவ் விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

கண்டி சிட்டி மிஷன் மண்டபம் இவ்வாறான விழாக்களுக்கு முக்கிய தலமாக இருந்தபோதிலும் இதற்கு முன்னர் எப்பொழுதுமே கண்டிராதமட்டில் மண்டபம் இலக்கிய கர்த்தாக்கள், ஆர்வலர்கள், அபிமானிகள், முரசு வாசகர்கள், அறிஞர் பெருமக்கள் பலராலும் நிரம்பி வழிந்திருந்தமை முக்கியதோர் நிகழ்ச்சியாகும்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் எஸ். வன்னியகுலம் தலைமையில் மிகவும் கச்சிதமாக இந்த விழா நடந்தேறியது. மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

'துரைவி' வெளியீட்டக நிருவாகி துரை விசுவநாதன், மத்திய மாகாண இந்து மாமன்றத் தலைவர் அ.துரைசாமிப்பிள்ளை உட்பட பல வர்த்தகப் பிரமுகர்களும் இங்கு கூடியிருந்தனர்.

துரை மனோகரன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

"ஒரு வித்தியாசமான விளம்பர கதைத் தொகுப்பில் சிற்றிலக்கியம், நாடகம், நாவல் அனைத்தும் நெஞ்சைத் தொடுகின்ற தன்மையில் இக்கதைகள் அமைவதால் தமிழ்ச் சிறுகதைப் போக்கில் எதிர்காலத்தில் சர்ச்சை ஏற்படும் அளவுக்கு இதன் மகத்துவம் வெளிப்படும்."

கருத்துரை வழங்கிய அசோகா வித்தியாலய அதிபர் செ. நடராஜா பேசுகையில் "ரூபராணி ஜோசப் சகலகலா வல்லி. அவரை 'கர்ப்பூரம்' எனவும் வர்ணிக்கலாம். அவரது ஆற்றல், படைப்பு அனைத்துமே மலையக மக்களுக்கு மிக்க பயன்பட்டன. அவரது இலக்கிய ஆர்வம் பெரிது. எனவே தான் அவரது நூலின் வெளியீட்டு விழாவுக்கு இவ்வளவு பெருந்தொகை மக்கள் திரண்டுள்ளனர். இதனை அச்சிட்டு வெளியிட்ட துரை விசுவநாதன் பெருமைக்குரியவர்," என்றார்.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.வை.எம். முஸ்லிம் பேசுகையில்; "கதாசிரியர் ரூபராணி செந்தமிழ்ப் போதகர். அவரது படைப்புகள் யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் மலையகத்தையும் இணைக்கவல்லன. மலையகத்தில் இலக்கியம் படைக்க ஆரோக்கியமான சூழலை அவரே பயன் படுத்திக் கொண்டார்," என்று கூறினார்.

இவ்விழாவில் செல்வி ரூபராணி ஜோசப்பின் இலக்கியப் பணியின் சிறப்பு குறித்து, ரூபராணியை கண்டி பொது நூலகர் திருமதி பீ.கே. முவன்தெனிய பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். வர்த்தகப் பிரமுகர்கள் உட்பட சாதாரண வாசகர்கள்கூட விலை கொடுத்து நூலின் பிரதிகளை மண்டபத்திலேயே வாங்கிச் சிறப்பித்தனர்.

கதாசிரியர் ரூபராணி, கவிஞர் இக்பால் அலி ஆகியோர் வெளியீட்டு விழாவைச் சிறப்பித்தோர் அனைவரையும் வாழ்த்தி நன்றி தெரிவித்தனர்.



# இடம் பெயரும் மக்கள்

வன்னியில் இடம்பெயர்வுகள் தொடர்கின்றன. போர் தன் இரக்கமற்ற கரங்களால் வாழ்க்கையைப் புரட்டிப்போடுகிறது. ஆனாலும் வன்னி மக்கள் சோதனைகளை எதிர்கொண்டு வாழப் பழகிவிட்டனர். எதிர் நீச்சல் போடக் கற்றுக்கொண்டுள்ளனர். அவர்களது நம்பிக்கை மகத்தானது.

(படப்பிடிப்பு-கு.பத்மன்)

# நிரந்தர நியமனத்தில் பெரும் பாரபட்சம்!

## திட்டமிட்ட நடவடிக்கை என்று விசனம்!

பொதுசன ஐக்கிய முன்னணி அரசால் நாடெங்கும் நியமிக்கப்பட்டுள்ள சுபீட்சத் திட்ட (சமுர்த்தி) ஊக்குவிப்பாளர்கள் மற்றும் விவசாய ஊக்குவிப்பாளர்கள் ஆகியோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு கடந்த ஜூன் மாதம் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன.

இது விடயமாக இலங்கைச் சுபீட்ச அதிகாரசபை அனுப்பியிருந்த சுற்று நிருபத்தில், அனுமதிக்கப்பட்ட தொகைக்கேற்ப சுபீட்சத் திட்டப் பணியாளர்களுக்கு முறையான நியமனங்களை அந்தந்தப் பிரதேச செயலாளருக்கூடாக விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் கிடைத்துள்ள தகவலின்படி சுபீட்சத் திட்டத்தில் 3 வருட சேவையினைப் பூர்த்தி செய்தவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று அறியப்படுகிறது. இதற்கமைய இம்மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் பணியிலீடுபடும் பெரும்பான்மை இனச் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கே நிரந்தர நியமனங்கள் கிடைக்கவிருக்கின்றன.

அபிவிருத்தி அலுவலர்களாக பத்தாயிரம் பேரும், சுபீட்ச வங்கி அலுவலர்களாக 1500 பேரும், கமத்தொழில் விரிவாக்க அலுவலர்களாக 1100 பேரும், கிராம சேவை அலுவலர்களாக 1000 பேரும் நியமிக்கப்படவுள்ளார்கள்.

மொத்தம் 13600 பேர் நிரந்தர நியமனம் பெறுகிறார்கள். வடக்கு-கிழக்கிலுள்ள எவரும் இந்த நிரந்தர நியமனத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்று அறியப்படுகிறது.

### தகுதியில்லை

3 வருட சேவையில் சுபீட்சத் திட்டப் பணியாளர்களாக இருப்பவர்களுக்கே நிரந்தர நியமனம் என்ற நிபந்தனையின் மூலம் இயல்பாகவே வடக்கு-கிழக்கு மற்றும் நாட்டின் இதர தமிழ்ப் பிரதேசங்களிலும் பணியிலீடுபடும் சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு இந் நிரந்தர நியமனம் பெறத் தகுதியில்லையென்பது மறைமுகமாக விளங்குகிறது.

ஏனெனில் நாட்டின் பெரும்பான்மை இனப் பகுதிகளில் சுபீட்ச ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு சுமார் ஒரு வருடமும் அதற்குக் கணிசமான அளவு காலமும் சென்ற பின்னரே தமிழ்ப் பிரதேசங்களிலும் நியமனங்கள் இடம்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது ஒரு புறமிருக்க, வடக்கு-கிழக்கு உட்பட வேறு தமிழ்ப் பகுதிகளில் இன்னமும் சுபீட்சத்(சமுர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படாத பல பிரதேசச் செயலாளர் பிரிவுகள் உள்ளன. நிரந்தர நியமனத்தில் திட்டமிட்ட பாரபட்சத்தை நீக்க தமிழ் பேசும் அரசியல்வாதிகள் கவனமெடுத்து அழுத்தங்களைக் கொடுப்பார்களா?


**உடன் விற்பனைக்கு** புத்தம்புதிய கொத்ரேஜ் தமிழ் எலெக்ரோனிக் ஸ்கிரிப்ரா தட்டச்சு இயந்திரம் (Godrej Tamil Electronic Typewriter. model- Scripta Single Line with 16 KB memory) மற்றும் ஒலிம்பியா எலெக்ரோனிக் தட்டச்சு இயந்திரம் (Olympia- Compact 5DM) இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தொலைபேசி என்: 826875

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

நன்மை பயப்பவை மட்டுமே செய்துதரப்படும். வியாழன் விடுமுறை

தரமோ உயர்தரம் ! என்றும் நிரந்தரம் !

அதுவே

நியூகலா வின்

கண்ணைக் கவரும் வண்ணங்களில்

கலையழகு மிளிரும்

**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

தயாராகிவிட்டன.

**இதோ விலைப்பட்டியல்**

| Nos. | Description | Size | Des | 100 |
|---|---|---|---|---|
| 1 | இருமடிப்பு – சுவாமிப் படம் | 3 1/2 x 6 | 14 | 350/= |
| 101 | இருமடிப்பு – பூக்கள் | 3 1/2 x 6 | 14 | 350/= |
| 20,6 | சுவாமி படங்கள் | 7 1/2 x 5 | 6 | 1050/= |
| 15,5 | சுவாமி படங்கள் – கோல் பொமிலிங். எம்போஸ் | 7 1/2 x 5 | 6 | 1150/= |
| 18 | இருமடிப்பு – சுவாமிப் படம் | 8 x 6 | 4 | 1100/= |
| 23, 22 | சினிமா ஜோடிப் படங்கள் | 7 1/2 x 5 | 6 | 1050/= |
| 7 | சினிமாப் படம் – எம்போஸ் | 7 1/2 x 5 | 6 | 1150/= |
| 11 | சினிமாப் படங்கள் | 7 1/2 x 5 | 6 | 1050/= |
| 07 | பூக்கள் – எம்போஸ் | 7 1/2 x 5 | 8 | 1050/= |
| 15 | பூக்கள் – எம்போஸ் | 8 x 6 | 3 | 1100/= |
| 17,9 | பெரிய சுவாமி படங்கள் | 10 x 8 | 5 | 1350/= |
| 9 | பெரிய பூக்கள் | 10 x 8 | 2 | 1150/= |
| 25,305 | பூக்கள் – எம்போஸ் | 6 1/2 x 4 | 9 | 650/= |
| 20 | பூக்கள் – எம்போஸ் | 7 1/2 x 5 | 6 | 1050/= |
| 10 | சினிமாப் படங்கள் | 7 x 9 | 4 | 1250/= |
| 14 | பூக்கள் – எம்போஸ் | 8 1/2 x 6 | 2 | 1150/= |
| 2 | சினிமாப் படங்கள் | 3 1/2 x 6 | 9 | 350/= |
| 3 | சினிமாப் படங்கள் | 61/2x41/2 | 9 | 600/= |
| 4 | சுவாமிப் படங்கள் | 61/2x41/2 | 9 | 650/= |
| 16 | தீபவிளக்கு – எம்போஸ் | 7 1/2 x 5 | 6 | 1050/= |
| 25 | தீபவிளக்கு ஏற்றல் – சினிமா நடிகை | 10 x 8 | 4 | 1350/= |
| 11 | தீபவிளக்கு – எம்போஸ் கோல் பொமிலிங் | 7 1/2 x 5 | 4 | 1150/= |
| | அஞ்சல் அட்டைகள் | | 28 | 50/= |

நியூகலா கிரியேசன்ஸ்

192, செட்டியார் தெரு கொழும்பு 11.

தொலைபேசி - 332465

AFTER A/L WHAT NEXT ?

COMPUTER DIPLOMA & CERTIFICATE COURSES

கணனிக் கல்விச் சேவையில் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி A/L மாணவர்க்கு அனைத்துப் பாடநெறிகளிலும் 20% கட்டணக் கழிவை வழங்குகின்றோம்.

COMPUTER COURSES

Diploma in Microsoft Office '97
(Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Desktop Publishing
(Through Windows 95) காலம் 3 மாதம்
Dip. in Computer Programming
காலம் 4 மாதம்
Adv.Dip.in Information Technology
(Through Windows 98) காலம் 5 மாதம்
Visual Basic Programming
(Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Computer Studies
Group & Individual Classes

ASIAN COMPUTER SYSTEMS

250 First Floor,
George R. De. Silva Mw,
Colombo 13.
Tel: 075-338726, 451090

SHAKTHI INSTITUTE
No: 333, Galle Road,
Colombo 4.
Tel: 587099, 078-49234

விளம்பரப் பகுதி

**அஸ்மா நோய்க்கு வைத்தியம்**

தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாயசசல, மூச்சுத்தட்டல், இருமல், சளி, தும்மல், மூக்கடைப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல.25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசையில் (மவுண்ட் லேவினியா) (கொழும்பு) தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரையும் சந்திக்கலாம். தூர இடத்தில் உள்ளவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படுவர். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலை பேசி மூலம் பதிவு செய்து பார்வையிடப்படும் நாளையும். நேரத்தையும் பெற்று வரவும்.

**காண்டம்**

முனிவர் அருளி ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

**மலையாள மாந்திரீகம்**



மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அடர்கள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13.
Tel: 342463, 344831, 431137
Fax: 0094 1 342464

School of Home Science
CHINESE COOKERY, CAKE MIXING, CAKE ICING, PASTRY+ BREAD MAKING & FABRIC PAINTING
Classes Conducted.
By Diploma Holder.
Zulfikah Hameed
Tel: 683005

மிகப் பெரிய அளவிலான

**ஜேர்மன்-தமிழ் அகராதி**

50 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்களுடன் இலக்கண விளக்கம் மற்றும் புதிய அணுகு முறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.

உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்யுங்கள்.

தொடர்பு கொள்ளவும்.
K.Chandrasegaran
(Swiss) 01/461 57 49
V.Sivanesarajah
(Swiss) 01/492 02 61


# 7வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. மாணிக்கம் பத்மநாதன்

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் இருப்பிடமாய் அன்பின் குலவிளக்காய் எமது குடும்ப தலைவராய், ஒப்பற்ற துணைவராய் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட பாசமிகு தலைவரே, அன்பான அப்பாவே, பாசமான மாமாவே, எங்களை உங்கள் அன்பான நினைவுகள் என்றும் விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்-

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:- தனம் (த.பத்மநாதன்)
மொன்றியல், கனடா,
(514) 948-2768

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

யாழ் மாநகர சபை குண்டுவெடிப்புத் தொடர்பாக மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் துருவப்பட்டனர். இறுதியாக மாநகர முதல்வரின் பொதுசன தொடர்பு அதிகாரி உட்பட இரண்டு காவலாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அரச தொலைக்காட்சி மாநகர சபையின் முக்கிய அதிகாரிமீதும் சந்தேகம் இருப்பதாக செய்தி வெளியிட்டது.

முக்கிய அதிகாரி என்று கூறப்பட்டவர் மாநகர ஆணையாளர் பாலசிங்கம். தற்போது வெளிநாடொன்றுக்கு பயணம் சென்றுள்ளார் ஆணையாளர் பாலசிங்கம்.

பாலசிங்கம் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்றும், மாநகரசபையில் புலிகளின் ஆதரவாளர்களுக்கு வேலை போட்டுக் கொடுத்தவர் என்றும் சிலர் கல்லுக்குத்தினராம்.

அதனால் பாலசிங்கம்மீது பாதுகாப்புத் தரப்பு சந்தேகப்பட்டதுடன் அவரது குடும்பத்தினரையும் அழைத்து விசாரித்தனர்.

கள் பல போடப்பட்டதாம்.

அவரையும் விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்ல திட்ட மிட்டுவிட்டு, கடைசி நேரத்தில் அவரை திருப்பி அனுப்பி விட்டனராம்.

மாநகரசபை உயரதிகாரிகளோ, காவலாளிகளோ நிச்சயமாக குண்டைப் பொருத்தியிருக்கப்போவதில்லை. ஆனால் மாநகர சபைக்குள்தான் விசாரணையாளர்கள் சுற்றிச் சுற்றி துருவியிருக்கின்றனர்.

இதற்கிடையே மாநகர சபைக்கு பாதுகாப்பு போதாது. எதிர்கால முதல்வருக்கு அதிக பாதுகாப்பு தேவை என்று யாழ் மாநகர பிரதி முதல்வர் கோரியுள்ளார்.

பாதுகாப்பு இல்லாமல் இருந்ததால்தான் சரோஜினி கொல்லப்பட்டார் என்று நினைத்துத்தான், பலத்த பாதுகாப்பு வியூகத்திற்குள் தன்னை திணித்துக் கொண்டார் சிவபாலன்.

வேண்டுமானால் யாழ் மாநகர சபைக் கூட்டங்களை படை முகாம்களுக்குள் நடத்தலாம். மாநகர முதல்வர் அங்கேயே தங்கலாம். அதுதான் ஓரளவு உத்தரவாதம். ஓரளவு என்பதை அடிக்கோடிடவும்.

ரத்வத்தையின் தந்திரம்.

எதிரி தாக்குதல் யுத்தத்தில் ஈடுபடாமல் இருக்க, அவனை தற்காப்பு நிலைக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற உத்தியை ஜெனரல் ரத்வத்தை பிரயோகிக்கிறார்.

சென்ற மழைக்காலத்திலும் அதனையே படைத்தரப்பு பிரயோகித்தது. ஆனாலும் புலிகள் தற்காப்பில் ஈடுபட்டுக்கொண்டே முன்னேறி தாக்கும் அணிகளையும் அடிக்கடி படையினரை நோக்கி அனுப்பிக் கொண்டிருந்தனர்.

சென்ற மழைக் காலத்தில் படைத்தரப்பு வன்னியில் நிலைகொண்டிருந்த தரைப் பகுதியைவிட, தற்போது நிலைகொண்டுள்ள பகுதி கூடுதலான சதுப்பு நிலப் பகுதியாகும். இனி மேலே போக சதுப்புத் தன்மை அதிகரிக்கும்.

பதினாறு மாதங்களை கடந்துவிட்ட 'ஜயசிக்குறுய்' அடுத்த மூன்று மாத காலத்திற்குள் பெரிதாக எதையும் சாதித்துவிடும் என்று கூறுவதற்கில்லை.

களநிலவரத்தை காலநிலவரம் தீர்மானிக்கப்போகும் மழைக்கால மாதங்கள் 'ஜயசிக்குறுய்' படையினருக்கு பெரும் சவால்தான்.

செய்து முடித்தும் விட்டனர்.

சில நாட்களுக்கு முன்னர் அந்தப் பொலிஸ் அதிகாரி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் வெறும் ஊகத்தின் அடிப்படையிலேயே தமிழர்களை கைது செய்துவிடலாம் என்று பாதுகாப்பு தரப்பினர் நினைக்கின்றனர்.

ஒரு பொலிஸ் அதிகாரிக்கே இந்நிலை என்றால், சாதாரண தமிழ் மக்கள் நிலை என்ன?

விட்டால் தப்பிச் சென்று தலைமறைவாகி விடுவார்களோ என்ற சந்தேகத்திற்கே இடமில்லாதவர்களைக்கூட முதலில் கைது செய்துவிட்டுத்தான் பின்னர் ஆதாரம் தேடுகிறார்கள்.

சமீபகாலத்தில் கைதாகி விடுதலையான பத்திரிகையாளர்கள், உயரதிகாரிகள் போன்ற பலர் விடயத்தில் பொறுப்பின்றியே நடந்துள்ளனர் பாதுகாப்பு தரப்பினர்.

பொலிஸ் அதிகாரி ஜேசுதாசன் 41 வருட காலமாக பொலிஸ் சேவையில் இருந்திருக்கிறார். அப்படியான ஒருவரை எவ்வித ஆதாரமும் இல்லாமல் நான்கு மாதங்கள் 6ம் மாடியில் தடுத்து வைத்து உளவியல்ரீதியில் துன்புறுத்தி

# பதினாறு மாத 'ஜயசிக்குறுய்'

விசாரணையின்போது பாலசிங்கத்தின் மனைவி கூறிய ஒரு தகவலை வைத்துத்தான் காவலாளிகள்மீது சந்தேகம் ஏற்பட்டு கைது நடந்ததாம்.

மாநகர சபையை பூட்டிவிட்டு தினமும் ஆணையாளர் பாலசிங்கம் வீட்டில் சாவிக் கொத்தை ஒப்படைப்பார் காவலாளி.

10.09.98 அன்று இரவு இரண்டு சாவிக்கொத்துக்கள்தான் தம்மிடம் தரப்பட்டதாக ஆணையாளர் பாலசிங்கத்தின் மனைவி கூறியதாகத் தெரிகிறது. அதனையடுத்தே காவலாளிகள் இருவரும் கைதாகியதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இத்தகவல்கள் காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாகவும் இருக்கலாம்.

ஒரு திருட்டு நடந்தால்கூட காவலாளி மீதுதான் முதலில் சந்தேகம் திரும்பும். எனவே மாநகர சபையில் குண்டுவெடித்தால் தம்மீதுதான் சந்தேகம் வரும் என்பது காவலாளிகள் அறியாதது அல்ல.

எனவே குறிப்பிட்ட சம்பவத்தில் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் காரியம் முடிந்ததும் யாழ் நகரைவிட்டு நழுவியிருக்கலாம். புலிகள் வன்னிக்கு அழைத்துச் சென்றிருப்பர்.

சாவிக்கொத்துக் கதை உண்மையாக இருந்தால்கூட, அது தற்செயலாகக்கூட நடந்திருக்கலாம். உண்மையிலேயே குண்டு பொருத்துவதில் சம்பந்தம் என்றால், பிடி கொடுக்கும்விதமாக நடந்து கொண்டிருக்க மாட்டார். பொருத்தி முடித்துவிட்டு மூன்று சாவிக்கொத்துக்களையும் கொடுத்துவிட்டுப் போயிருக்கலாமே.

சாவிக்கொத்தில் உள்ள குறிப்பிட்ட சாவிக்கு முன்கூட்டியே மாற்றுச் சாவி ஒன்று செய்து வைப்பதுகூட கடினமல்ல.

உண்மையில் காவலாளிக்கு சம்பந்தம் இருந்தால்தான் மாட்டிக்கொள்ளத்தக்க பிடிகளை கொடுக்காமலிப்பதில்தான் அக்கறை காட்டியிருப்பார்.

எனவே, சாவிக்கொத்து விவகாரம் தற்செயலானது என்றே கருதவேண்டியுள்ளது. எப்படியோ விசாரணையில் முன்னேற்றம் என்று காண்பிக்கும் தேவை இருக்கிறது.

யாழ் மாநகரசபைக்குள்ளேயே சில மொட்டைக் கடித ஆசாமிகள் இருக்கிறார்கள். அவர்கள்தான் 'அவர் புலி, இவர் புலி' என்று தங்களுக்கு பிடிக்காதவர்களை மாட்டிவிடும் தீவிரத்தில் உள்ளனராம்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வாராந்தம் கட்டுரை எழுதும் ஒருவர் யாழ் மாநகரசபை அதிகாரியாக இருக்கிறார். அவர் தொடர்பாகவும் மொட்டைக் கடிதங்

—◆◆—

'ஜயசிக்குறுய்' விரைவில் மூர்க்கம் கொள்ளும்போல் தோன்றுகிறது. நீண்ட ஒய்வு என்பது பாரிய ஆயத்தங்களுக்கான கால அவகாசமாக இருக்கலாம்.

வரவேண்டியவை வருவதற்காக காத்திருந்திருக்கலாம். இனி ஆரம்பமாகும் இடி மழை என்பது கிரக நிலைகள், நகர்வுகள் பார்த்து கூறும் ஜோசியம்.

செயற்கை மழையும், இயற்கை மழையும் போட்டி போடப்போகின்றன.

வன்னியில் நவம்பர் மாதத்தில் பேய் மழை. ஆனால் எதிர்வரும் அக்டோபர் மாதமே மழை எட்டிப்பார்க்கத் தொடங்கிவிடும்.

மாங்குளமும் அதனையண்டிய பகுதிகளும் சதுப்பு நிலப்பகுதிகள் என்பது முக்கியமான விஷயம்.

சின்ன மழை பெய்தால்கூட சதுப்பு நிலத்தில் நடப்பதே கஷ்டமான காரியம். அடிக்கப் போவது அடைமழை. கனரக வாகனங்கள்,



டாங்கிகள் நகர்வது எப்படி?

பெரும் சமர் ஒன்றுக்காகவே களமுனையில் நீண்ட ஒய்வை படைகள் எடுத்துக் கொண்டுள்ளன.

எனவே அடுத்து பெரும் சமர் வெடிக்கலாம் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால், வெற்றிக்கான அரசின் அவசரத்தை அச் சமரும் நிறைவு செய்யப்போவதில்லை.

டிசம்பருக்குள் சமரை இலக்கு நோக்கி நடத்தி முடித்துவிட்டு, ஜனவரியில் தேர்தலை நடத்தலாம். அது மாகாணசபைத் தேர்தலா? ஜனாதிபதித் தேர்தலா என்பதை அப்போது தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதுதான் அரசின் எண்ணம்.

ஆகஸ்ட்மாதம் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

டிசம்பருக்குள் இலக்கை எட்டுவது என்றும் காலவரையறை குறிக்கப்பட்டது.

அந்தக் காலவரையறையில் இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் இருப்பது மூன்றே மூன்று மாதங்கள்.

ஆனால் ஒக்டோபர் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் மழை ஒய்வதற்கு இரண்டரை மாதம் பிடிக்கும். எனவே இன்னமும் 20 நாட்களுக்குள் இலக்கை எட்டினால்தான் உண்டு. அது சாத்தியமில்லாத ஒன்று.

மழைக்காலத்திலும் முகாம்களுக்குள் இருக்காமல் யுத்தம் புரிந்தால்தான் புலிகள் தேடிவந்து தாக்கமாட்டார்கள் என்பது ஜெனரல்

முன்னேறுவது ஒருபுறம் இருக்க, நிலைகொண்டுள்ள பகுதிகளில் தற்காப்பை பேணுவதிலும் பெரும் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

எனவே, ஜனவரியில் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு கூறிவருவது ஒரு குத்துமதிப்பான காலவரையறை மட்டுமே.

கடன் வாங்கிவிட்டு தவணை சொல்லுவது போன்றதே இதுவும். கொடுக்க முடியாது என்று தெரிந்தும் சிலர் தவணை சொல்லுவார்கள். குறிப்பிட்ட தவணைவரை கடன் கொடுத்தவரின் தொல்லை இல்லாமல் இருக்கலாம் எனபதற்காக மட்டுமே கூறப்படும் தவணை அது.

அப்படித்தான் தேர்தல் தொடர்பான அரசின் கால வரையறையும். தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான பிரசாரங்களை ஜனவரிவரையாவது நிறுத்தச் செய்யத்தான் இந்தக் காலவரையறை. பின்னர் ஜனவரியில் மீண்டும் காலத்தை நீடிக்க காரணம் கிடைக்காமலா போகப்போகிறது என்று ஒரு நம்பிக்கை.

—◆◆—

கொழும்பு மருதானையில் கரும்புலி வாகனம் ஒன்று தற்செயலாக வெடித்தது.

அந்தக் குண்டுவெடிப்பு தொடர்பாக தமிழரான போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவரை கைது செய்து நான்கு மாதங்களாக வைத்திருந்தனர்.

அவர் புலிகளுக்கு உதவியதாகவும் பிரசாரம்

யுள்ளனர்.

தமிழ் அதிகாரிகளுக்கு, அவர்களது உழைப்புக்கு இந்த நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்கள் வழங்கும் வெகுமதிகள் இவ்வாறாக இருக்கையில், அவர்களிடம் உண்மையான விசுவாசத்தை எப்படி எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய அத்துமீறல்களை குறிப்பிட்ட தமிழ் அதிகாரிகளது சக சிங்கள அதிகாரிகள் கண்டிக்க முன்வருவதில்லை. அதுபோல தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைதானால் சிங்களப் பத்திரிகையாளர்களே அவர்களை புலிகள் என்று முத்திரை குத்தவும் முயற்சிக்கிறார்கள்.

இத்தகைய போக்குகள் ஒரு உண்மையை பிரதிபலிக்கின்றன. புலிகளைப் பயங்கரவாதிகள் என்று ஐ.நா.சபைவரை சென்று ஜனாதிபதி கூறினாலும்கூட, அவர் மனதில் புலிகளின் போராட்டம் தமிழர்களுக்கான போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டம் என்ற நினைப்புத்தான் இருக்கிறது.

அதனால்தான் தமிழர்களில் சாதாரண மக்கள், பூசகர்கள், மதபோதகர்கள், வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் புலிகளை ஆதரிக்காமல் இருந்தால்தான் ஆச்சரியம், ஆதரிப்பது சாதாரணம் என்பது போன்ற அணுகுமுறையை அரசும், அதன் பாதுகாப்பு தரப்பும் கையாளுகின்றனவா? என்று சந்தேகம் வருகிறது.

•••

# இரத்தினபுரியில் ஒரு வில்லன்

நாரதர்

இரத்தினபுரியில் மலையகத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது இனவாதத் தாக்குதல் என்பதில் துளியும் சந்தேகம் கிடையாது.

மலையக அரசியல்வாதிகளுக்கு அந்த உண்மையைக் கூற நாகூசுவது ஏன்? என்றுதான் புரியவில்லை.

மலையகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தமது அரசியல் இலாப வேட்டைகளுக்கு வேட்டு வைத்துவிடுமோ என்று கவலையில் மூழ்கியுள்ளனர் மலையக அரசியல்வாதிகள்.

இந்த நேரத்தில் இனவாத தாக்குதலை பெரிதுபடுத்தினால் நிலமை தமது கையை மீறிப் போகத்தான் வழிவகுக்கும் என்று கருதுகின்றனர். மௌனம் அனுஷ்டித்ததின் பின்னணி அதுதான்.

இரத்தினபுரியில் தலை வெட்டப்பட்டவர் பெரும்பான்மை இனத்தவர். ஆனால் பெரும்பான்மை இனத்தவர் மத்தியில்கூட அவர்மீது பயம் இருந்ததே தவிர, மரியாதை இருக்கவில்லை.

அந்த நபர் பற்றி கிடைத்துள்ள தகவல்கள் அதிர்ச்சி தருகின்றன. தமிழ் சினிமா வில்லன் மாதிரி நடமாடியிருக்கிறார் அந்த ஆசாமி.

தோட்டத்தில் யாருக்காயினும் திருமணம் நடந்தால், மணப்பெண் முதலிரவை கணவனுடன் கழிக்க முடியாது. அந்த ஆசாமியிடம் அனுப்பிவைக்க வேண்டும். இல்லாவிட்டால் உயிர்வாழ முடியாது.

சமீபத்தில் சிங்கள இளம் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியதாகவும் புகார் இருக்கிறது.

எப்போதுமே மெய்ப்பாதுகாவலர் சகிதம் உலாவரும் அந்த ஆசாமிக்கு பாதிக்கப்பட்ட சிலர் குறிவைத்தனர்.

குறி தப்பவில்லை. தலை சீவப்பட்டது. ஆசாமியும் அவரது மெய்க்காவலரும் பலியானார்கள்.

தலையைச் சீவியவர்கள் தமிழர்கள் என்று தெரிந்தும்கூட சிங்கள மக்கள் அலட்டிக்கொள்ளவில்லை. தொல்லை தீர்ந்தது என்றுதான் நினைத்தனராம்.

மரணச் சடங்கில்தான் இனவாத தாக்குதலுக்கான பொறி தூவப்பட்டது.

மாண்ட ஆசாமி ஆளும் கட்சியின் அனுதாபி என்பதுதான் முக்கியமான விஷயம்.

அதனால் மரணச் சடங்கில் ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பிரதி சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சியும் மரணச் சடங்கில் கலந்து கொண்டார்.

மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களிடம் 'என்ன பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?' என்று குறிப்பிட்ட முக்கியஸ்தர்களே உணர்ச்சிகரமாக கேள்வி எழுப்பியதாகவும், அதனையடுத்து, மரணச் சடங்குக்கு வந்தோர் சூடானதாகவும் கூறப்படுகிறது.

அதன்பின்னரே தனிப்பட்ட பகை இனப்பகையாக விசுவரூபம் எடுத்தது. தாக்குதலின் பின்னணியில் நிற்பது யார் என்பது தெரிந்துதான் பொலிசாரும் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றிருக்கின்றனர்.

முன்னரே குறிப்பிட்ட ஆசாமிமீது பொலிசார் நடவடிக்கை எடுக்கத் தவறியதின் காரணமும் அவரது பின்பலத்தில் உள்ள பயம்தானாம்.

மலையக ஆளும் தரப்பு அரசியல்வாதி ஒருவர் பின்னணியில் நின்றதாக மட்டுமே கூறும் மலையக தமிழ் அரசியல்வாதிகள், அவரது பெயரை மட்டும் கூறுவதற்கு முன்வரவில்லை.

மக்களைவிட மந்திரியின் நட்பு அவர்களுக்கு முக்கியம்.

●



## அதிரடி அய்யாத்துரை

**வவுனியாவில் கழகம்** பொது வரிவிதிப்பை தளர்த்திவிட்டு குறிப்பிட்ட சிலவற்றுக்கு மட்டும் வரிபோட்டுள்ளது. கழக வரியை சுருக்கமாக பி.எஸ்.ரி. என்று அழைக்கலாம். கவர்மெண்ட் ஜி.எஸ்.ரி. வாங்குகிறது. கழகம் பி.எஸ்.ரி. வாங்குகிறது. அது என்ன பி.எஸ்.ரி? புளொட் சேர்வில் ராக்ஸ் (புளொட் சேவை வரி).

**கழகத்தினரால்** வவுனியாவில் இருந்து விரட்டப்பட்டு வன்னிக்கு சென்ற யாழ் இளைஞர் ஒருவர் தன் நண்பருக்கு கடிதம் போட்டிருக்கிறார். "இங்கு சந்தேகத்தில் யாரும் எங்களை முறைப்பதில்லை. மரியாதை இல்லாமல் நடத்துவதில்லை. பயமும் இல்லை. செத்தாலும் இங்கிருந்து சாகலாம்!"

**உணர்ச்சி வேகத்தில்** நாவடக்கம் மறப்பதும், பின்னர் தாம் சொன்னதை மறுப்பதும் கூட்டான கட்சியினரின் பாணிதான். அதிலும் சங்கதியார் கொஞ்சம் கூடுதலாகவே உணர்ச்சிவசப்படுகிறவர். சமீபத்திலும் துள்ளியடித்துவிட்டு மறுப்பறிக்கையை கிள்ளி விட்டிருக்கிறார்.

**யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து** பதவியை நிரப்புவது ஓடும் இரயிலின் முன்னால் பிள்ளையைத் தூக்கி எறிவது போன்றது. கிழக்கின் தனித்துவத் தலைவர் விடுத்த அறிக்கை அம்சமாக இருந்தது. கூட்டான கட்சியினர்தான் முகம் சுளித்தவையாம்!

**தலைநகரில் கிரிக்கெட்** வீரருக்கு பாராட்டு விழா. விசில் அடித்தனர் இரசிகர்கள். "இங்கு விசில் அடிக்கவேண்டாம். மதத்தோடு தொடர்புடைய மண்டபம் இது!" என்று அறிவுரை கூறப்பட்டதாம். அதன்பின்னர் கேட்ட சத்தத்தை விசில் என்று சாதாரணமாகக் கூறக்கூடாது. விசில்மழை என்றுதான் சொல்லவேண்டும். விழா முடியும்வரை தொடர்ந்தது. கிரிக்கெட் என்பதே விளையாட்டு. பொழுது போகும் ஜாலி விளையாட்டு. அந்த விளையாட்டு வீரருக்கு விழா என்றால் விசில் வரும்தானே? அதை உணர்ந்து வேறு இடத்தில் வைத்திருக்கலாமல்லோ. அங்கு வைப்பானேன்? அறிவுரை சொல்வானேன்? பாராட்டப்பட்டவர் நன்றிகூட சொல்லாததும் சிலருக்கு மனவருத்தமாம்.

**இங்கிலாந்துக்கு** வெள்ளிப் பதக்கம் எடுத்துக்கொடுத்த வீராங்கனை செல்வகௌரி. யாழ்ப்பாணம் சண்டிக்குளியைச் சேர்ந்தவர். சண்டிக்குளி மகளிர் கல்லூரியில் படித்தவர். ஆனால் இலங்கைத் தமிழ்ப் பெண் இங்கிலாந்துக்கு வெள்ளி பெற்றுக் கொடுத்திருக்கிறார். 38 வயதான செல்வகௌரிக்கு யாழ்ப்பாணத்தில் அந்தக்கால செல்லப்பெயர் 'ஜெட்'. திசைவீரசிங்கத்தின் பின்னர் தடகளப் போட்டியில் சாதனை படைத்த தமிழர் இவர்தான்.

**சண்டிக்குளி மகளிர்** கல்லூரியில் படித்த பெண்ணின் சாதனை நினைவுக்கு வரும்போது, கிருஷாந்தி படித்ததும் சண்டிக்குளியில்தான் என்பதும் வேதனையுடன் நினைவுக்கு வருகுதல்லோ! செல்வகௌரிகள் வெளிநாடு போனதிலும் ஒரு நியாயம் இருக்குதல்லோ! போன இடத்திற்கு புகழ் சேர்க்கிறார்கள். மேலதிகமாக ஒரு தகவல் கூறவோ? இன்றைய கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஐந்தாம் வகுப்புவரை படித்ததும் சண்டிக்குளி மகளிர் கல்லூரியில்தான். ஐந்தாம் வகுப்புவரை கலந்து படிக்க அப்போது அனுமதி இருந்ததாம்.

**தமிழ்க் கட்சிப்** பிரமுகர் ஒருவர் தன் நண்பரிடம் கூறினாராம்: "அப்பாடா இனி செம்மணிக்கதை இருக்காது. குண்டுவெடிப்பு வந்து காப்பற்றிப் போட்டுது!" இதுதான் பொதுநலம்.

**பச்சைக்கட்சி** மாநாட்டில் போய் அறிக்கை வாசித்தது ஒரு தமிழ்க்கட்சி. அறிக்கை அதிகாரத்தரப்புக்கு குளிர்ச்சியானதாம். அதனால் மறக்காமல் அதிகாரத்தரப்பாருக்கும் அனுப்பிவைத்ததோடு, ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டதாம். எப்படியெல்லாமோ குறிப்பிட்ட கட்சி ஆடிப்பார்க்கிறது. ஆனால் அதிகாரத்தரப்பார் நடத்தும் கூட்டங்களுக்கு அக்கட்சியை அழைப்பதே இல்லையாம்!

**யாழில் இளம்** குடும்பஸ்தர் ஒருவர் சீருடையினரால் பலியானார். ஜனநாயக நீரோட்டத்தில் (?) பொத்தென்று குதித்த கட்சிகள் சத்தம் போடவில்லை.

**பச்சைக் கட்சி மாநாட்டில்** பிரதான அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளவில்லை என்று அரச பிரசார சாதனங்கள் அறிவித்தன. ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய தமிழ்க் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்டன. அவையெல்லாம் பிரதானமில்லாத கட்சிகள் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது அதிகாரத்தரப்பு. மாநாட்டில் கலந்துகொள்ளாத கட்சிகளின் பட்டியலைப் பார்த்தால் அதிகாரத் தரப்புக் கட்சிகள் தவிர, ஜே.வி.பியும்., மக்கள் ஐக்கிய முன்னணியும்தான் கலந்துகொள்ளவில்லை. இதில் பின்னைய கட்சி இனவாதக் கட்சி. ஆனால் எந்தவாதக் கட்சிகளானாலும் தங்களுக்குச் சாதகமாக இருந்தால் பிரதான கட்சிகள்தான். பார்த்தியளோ அதிகாரத்தரப்பின் பொலிசியை!

**இவ்வாரப் பொன்மொழி:**

"இன்னொருவன்தான் தோல்விக்குக் காரணம் என்று கைகாட்டும்போது வெற்றி வாய்ப்புக்களை இழக்கிறோம்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது




# சுட்டும் வெட்டியும் வேரறுக்கப்பட்ட குடும்பங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்குவில் சத்துருக்கொண்டான், தன்னாமுனை, ஆகிய பகுதிகள் 1990 செம்டம்பர் 9ம் திகதி மாலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டன.

இக்கிராமங்களில் அதற்கு முன்பே பலர் காணாமல் போயிருந்தனர்.

அதனால் பயந்துபோயிருந்த மக்கள் தங்கள் கிராமம் சுற்றி வளைக்கப்பட்டதும் கலங்கி நின்றனர். மிஞ்சியிருக்கும் ஆண்களையும் சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்று பயந்தனர்.

சுற்றிவளைத்தவர்கள் சீருடையுடனும், சிவில் உடையுடனும் நின்றனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

அவர்களில் சிலர் நன்றாகத் தமிழ் பேசினார்கள். கறுத்த ரீசேர்ட் அணிந்திருந்தார்கள்.

'உங்களுக்கு ஒன்றும் நடக்காது, கொமாண்டர் உங்களுடன் பேசவிரும்புகிறார்" என்று கூறினார்கள்.

வீடுகளில் இருந்து வெளியே அழைக்கப்பட்ட மக்களை இரவு 7 மணிவரை அப்படியே நிறுத்தி வைத்திருந்தனர்.

பின்னர் கொக்குவில் பிள்ளையாரடி, பன்னிச்சையடி, தன்னாமுனை ஆகிய பகுதி மக்கள் சத்துருக்கொண்டானை நோக்கி கொண்டு செல்லப்பட்டனர்.

தன்னாமுனையில் இருந்து கால் நடையாகவும், ஏனைய பகுதிகளில் இருந்து வாகனங்களிலும் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

காணாமல்போன தங்கள் கணவன்மாரைப் பற்றி அறியலாம். தங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யுமாறு கோரலாம் என்ற நம்பிக்கையில் கொமாண்டரைக் காண்பதற்காக பலர் ஓடிச் சென்றனர்.

தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு தாய்மார்களும் விரைந்து சென்றனர்.

## பத்துமணியளவில்

இரவு பத்துமணியளவில் எதிர்பார்ப்புக்கள் அனைத்துக்கும் வேட்டு வைக்கப்பட்டது.

கைது செய்த அனைவரையும் சுட்டுத் தள்ளினார்கள். சத்துருக்கொண்டானில் வேட்டொலிகள் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன.

சுடப்பட்டு விழுந்தவர்களை ஒவ்வொருவராக இழுத்துக் கொண்டுபோய் வாளினால் வெட்டினார்கள்.

துண்டு துண்டாக வெட்டி கிடங்குகளுக்குள் போட்டனர்.

எப்படியோ தப்பிய ஒருவர் மறைவில் இருந்து இக் கோரக் காட்சியை தன் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் விறகு வெட்டி ஒருவரின் மகன்.

இவரது வாக்குமூலத்தை பின்னர் மட்டக்களப்பு சமாதானக்குழு பதிவு செய்தது. தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்க்கப்பட்ட வாக்குமூல ஒலிநாடா வெளி நாடுகளுக்கும் அனுப்பப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்டு வெட்டிப் புதைக்கப்பட்டவர்களில் இளம் தாய்மார்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் அடங்கியிருந்தனர்.

## இரக்கமற்ற வேட்டை

நற்குணசிங்கம் சித்ராதேவி என்ற இருபது வயது இளம்தாய் தனது குழந்தையை இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டு தப்பியோட எத்தனித்தார்.

அதனைக்கண்ட கொலைஞர்கள் சரமாரியாக சுட்டனர். தாயும், இடுப்பில் இருந்த குழந்தையும் துடி துடித்து மாண்டனர். மாண்ட நாலுமாதக் குழந்தையின் பெயர்; வேணுராஜ். தாயார் இரத்தவெள்ளத்தில் கிடந்ததைப் பார்த்து அவரது ஆறு வயது மகன் சிவதரசனும், மூன்று வயது குழந்தை சிவதர்சினியும் தாயார் மேல் விழுந்து புரண்டனர்.

அவர்களை நோக்கியும் துப்பாக்கிகள் முழங்கின. இரண்டு பிள்ளைகளும் பிணமானார்கள். அவர்களையும் துண்டாக வெட்டி கிடங்கில் போட்டனர்.

மூத்தவன் வைரமுத்துவுக்கு 58வயது. மனைவி பூமணிக்கு 46 வயது. 8 வயதில் சர்மிளா என்னும் மகளும், ஆறு வயதில் ஜோதிவடிவேல் என்னும் மகனும் அவர்களது இரு கண்கள்.

துப்பாக்கிகளும், வாளும்அந்தக் குடும்பத்தையும் கூண்டோடு வேரறுத்தன.

கோபால் சவுந்தர ராஜா 26 வயது. மனைவி தங்கேஸ்வரிக்கு 24 வயது. இரண்டு பெண் குழந்தைகள். காயந்தினி. 2 வயது. பிரியா 8மாதக் குழந்தை. அந்தப் பிஞ்சுக்குழந்தைகளுடன் சேர்த்து அக் குடும்பமும் வேட்டையாடப்பட்டது.

இவை உதாரணங்கள் மட்டும்தான். இப்படி பல குடும்பங்கள் பலியெடுக்கப்பட்டன.

நடக்கவே முடியாமல் தள்ளாடிக் கொண்டு நின்ற மூத்தத்தம்பி பெரிய தம்பிக்கு 74வயது. அவர் மனைவிக்கு 73 வயது. பொக்குவாய்கள் பிளக்க செத்து வீழ்ந்தனர் அவர்கள்.

படையினரின் பயங்கரவாத ஒழிப்புக்கு தள்ளாத வயோதிபர்களும் விதிவிலக்கல்ல.

செம்டம்பர் பத்தாம் திகதி நடைபெற்ற கொலைவேட்டையில் பலியானவர்கள் பற்றிய புள்ளி விபரம் இது:

| | |
|---|---|
| சத்துருக்கொண்டான் | - 38 பேர் |
| கொக்குவில் | - 47 பேர் |
| பன்னிச்சையடி | - 37 பேர் |
| பிள்ளையாரடி | - 62 பேர் |



மொத்தம் 184 பேர் சத்துருக்கொண்டான் முகாமில்வைத்து கொல்லப்பட்டனர்.

இந்த வேட்டையில் முன்னின்றவர்களில் இரண்டு பெயர்கள் பிரபலமாக அடிபட்டன.

ஒருவர் கப்டன் முனாஸ். இன்னொருவர் மோகன்.

மோகன் அப்போது படையைச் சேர்ந்தவரல்ல. புளொட் இயக்கத்தின் மட்டக்களப்பு பொறுப்பாளர்.

# விற்கப்பட்டனவா உறுப்புக்கள்?

1994ல் கொழும்பு பொல்கொட வாவியில் தமிழ் இளைஞர்களது பிணங்கள் மிதந்த விவகாரத்திலும் மோகனின் பெயர் அடிபட்டது. அவர் தேடப்படுவதாகவும் கூறப்பட்டது.

இப்போது மோகன் இலங்கை இராணு வத்தில் ஒரு அதிகாரியாக இருக்கிறார். இன்றைய அரசு பதவிக்கு வந்த பின்னர்தான் மோகன் இராணுவத்தில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் பெண்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித வர்க்கவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கப் பெண் ஒருவர் வந்திருந்தார். அவரது பெயர் பற்றீஷியா லோறன்ஸ்.

ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்த பின்னர் கிழக்கில் காணாமல் போனோர்கள் பற்றி விசாரிக்க முன்னாள் நீதியரசர் கே.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுத் தலைவருக்கு பற்றீஷியா லோறன்ஸ் எழுதிய கடிதத்தில் முனாஸ், மோகன் ஆகியோர் பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டிருந்தது.

தான் அறிந்த பல தகவல்களை பற்றீஷியா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அக் கடிதத்தின் முக்கிய பகுதிகளை தருகிறேன்.

"சத்துருக்கொண்டான் கிராமத்தில் ஒரு தாமரைக் குளம். அதன் அருகே மிகப் பழமை வாய்ந்த கண்ணகை அம்மன் கோவில். 1978ம் ஆண்டு சூறாவளியின்போது இக்கோவில் உடைந்துபோனது. அவ்வாலயம் மீண்டும் திருத்திக் கட்டப்படவில்லை.

இக்கிராமத்தில் ஏராளமான கன்னிப் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1990ல் மீண்டும் போர் ஆரம்பமானதும் இவர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களோடு பல சிறுவர்களும், பல வயோதிபர்களும் படுகொலையாகினர்.

நடந்த கொடுமைகள் பற்றி எஞ்சியிருப்போர் எதனையும் கூறுவதற்கு தயங்குகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும், அரச துருப்புக்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்வதால் ஆங்காங்கே சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புக்கள் நடக்கின்றன. அதன்போது பொது மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இவற்றால் அச்சம் கொண்ட மக்கள் வாய்திறக்க அஞ்சுகின்றனர். இந்நிலையில் கண்ணகி அம்மன் (சிங்களத்தில் பத்தினி) தனது காக்கும் சக்தியை இம்மக்கள்பால் பிரயோகிக்காமல் விட்டுவிட்டாள் என்றே கருதவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏனைய மக்கள் போலவே தன்னாமுனை கிராம மக்களும் ஆயுதப்படையினர், ஆயுதக் குழுக்கள், மற்றும் முனாஸ், மோகன் போன்றோர் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்பது போலவே கூறப்பார்க்கின்றனர். இவர்கள் தொடர்பாக தங்களுக்கு தெரிந்தவற்றை எவ்வளவுதூரம் வெளிப்படுத்தாமல் இருக்கிறார்களோ அவ்வளவுதூரம் தங்களுக்கு பாதுகாப்பு என்று நம்புகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் அரசியல் பற்றி எதுவுமே பேசமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர். ஆகவே தங்களுடைய குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி பலர் என்னிடம் தெரிவித்த தகவல்களைக் கூறுகிறேன்.

அவர்கள் சார்பாகக் கூறுகிறேன் என்பதைவிட, அவர்களில் ஒருவராகவே தருகிறேன்.

தங்களின் ஆணைக்குழுவிடம் நான் தரும் சுயாதீனமான அறிக்கை இதுவாகும்." என்று தனது சுயாதீன அறிக்கையை சமர்பித்தார் பற்றீஷியா லோறன்ஸ்.

அவரது அறிக்கையில் பல தகவல்கள் இடம்பெற்றிருந்தன.

## அறிக்கை மாயம்

அதுதவிர ஆணைக்குழு முன் தோன்றிய பலரும் நடந்த சம்பவங்களை கண்ணீருடன் விபரித்தனர்.

காணாமல் போனோர் யாராவது உயிருடன் இருக்கிறார்களா? என்பதைக் கண்டறிய சிறைகளுக்கும், முகாம்களுக்கும் ஆணைக்குழு சென்று ஆராய்ந்தது.

இராணுவத்தினர் அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க முன்வரவில்லை. அவ்வாறு இருந்தும் தனது விசாரணைகளை கடும் சிரமங்கள் இடையே ஆணைக்குழு பூர்த்தி செய்தது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் விசாரணைகள் நடத்தியது.

அந்த அறிக்கையில் கொல்லப்பட்டோர் பற்றிய தகவல்கள், அதற்கு காரணமானவர்கள் என்று மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட படையினர் பற்றிய தகவல்கள் போன்றன அடங்கியிருந்தன.

இந்த ஆணைக்குழு விசாரணைகள் பத்திரிகைகளிலும் வெளியாகின. புதிய அரசு தக்க நடவடிக்கை எடுக்கப்போகிறது என்றே பத்திரிகைகளை படித்தவர்கள் நினைத்தனர்.

ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களிடம் 1997 ஆரம்பப் பகுதியில் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் அந்த அறிக்கைக்கு என்ன நேர்ந்தது என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க நேர்ந்தால் படையினரிடையே புகைச்சல் ஏற்படும் என்று கருதியே அமுக்கி விட்டனர்.

இன்றும் அரசிடம் விசாரணைக்குழு கேட்கும் தமிழ்க் கட்சிகள் கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு அறிக்கைக்கு நடந்தது என்ன? என்ற கேள்வியை எழுப்பத் தவறியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பா. உக்கள்கூட இவ்விடயத்தில் போதிய கவனம் செலுத்தாமல் இருந்து வருகின்றனர்.

## அச்சம் தரும் சந்தேகம்

சத்துருக்கொண்டான் முகாமில் பலியான பலரின் கண்கள் தோண்டப்பட்டதாகவும், உறுப்புக்கள் அகற்றப்பட்டதாகவும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

சர்வதேச அளவில் கண்கள், சிறுநீரகங்கள் போன்ற உறுப்புக்களை மிகுந்த பணம் கொடுத்து வாங்க ஆட்கள் இருக்கிறார்கள்.

மருத்துவமனைகளிலும் உறுப்புத் திருட்டுக்கள் நடந்து பிடிபட்ட செய்திகளும் நாமறிந்ததே.

சத்துருக்கொண்டானில் கொல்லப்பட்டோரின் உறுப்புக்களும் அவ்வாறு விற்கப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்தது.

அந்த சந்தேகத்தை 1994ல் பொல்கொட வாவியில் மிதந்த பிணங்களும் உறுதிப்படுத்தின.

அவ்வாவியில் மிதந்த உடல்களில் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டிருந்தன.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் கண்தானம் வழங்குவதில் இலங்கை முதலிடம் பெற்றிருந்தாக பாராட்டப்பட்டதையும் சத்துருக்கொண்டான் படுகொலைகளுடன் சம்பந்தப்படுத்தியும் சந்தேகங்கள் எழுந்தன.

இதுவரை விடைகாணப் படாவிட்டாலும், அலட்சியப்படுத்த முடியாத சந்தேகமாகவே இருக்கிறது.

விலை போகும் உறுப்புக்களை மட்டும் குறிப்பாக அகற்றியதுதான் சந்தேகத்திற்கு வலுச் சேர்க்கிறது.

இச் சந்தேகங்கள் அனைத்துக்கும் இன்றைய அரசு நினைத்திருந்தால் விடை கண்டிருக்கலாம். பொல்கொட வாவி விசாரணையை முழுதாக நடத்தி முடித்திருந்தால் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கும்.

## எரிப்பு

வந்தாறுமூலை அகதிமுகாம், சத்துருக்கொண்டான் படுகொலைகள் பற்றிய உண்மைகள் வெளியானதும் சம்பந்தப்பட்டவர்கள் விழித்துக் கொண்டனர்.

உடல்கள் போடப்பட்ட கிடங்குகளை தோண்டி, அவற்றை வெளியே எடுத்து எரித்துவிட்டனர்.

ஆதாரம் இருந்தால்தானே சிக்கல். எனவே ஆதாரங்களையே முற்றாக எரித்துவிட்டனர்.

## மன்னிப்புச் சபை


வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக அகதிமுகாமில் 158 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்தது.

1994 ஜூலைமாதம் சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கையில், "மனித உரிமைகள் பணிக்குழு சுட்டிக்காட்டிய படையினர் நால்வர்மீது அரசு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டியது.

50 பேர்வரையான சீருடை தரித்த, தரிக்காத பாதுகாப்பு படையினர் மேற்படி சம்பவத்தில் பங்கு கொண்டனர் என்பதையும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

மட்டக்களப்பு சமாதான சபை 1990 நவம்பர் 12ம் திகதி ஜோசப் பரராஜசிங்கம் பா.உ.வுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியது.

"வந்தாறு மூலையில் கைதானவர்கள் தொடர்பாக விபரம் அறிவதற்காக 6.11.90ல் மொறக் கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து மூத்த இராணுவ அதிகாரியிடம் சென்று முறையிடப்பட்டது. அவர் "கைதானவர்கள் வெலிக்கடை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகவும், மேற்கொண்டு விபரங்களை 10 நாட்களின் தெரிவிப்பதாகவும் கூறினாராம். பின்னர் முறையிட்டாளர்களுக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லை."



மட்டக்களப்பு வாவி

இப்போது எல்லாமே தெளிவாகி விட்டது. நீதி மட்டும் கிடைக்கவில்லை.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# கொள்கை வகுத்தது கூட்டணி

# முன்னெடுப்பது புலிகள்!

அலசுவது- இராஜதந்திரி

யாழ் மாநகர முதல்வர் சிவபாலன் கொல்லப்பட்டதோடு மொத்தம் மூன்று யாழ் மாநகர முதல்வர்கள் பலியாகியுள்ளனர்.

மூன்றுபேருமே விடுதலைப் புலிகளால்தான் கொல்லப்பட்டுள்ளனர்.

1975 ஜூலை 27ம் திகதி பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவில் அருகே வைத்து யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார். பிரபாகரன் நேரடியாக பங்குகொண்ட தாக்குதலே இதுவாகும்.

இக் கொலையை கண்டிக்காதது மட்டுமல்லாமல், துரையப்பா கொலை உட்பட பொலிஸ் அதிகாரிகள் கொலை போன்றவற்றுக்கு புலிகள் முதன் முதலாக உரிமை கோரியபோதும் அன்றைய தமிழ்த் தலைமையான கூட்டணியினர் அதனையிட்டு ஒருவார்த்தைகூட மாறாகப் பேசியிருக்கவில்லை.

அதுமட்டுமன்றி துரையப்பா கொலை உட்பட புலிகள் உரிமை கோரி வெளியிட்ட அறிக்கை கூட்டணியின் அன்றைய செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்களது அலுவலகத்தில் இருந்த தட்டச்சு மூலமே தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் கையொப்பம் இட்டிருந்தவர் உமாமகேஸ்வரன். கூட்டணி மற்றும் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளைகளின் முக்கியஸ்தராக இருந்தவரே உமாமகேஸ்வரனாகும்.

எனவே, துரோகிகள் ஒழிப்பு என்பதை உரிமைப் போராட்டத்தின் ஒரு வடிவமாக, அவசியமான நடவடிக்கையாக அங்கீகரித்தவர்கள் கூட்டணியினரேயாகும்.

துரோகிகள் என்பதற்கு கூட்டணியினர் கூறிய வரைவிலக்கணங்கள் இன்று கூட்டணியினருக்கே பொருந்தக்கூடியதாக மாறியதுதான் வரலாற்றில் சோகம் நிரம்பிய காட்சியாகியுள்ளது.

உண்மையில் அன்று கூட்டணியினரால் துரோகிகள் என்றும், அகற்றப்படவேண்டிய களைகள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டவர்களைவிட, இன்று கூட்டணியினரது அரசியல் நிலைப்பாடு மோசமானதாகவே அமைந்திருக்கிறது.

1972ல் சிறிமாவோ அரசால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கியது. அதனை ஆதரிப்போர் அனைவரும் துரோகிகள் என்று கூட்டணியினர் பிரகடனப்படுத்தி இருந்தனர்.

அதன்காரணமாகவே துரையப்பா, அருளம்பலம், குமாரசூரியர், தியாகராசா, ராஜன் செல்வநாயகம் போன்ற பல அரசியல்வாதிகளை துரோகிகள் என்று கூட்டணியினர் இனம்காட்டி வந்தனர்.

அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தர குடிமக்களாக்க அரசியலமைப்பை மட்டும்தான் கொண்டு வந்திருந்தார். இன்று ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் இராணுவத்தீர்வையும் சேர்த்தே கொண்டு வந்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் முன்வைத்துள்ள தீர்வுப்பொதி தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தை கூறுபோடுகின்ற பொறியாகவே திகழ்கிறது.

பாரம்பரிய தாயகத்தை கூறுபோட்டு தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தை படிப்படியாக சிதைத்து, முழுநாட்டையும் பௌத்த சிங்கள நாடாக்கும் உள்நோக்கம்தான் தீர்வுப் பொதிக்குள்ளும் மறைந்து இருக்கிறது.

ஆகவே 1972ல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பைவிட இன்றைய ஆட்சியாளரின் அரசியல், இராணுவ வியூகங்களே மிகவும் ஆபத்தானவையாகும்.

ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டு காலத்தில் இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளவை புதைகுழிகளும், காரணமற்ற பாரிய கைதுகளும், பரவலான அவலங்களுமேயாகும்.

அதுமட்டுமன்றி தமிழ் பேசும் கட்சிகளின் பலவீனத்தை நன்கு புரிந்துகொண்டு அவர்களை வைத்தே தமிழ் பேசும் தரப்பை பலவீனப்படுத்தும் அரசியல் நகர்வுகளையும் இன்றைய ஆட்சியாளர்கள் வெகு சாதுரியமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கூட்டணி உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகளின் தேவைகள் என்ன? என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் மிகத் தெளிவாக அறிந்துள்ளனர்.

கூட்டணியினருக்கு புலிகள் வீழ்ந்தால்தான் நிம்மதி. வெளியே உயிர்ப்பயம் காரணமாக 'புலிகளுடன் அரசு பேசவேண்டும்' என்று கூறினாலும்கூட புலிகள் தோற்கடிக்கப்பட்டால் எவ்வித தடங்கலும் இன்றி மீண்டும் தாமே தலைமையாகலாம் என்ற எண்ணமே குடிகொண்டுள்ளது.


து ரையப்பா

வன்னி பூகோளத்தைப் பற்றி கூட்டணி முக்கிய பிரமுகர் ஒருவரே படைத்தரப்புக்கு எடுத்துக் கூறியிருந்தார் என்ற தகவலும் கூர்ந்து நோக்கப்படவேண்டிய ஒன்றேயாகும்.

ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கும் புலிகள் இல்லையானால் தாம் உயிரபாயம் இல்லாமல் பதவிகளை தக்கவைத்துக் கொள்ளலாம், பாராளுமன்ற அரசில் விளையாட்டுக்களில் ஈடுபட்டு இன்னும் மேலே ஏறிக் கொண்டிருக்கலாம் என்ற ஆசையே மேலோங்கியுள்ளது.

இதுவரை காலமும் போராடியதில் ஏற்பட்ட விளைவுகளை வைத்து சிறந்த தீர்வை எட்டவேண்டும் என்ற நோக்கம் தமிழ்க்கட்சிகளுக்கு கிடையாது.

மிகவும் மோசமான ஒரு அரசியல் தந்திரத்தை தமிழ்க் கட்சிகள் இன்று கையில் எடுத்துள்ளன.

போராட்டத்தின் விளைவுகளைக் காட்டி போராட்டங்கள்மீது மக்களை நம்பிக்கை இழக்கச் செய்யும் விஷமத்தனமான உத்தியை தமிழ்க் கட்சிகள் கைக்கொள்ள ஆரம்பித்துள்ளன.

உடைந்த கட்டடங்கள், அழிந்த சொத்துக்கள், படுகொலைகள் போன்றவை ஒவ்வொரு போராட்டத்திலும் எதிர் நோக்க வேண்டிய விளைவுகளேயாகும்.

தமிழ் ஈழக் கோரிக்கையை கூட்டணி முன்வைக்கும்போதும், பின்னர் இன்றைய மிதவாத தமிழ் கட்சிகள் அன்று ஆயுதம் ஏந்தியபோதும் மேற்கண்ட விளைவுகளை எதிர்பார்த்தே இருந்தனர். அவ்வாறு எதிர்பார்க்கவில்லையெனில் உலக முட்டாள்களாகவே இவர்களைக் கருதவேண்டியிருக்கும்.

'அழிவுகள் இல்லாமல் போராட்டம் இல்லை. உயிர்கள் உரமாகாமல் விடுதலை இல்லை' என்றல்லாம் கூறித்தான் இக்கட்சிகள் ஆயுதம் தூக்கியிருந்தன.

இன்று அதே கட்சிகள் அழிவுகளைச் சுட்டிக்காட்டி மக்களை அச்சுறுத்துவதுடன், போராடுவதால் பயனில்லை, அரசுடன் பேசியே பல காரியங்களை சாதிக்க முடியும் என்று மக்களை நம்பவைக்க முற்படுகின்றன.

அரசுடன் நெருக்கமாக இருப்பதும், அமைச்சர் பதவி போன்றவற்றில் ஒட்டியிருப்பதும் துரோகத்தனமான காரியமாக தமிழ்மக்களால் நோக்கப்பட்டு வருகிறது.

அத்தகைய எண்ணம் கூட்டணிக்கு ஒரு காலத்தில் தேவையாகவும், உபயோகமாகவும் இருந்தது.

ஆனால் இன்று கூட்டணி உட்பட முன்னாள் இயக்கங்களான இந்நாள் மிதவாத தமிழ்க் கட்சிகளுக்கு மேற்கண்ட மனோநிலை கசப்பானதாக மாறியுள்ளது.

பாராளுமன்ற பதவிகளை அனுபவித்தால் மட்டும் போதாது; அமைச்சர் பதவிகள் மட்டுமன்றி இன்னமும் விசுவாசமாக நடந்து கொண்டால் துணைப்பிரதமர் பதவிகள்கூட கைக்கு எட்டும் என்ற கனவில் தமிழ்க் கட்சித் தலைமைகள் அமிழ்ந்து போயுள்ளன.

தமது ஆசைகளுக்கு சாதகமான மனப்பக்குவத்தை மக்களிடம் ஏற்படுத்துவதிலேயே இக்கட்சித் தலைமைகள் இன்று ஈடுபட்டுள்ளன.

அரசிடம் தாம் விடுத்த கோரிக்கைகள் நிறைவேறுகிறதோ இல்லையோ, அவை நிறைவேறிவிட்டது போல இக்கட்சிகள் அறிக்கைகளும் வெளியிட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி யாழில் காணாமல் போனோர் விவகாரம், செம்மணிப் புதைகுழி விவகாரம், நாடெங்கும் நடக்கும் பரவலான கைதுக் கொடுமைகள், நிவாரண வெட்டு போன்றவற்றில் அரசின் நோக்கங்களுக்கு ஏற்பவே இக்கட்சிகளது செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

அரசுமீது மக்களிடையே அதிருப்திகள் ஏற்படுமானால், அரசுடன் இணைந்து நின்று பெற நினைக்கும் பதவிகள் கைக்கெட்டாமல் போய்விடும் என்பதும் பிரதான காரணமாகும்.


சரோஜினி

ஆகவேதான், தமிழ் மக்கள் தம்மீது வெறுப்புக் கொள்வதையிட்டு ஆட்சியாளருக்கே இல்லாத கவலை, தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கிறது.

ஜனாதிபதிக்கு தெரியாமல்தான் அநீதிகள் இழைக்கப்படுவதுபோன்றும், அவருடன் பேசினால் எல்லாம் நல்லபடியாக நடந்தேறும் என்பது போன்றும் இக்கட்சிகள் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முனைவதற்கும் மேற்கண்ட கவலையே காரணமாகும்.

தங்கள் சுயநல அரசியலுக்காக இக்கட்சிகள் மேற்கொண்டுவரும் அரசியல் உத்தியானது தமிழ் பேசும் மக்களிடம் அரைகுறையான தீர்வைத் திணிக்கும் பேரினவாத நோக்கத்துக்கு பிடித்தமானதுமாகும்.

இராணுவத் தீர்வு மூலம் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கி, தாம் தருவதை மறுபேச்சின்றி வாங்கும் நிலைக்கு உள்ளாக்கவே ஆட்சியாளர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

இராணுவத் தீர்வு மூலம் ஆட்சியாளர் செய்ய விரும்பும் காரியத்தை, தமது அரசியல் உத்திமூலம் செய்து வருகின்றன தமிழ்க் கட்சிகள் என்பது மிகையான கூற்றல்ல. ஆனால் அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

'தமிழ்க் கட்சிகளின் யோசனைகளை ஏற்கமுடியாது' என்று நீதியமைச்சரே பகிரங்கமாக அறிவித்துள்ளார். தாயகக் கோட்பாட்டை முற்று முழுதாக தீர்வுப் பொதி நிராகரித்துவிட்டது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரிந்துவிட்டது.

இதன் பின்னரும் அரசின் தீர்வுப் பொதி தொடர்பாக தமது நம்பிக்கையீனத்தை தெரிவிக்காமல் இருப்பதுடன், அப் பொதியை உலகுக்கு அடிக்கடி காண்பித்தபடி இராணுவத்தீர்வை முனைப்பாக்கும் அரசின் தந்திரத்தை அம்பலப்படுத்தவும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் முன்வரவில்லை.

எனவே, கூட்டணியினர் முன்னர் 'தமிழ்த் துரோகிகளுக்கு' கூறிய வரைவிலக்கணம் என்பது இப்போது யாருக்கெல்லாம் பொருந்துகிறது என்பது இரகசியமானதல்ல. அதுமட்டுமன்றி அன்று இழைக்கப்பட்டது துரோகம் எனில், இன்று இழைக்கப்படும் துரோகத்தின் அளவு பலமடங்கு பெரிதாகும்.

இன்னொரு உண்மையையும் நாம் இங்கு நோக்கியாக வேண்டும்.

அல்பிரட் துரையப்பா போன்றவர்கள் துரோகம் இழைத்ததாக கூட்டணியினரால் குற்றம்சாட்டப்பட்டாலும், அவர்களின் செயற்பாடுகள் இரகசியமாக இருக்கவில்லை.

ஆளும் கட்சியை பகிரங்கமாக ஆதரித்தனர். தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக கூறிவந்தனர்.

ஆனால், இன்று கூட்டணி உட்பட தமிழ்க் கட்சிகள் மக்களை முட்டாள்களாக நினைத்துக்கொண்டு செயற்பட்டுவருகின்றன.

அரசை கண்டித்து அறிக்கை விடுவது, அவசரகால சட்டத்தை எதிர்த்துக்கொண்டு, அதே சட்டத்தை பிரயோகித்துவரும் அரசை ஆதரிப்பது, இவ்வாறு பல்வேறு கரணமடித்து மக்களின் சிந்தனா சக்தியை குறைத்து எடைபோடுகின்றன இக்கட்சிகள்

இவற்றுடன் ஒப்பிடும்போது அல்பிரட் துரையப்பா போன்றோரின் அரசியல் நிலைப்பாடுகள் திறந்த புத்தகங்களாக இருந்தன என்பது மறக்க முடியாததாகும்.


சிவபாலன்

எனவே கூட்டணியினரின் முன்னைய வரைவிலக்கணப்படி துரையப்பா போன்றோர் துரோகிகள் எனில், இன்று தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கைகளையும், திரைமறைவு அரசியல் கரணமடிப்புக்களையும் நோக்கும்போது, துரையப்பா போன்றோர் துரோகிகளாக இருந்தாலும் மக்களை ஏமாற்றவில்லை என்றே கூறவேண்டியுள்ளது.

ஒரு இனத்தின் உரிமைப் போராட்டத்தை நசுக்க, அந்த இனத்தில் இருந்தே உதவி செய்பவர்களே துரோகிகள் என்றழைக்கப்படுவர்.

துரையப்பா முதல் இன்று தமிழ்க்கட்சிகள் வரை துரோகத்தனமான பாத்திரத்தையே வகித்து வருகின்றன.

ஆனால் துரோகிகள் ஒழிக்கப்படவேண்டுமா? மக்களிடம் இனம்காட்டி ஒதுக்கப்படவேண்டுமா? என்பதே சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்து வருகிறது.

துரோகிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே கூட்டணித் தலைமையின் கொள்கையாக அன்று இருந்தது.

அதனால்தான் ஈழத்துக் காந்தி என்று அழைக்கப்பட்ட தந்தை செல்வாகூட துரையப்பா கொலையை கண்டிக்கவில்லை. அதுமட்டுமன்றி அச்செய்தி எட்டியபோது தன் அருகில் இருந்த ஒருவரிடம், 'எங்கள் பெடியள்தான் செய்திருப்பார்கள்' என்றும் கூறினாராம்.

எனவே, கூட்டணியினர் வகுத்த கொள்கைகளை கூட்டணியினரே இன்று கைவிட்டாலும்கூட புலிகள் அதனைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழீழக் கோரிக்கை உட்பட துரோகிகள் ஒழிப்புவரை கூட்டணியினரால் முதலில் முன்னேடுக்கப்பட்டதே. இன்று அவற்றை தாம் முன்னெடுப்பது பற்றி புலிகள் பின்வருமாறு கூறியுள்ளனர்:

"தவறான சக்திகளால் ஆரம்பிக்கப்பட்ட சரியான போராட்டம் இன்று சரியான தலைமையால் முன்னெடுக்கப்படுகிறது" என்று பாலகுமார் கூறியுமுள்ளார்.

புலிகளைப் பொறுத்தவரை துரையப்பா கொலையில் இருந்தே அவர்களது ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.

துரையப்பா கொலை தொடர்பாக புலிகள் பின்வருமாறு தெரிவித்திருந்தனர்! "அரசின் இனவாத ஒடுக்குமுறைக்கும், வன்முறைக்கும் இலக்கான தமிழ் மக்களைப் பொறுத்தவரை அல்பிரட் துரையப்பாவுக்கு ஏற்பட்ட கதி சிங்களப் பேரினவாதக் கட்சிகள் வடக்கே நிலைகொள்ள முனையும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தமிழர்களின் போராட்டத்தை காட்டிக் கொடுக்க முனையும் தமிழ்த் துரோகிகளுக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது." என்று விபரித்திருந்தனர்.

தம்மால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாக கூறப்பட்ட ஒரு நிகழ்வுக்கு மீண்டும் தொடக்கப் புள்ளி போடப்படுவதை புலிகள் அனுமதிப்பார்கள் என்பது எதிர்பார்க்க முடியாததேயாகும்.

சூரியக்கதிரின் பின்னர் யாழில் நந்திக்கொடி ஏற்றிய ராமலிங்கம், சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு யாழில் புத்துயிர் கொடுக்க முற்பட்ட அக்கட்சியின் இரண்டு அமைப்பாளர்கள் ஆகியோரும் புலிகளால் தீர்த்துக்கட்டப்பட்டுள்ளனர்.

அதுபோலவே அரசின் நலனுக்காகவும், இராணுவ தீர்வு முயற்சிக்கு ஜனநாயக சாயம் பூசுவதற்காகவும் நடத்தப்பட்ட யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட பேட்பாளர்களும் புலிகளின் இலக்குகளாகியுள்ளனர்.

யாழ் மாநகர மேயர் என்ற பதவி உலகின் கண்களுக்கும் உடன் தெரியும் பதவியாகும். யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நிலவுகிறது என்று உலகுக்கு ஒரு மாயை ஏற்படுத்துவதில் மாநகர மேயர் என்ற பாத்திரமே நன்கு உதவுகிறது. எனவே மாநகர மேயர்களாக பதவியில் அமர்வோர் புலிகளின் முதற் குறியாகியுள்ளனர்.

புலிகளை ஒழித்துக் கட்டப்போவதாக கூறும் அரசுக்கும் நண்பனாக இருந்துகொண்டு, தாம் புலிகளுக்கு எதிரிகளல்ல என்று கூறுவது, பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பதுபோலவே அமைந்திருக்கிறது. ஆனால் அத்தந்திரம் பலிக்காது என்பதையே சிவபாலனின் மரணம் எடுத்துக்காட்டியுள்ளது. ■

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

## மலசலகூடமும் மாநகர சபையும்!

நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒரு கருத்தைக் கூறியுள்ளார். கொழும்பில் பொலிஸ் நிலையங்கள் கம்பியூட்டர் மயமாகப் போகிறதாம்.

அதன்பின்னர் கைதான தமிழ்இளைஞர்கள் யுவதிகள் தொடர்ந்து கைதாகும் நிலை ஏற்பட மாட்டாதாம்.

தமிழ்மக்களின் துயரம் தீர அரசு எடுக்கும் இத்தகைய நடவடிக்கையால் கம்பியூட்டர் கம்பனி ஒன்றுக்கு சுளையாக இலாபம் கிடைக்கப்போகிறது.

ஆனால், தமிழ் மக்களுக்கு என்ன இலாபம்?

தமிழர்களின் துயரம் தீர அடிக்கடி புதுப்புது ஆலோசனைகள் கூறுவது நீதியமைச்சரின் பொழுதுபோக்கு.

அடையாள அட்டையை சுலபமாகப் பெறுவதற்கு என்று தனி அலுவலகம் ஒன்று திறப்பதாக அறிவித்தார். தமிழ்க் கட்சிகளும் திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தன. ஆனால் அடையாள அட்டையை தமிழர்கள் பெறுவது மேலும் சிரமமாக மாறியுள்ளது என்பது அலைந்து புலம்பும் மக்களுக்கு தெரியும்.

கொழும்புக் கைதுகளை தடுக்க கொழும்புத் தமிழருக்கு தனியான அட்டை, ஊர்காவல் வேலை என்றும் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார் அமைச்சர்.

இப்போது கம்பியூட்டர் முறைபற்றி கூறியுள்ளார்.

கைதானவர்களே தொடர்ந்து கைதாவதற்கு காரணம் கம்பியூட்டர் இல்லாமல் போனதால் அல்ல. காவல்துறையினதும், பாதுகாப்பு தரப்பினதும் இனரீதியான விரோதப்போக்கே காரணமாகும்.

இன்னொரு பொலிஸ் நிலையத்தில் தாம் கைதாகி விடுவிக்கப்பட்ட ஆதாரம் காட்டியோர்கூட கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பதிவு உட்பட சகல ஆவணங்களுடன் இருப்போர் கைது செய்யப்படும்போது, அவர்கள் பெயர் கம்பியூட்டரில் பதிவு செய்யாமல் இருப்பதுதான் தப்புகளுக்கு காரணம் என்பது, உலக கண்டனங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கான வாதம் மட்டுமே!

தவிர, கம்பியூட்டர் மயமாக்கல் என்பது உடனே நடக்கக்கூடிய காரியமல்ல. பலமாதங்கள் ஏன் வருடங்கள்கூட செல்லலாம். உடனடியாக ஒரு காரியம் செய்திருக்கலாம்.

கைதான ஒருவர் விடுவிக்கப்படும்போது அந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒரு பத்திரம் தரலாம். பின்னர் கைது செய்யும்போது அப்பத்திரத்தைக் காட்டினால் கைது செய்யும் அவசியம் இருக்காது.

இது சுலபமான காரியம். உடனே செய்திருக்கலாம். ஏன் செய்யவில்லை?

நேராகத் தொடும் மூக்கை சுற்றித் தொடுவானேன்?

ஒரே ஒரு காரணம்தான்; "தமிழர் கைதுகளையும், தொல்லைகளையும் தவிர்ப்பது அல்ல நோக்கம். அவற்றை நியாயப்படுத்துவதற்கு புதுப் புது காரணங்கள் சோடிப்பதுதான் நோக்கம்.

—♦♦—

யாழ் மாநகர மேயரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட யாழ் கூட்டணிக் கிளை அமைப்பாளர் மதிமுகராசா செத்தவீட்டிலும் ஜோக்கடித்திருக்கிறார்.

"காக்கிச் சட்டைகளுடன் நீங்கள் சண்டை பிடியுங்கள். எங்களுடன் வராதீர்கள். நாங்கள் உங்களுக்கு என்ன செய்தோம்? மலசலகூடம் கட்ட முன்வந்தது துரோகமா?" என்று கேட்டிருக்கிறார்.

இதே மதிமுகராசா 1977க்கு முன்னர் கூட்டணியின் பிரசாரப் பீரங்கி. அன்னார் வாயைத் திறந்தால் துரோகிகள்மீது ஒரே வசை மழைதான்.

சிமோல் அருளம்பலமும், அல்பிரட் துரையப்பாவும் இவருக்கு என்ன செய்தனர்? ஏன் வசைந்தார்?

'நீங்கள் அடிபட்டுச் சாகுங்கள், எங்களை கொஞ்சம் அனுபவிக்கவிடுங்கள்!' என்கிறார் மதிமுகராசா.

ஆனாலும் பழம் பெரும் கட்சியை இப்படி மலசலகூடம் கட்டும் கட்சியாக கிண்டலடித்திருக்கக்கூடாது.

மலசலகூடம் கட்ட மாநகர சபைத் தேர்தல் ஏன்? மாநகர மேயர் ஏன்? நன்றாக சுத்துகிறார்கள்!

அரசையும் தடவி, புலிகளையும் தடவி, ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் குலவி எல்லாருக்கும் இடையே சுழிஓடலாம் என்னும் நினைப்புத்தான் கெடுதி!

யாழில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் 'புலிகளால் எல்லோருக்கும் பிரச்சனை, நாம் ஒன்றுபட்டு நிற்போம்' என்று கூறிக்கொண்டுதான் கூட்டணி கூட்டுச் சேர்ந்திருக்குதாம்.

இது புலிகளுக்கு எட்டாது என்று கூட்டணி நினைத்ததாம்.

'பூனைகள் கண்களை மூடிக்கொள்ளலாம். அதற்காக உலகம் ஒன்றும் இருண்டு விடாது!' என்பது தெரியாதோ?! ■

www.padippakam.com

உண்மைத் தொடர்

## அதிர் இடி 28

கடந்தவாரம்

மொசாட் அனுப்பிய உளவழகியை தீர்த்துக்கட்டுகிறான் இடி அமீன். அவளது உடல் எரிக்கப்படுகிறது.

இனி....

# இடி அமீன்

மொசாட் தலைமையகத்தில் தகவல் கிடைத்தது.

"எங்கள் உளவாளி இடி அமீனால் தீர்த்துக் கட்டப்பட்டுள்ளார்!"

இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடும் நபர்கள் செத்துப்போனால்கூட பகிரங்கமாக உரிமை பாராட்ட முடியாது; மொசாட்டுக்கு இப்படியான சாவுகள் புதிதல்ல.

'எங்கே தவறு செய்தாள்? எப்படி அமீன் கண்டுபிடித்தான்?' என்பதுதான் மொசாட்டிற்கு புதிராக இருந்தது.

அந்தப் புதிருக்கான விடையை தன் அந்தரங்கச் செயலாளரான சியம்பாவிடம் கூறிக்கொண்டிருந்தான் அமீன்: "இங்கே அவள் என்னைச் சந்திக்க வந்தபோது, **அவள் தங்கியிருந்த அறையை நம் ஆட்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்த ஆராய்ச்சியில் கிடைத்த துப்புத்தான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. அவள் உயிரை** புறாமாதிரி • பறக்கவைத்திருக்கிறது!" என்றவன் விகாரமாகச் சிரித்தான்.

**"இந்த இடி அமீனை இஸ்ரேலியர்கள் குறைத்து எடைபோட்டுவிட்டார்கள். என்று இந்தக் கதிரையில் அமர்ந்தேனோ, அன்றுமுதல் என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை எந்நேரமும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!"** என்று கூறிவிட்டு, சியம்பாவை நேராகப் பார்த்து: **"நீர் எந்நேரம் படுக்கையறைக்குள் செல்லுகிறீர்? அங்கு என்ன செய்கிறீர்? என்பது கூட எனக்கும் தெரியும்!"** என்று கண்ணடிக்க, சியம்பாவால் நம்பவும் முடியவில்லை, நம்பாதிருக்கவும் முடியவில்லை.

அடுத்த சில நாட்களில் இடி அமீன் செய்த காரியத்தால் உகண்டாவின் படிப்பறிவு உள்ள அனைவரும் பொறி கலங்கிப் போனார்கள்.

சியம்பா பக்குவமாக எடுத்துச் சொல்லியும் அமீன் கேட்கவில்லை.

உகண்டாவின் மக்ரரே பல்கலைக்கழக வேந்தராக பதவி ஏற்றான் அமீன்.

பதவி ஏற்றதும் பல்கலைக்கழக அதிகாரிகளை தன் அறைக்கு அழைத்தான்.

**"ஜனாதிபதியும் நானே, பல்கலைக்கழக வேந்தனும் நானே. உங்களுக்கு என்ன குறையுண்டு? கூறுங்கள், களையலாம்!"** என்றான்.

"தாங்கள் இருக்கும்போது எங்களுக்கு என்ன குறை? அப்படியே இருந்தாலும் நாங்கள் உங்களிடம் கூறிவிடுவோம். தற்போதைக்கு எதுவுமில்லை!" என்று மரியாதையாக தெரிவித்தார் ஒர் அதிகாரி.

அடுத்ததாக ஒரு குண்டைத்தூக்கிப் போட்டான் அமீன்; **"உங்களுக்கு குறை இல்லை, எனக்குக் குறை இருக்கிறது. அதைத் தீர்க்கும் மருந்து உங்கள் கையில் இருக்கிறது!"** என்றான்.

அதிகாரிகளுக்குப் புரியவில்லை. ஆளை ஆள் பார்த்தனர்.

**"நாளை பட்டமளிப்பு விழா என்று கூறினீர்கள். என்கையால் டாக்டர் பட்டம் வழங்குமாறு கூறினீர்கள். ரொம்ப சந்தோசம். டாக்டர் பட்டம் வழங்கும் நானே ஒரு டாக்டராக இருந்தால் என்ன?"**

அமீனின் கேள்வியால் அறையப்பட்ட அதிகாரிகளுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை.

'இடி அமீனுக்கு டாக்டர் பட்டம் கொடுத்தால் பல்கலைக்கழகத்தின் தகுதி என்னாவது?' என்று யோசித்தனராயினும் வெளியே கூறப்பயந்தனர்.

அவர்கள் தயங்குவதைப் பார்த்த இடி அமீனுக்கு கோபம் வந்துவிட்டது. "யார் அந்த டாக்டர் பட்டத்தை தயாரிக்கும் அதிகாரி?" என்றான்.

அதிகாரிகள் சிலர் எழுந்து நிற்க, எச்சரிக்கும் தொனியில் எழுந்தது அமீனின் குரல்: **"நாளையே எனக்கு டாக்டர் பட்டம் தேவை. உடனே தயார் செய்யுங்கள். சகல பத்திரிகைகளுக்கும் தகவல் கொடுத்துவிடுங்கள்!"** என்றான்.

மறுபேச்சு பேசினால் மறுநொடி விடுவதற்கு மூச்சே இருக்காதே என்பதால் அதிகாரிகள் அனைவரும் தலைகளை பலமாக ஆட்டினார்கள்.

அன்றிரவே டாக்டர் பட்டத்துக்குரியவர் அணியும் ஆடைக்கு அளவெடுத்து, இரவிரவாக தைத்து முடிக்கப்பட்டது.

இடி அமீன் தன் வாயால் ஆசைதீர சொல்லிப் பார்த்துக் கொண்டான். **"ஜனாதிபதி டாக்டர் இடி அமீன்!"** சொல்லிப் பார்த்தவன் இடியென்று நகைத்தான்.

அதிகம் படிக்காதவன் என்று படிப்பாளிகள் சிலர் தன்னைக் குறைத்துப் பேசுவதை அமீன் அறிந்திருந்தான். அவர்கள் முகத்தில் கரிபூசிவிட்டதாக எண்ணி பூரித்துப் போனான்.

தன் இரண்டாவது மனைவி வீட்டுக்குச் சென்ற அமீன்: **"டாக்டர் என்று கூப்பிடு!"** என்றான்.

அவள் "டாக்டர்" என்று அழைத்ததும், அவளை தன் கைகளில் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, அப்படியே கட்டிலில் எறிந்தான்.

கட்டிலில் விழுந்தவள்மீது படர்ந்த அமீன் கூறினான்: **"இதற்காகவும் எனக்கு இன்னொரு டாக்டர் பட்டம் தரலாம்!"**



"நிச்சயமாகத் தரலாம்!" என்றாள் அவனை மொத்தமாக அணைத்து முத்தமிட்டபடி.

அமீன் டாக்டர் பட்டம் பெற்ற செய்தியும், டாக்டர் பட்டங்களை தன் கையால் அமீன் வழங்கப்போகும் செய்தியும் பட்டதாரிகள் மத்தியில் சர்ச்சையை உருவாக்கியது.

"டாக்டர் பட்டத்தை சிறுமைப்படுத்தி விட்டது மக்ரரே பல்கலைக்கழகம். எங்களுக்கு டாக்டர் பட்டமே தேவையில்லை!" என்று துணிந்து கூறிவிட்டனர் பட்டதாரிகள்.

**"அப்படியா கூறியிருக்கிறார்கள்?"** என்று கேட்டுவிட்டு, தன் தாடையைத் தடவிக் கொண்டு யோசித்த அமீன், **"பட்டம் வேண்டாம் என்று அவர்கள் என்ன கூறுவது? பட்டம் பெறுவதற்கு அவர்கள் இலாய்க்கு அற்றவர்கள் என்று நீங்களே அறிவித்துவிடுங்கள்!"** என்றான்.

பல்கலைக்கழக அதிகாரிகள் அதற்கும் தலையாட்டினார்கள்.

பட்டம் வாங்க முன்வந்த ஒருசிலருக்கு தன் கையால் பட்டம் வழங்கியதுடன், பட்டமளிப்பு விழாவிலும் அதற்கான உடையோடு மிடுக்காகக் கலந்துகொண்டான்.

விழாவில் 'டாக்டர் இடி அமீன்!' என்று உச்சரிக்கப்பட்டபோதெல்லாம் அமீனின் முகத்தில் மகிழ்ச்சி எட்டி எட்டிப் பார்த்தது.

தன் அந்தரங்கச் செயலாளர் சியம்பாவிடம்



பட்டமளிப்பு விழாவில்

அமீன்: **"இந்த உலகில் வாங்கமுடியாதது எதுவும் இல்லை. அதிகாரபலம் கையில் இருந்தால் போதும்!"** என்றான்.

**"இன்று இரவு என் உரை வானொலியில் ஒலிபரப்பாகப்போகிறது. கேட்டுப்பாரும். கதிகலங்கப்போகிறீர்!"** என்று சிரித்தான் அமீன்.

அன்றிரவு வானொலியைக் கேட்ட சியம்பா மட்டுமல்ல, உகண்டா மக்களும் கதிகலங்கித்தான் போனார்கள்.

**"இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்த அரபு நிலங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும். உகண்டாவிலும் இஸ்ரேல் நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் ஷிலிங் பணத்தை ஏப்பமிடுகிறது. இஸ்ரேல் என்ற பெயர் உலகில் உச்சரிக்கப்படாமல் அழித்தொழிக்கப்படவேண்டும்!"** என்று முழங்கிய இடி அமீன்; **"இஸ்ரேலர்கள் உகண்டாவை விட்டு ஒடிவிடவேண்டும்!"** என்றும் அறிவித்தான்.

உகண்டாவில் இருந்த இஸ்ரேலிய நிறுவனங்களில் பணியாற்றிய உகண்டா குடிமக்கள் பலர் வேலை இழக்கப்போவதையிட்டு அமீன் துளியும் கவலைப்படவில்லை.

லிபியாவுக்கு அமீன் சென்று வந்த பின்னர், உகண்டாவில் இருந்த இஸ்ரேலியர்கள் உஷாராகவே இருந்தனர்.

உகண்டாவில் இருந்த தமது தொழிற்சாலைகளின் பெரும் இயந்திர சாதனங்களை கென்யா நாட்டுக்கு கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

**"உகண்டாவில் இருந்து இயந்திர சாதனங்களோ, வாகனங்களோ எல்லை தாண்டினால், அழித்தொழிக்கப்படும்!"** என்று அறிவித்தான் அமீன்.

1972 மார்ச் மாத இறுதியில் உகண்டாவில் இஸ்ரேலியர்கள் எவரும் இல்லை. அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

அமீன் எடுத்த நடவடிக்கையை அரபு நாடுகள் வரவேற்றன. லிபியா அதிபர் கேனல் கடாபி மனம் திறந்து பாராட்டினார்.

முன்னரே ஒப்புக்கொண்டபடி அமீனுக்கு பெரும் நிதி உதவி செய்தது லிபியா.

**"லிபியாவின் உதவி மட்டும் எமக்குப் போதாது. பிரிட்டனிடம் கேட்டுப் பார்க்கலாமா?"** என்று சியம்பாவிடம் கேட்டான் அமீன்.

லிபியா செய்யும் உதவிகள் இடி அமீனதும், அவனது சுற்றத்தினரின் ஆடம்பரமான செலவுகளால் கரைந்து கொண்டிருந்தது.

புதிதாக ஆயுதம் வாங்குவது என்று கூறிக்கொண்டு இடி அமீனின் உறவினர்கள் சிலர் கோடி கோடியாக விழுங்கிக்கொண்டிருந்தனர்.

இவையெல்லாம் சியம்பாவுக்குத் தெரிந்தே இருந்தன. **"பிரிட்டன் நிதி உதவி செய்யத் தயாராக இருக்கிறது!"** என்று கூறிவிட்டு சியம்பா தயங்க: **"சபாஷ், நல்ல செய்திதானே, அதை ஏன் சவ்வு மாதிரி இழுக்கிறீர்?"** என்றான்.

**"தருவார்கள், ஆனால் கணக்கும் கேட்பார்கள். எந்தத் திட்டத்துக்கு செலவாகிறது என்ற விபரங்களும் தரவேண்டியிருக்கும்!"** என்று சியம்பா சொன்னதும், அமீனின் முகம் சுருங்கிப்போனது.

நாற்காலியைப் பின்னுக்கு தள்ளிக்கொண்டு அவன் எழுந்த வேகத்திற்கு சியம்பா பயந்தார்.

**"பிரிட்டிஷ்காரர்களையும் இங்கிருந்து வெளியேற்ற வேண்டியதுதான். அமீன் யாரென்று காட்டுகிறேன். உமக்கு 24 மணிநேரம் போதிய அவகாசம் தருகிறேன். உகண்டாவில் இருக்கிற அந்நியர்கள் யார், எவர்கள், எத்தனைபேர், என்ன செய்கிறார்கள்? போன்ற விவரங்களை விரல் நுனியில் கொண்டுவாரும்!"**

அப்படிக் கூறிவிட்ட பின்னர், அமீனுடன் மேற்கொண்டு பேசுவதில் அர்த்தமில்லை என்பது சியம்பாவுக்குத் தெரியும்.

அமீனின் முடிவால் ஏற்படப்போகும் பொருளாதார நஷ்டம் பயங்கரமாக இருக்கப்போகிறது என்பதும் சியம்பாவுக்கு நன்கு தெரிந்திருந்தது.

அடுத்த சில நாட்களில் அமீன் செய்த காரியங்கள் சியம்பாவை மட்டுமன்றி, அனைவரையும் கவலைப்பட வைத்தன.

*(இடி தொடரும்)*

தருவது

ரசிகன்

# ஜடேஜாவின் நண்பிகள்

இந்திய கிரிக்கெட் நட்சத்திரங்களில் நடிகைகளோடு சுற்றித்திரியும் காதல் மன்னர் என்று பெயரெடுத்தவர் அஜய் ஜடேஜா.



'மனிதர் படு குறும்புக்காரர். அதுதான் நடிகைகள் அவரிடம் ஐஸாக உருகிப்போகிறார்கள். அவரது அழகான மூக்கில்தான் பலருக்கு ஒரு கண்!' என்று கிரிக்கெட் வீரர் ஒருவர் கூறினாராம்.

இந்திப்பட நடிகை சோனாலி பெந்ரேயுடன் ஜடேஜா கூத்தடித்தது பிரபலமான சங்கதி.

அதற்கு அடுத்தது தபு. இந்திய தேசிய விருது பெற்ற தபுவுக்கு ஒரு கட்டான காதலரும் இருக்கிறார்.

அப்படியிருந்தும் ஜடேஜாவில் தபுவுக்கு ஒரு கிறக்கம். இருவரும் அடிக்கடி ஒன்றாகக் காணப்பட்டனர்.

எந்த நடிகையுடனும் ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் குலாவுகிறார் ஜடேஜா. பின்னர் கத்தரி போட்டுவிடுவார்.

சோனாலி, தபு, இப்போது லேட்டஸ்டாக மாதுரி டிக்ஷித். ஜடேஜாவுக்காக இந்திப் படமொன்றில் நடிப்பதற்காக படத் தயாரிப்பாளர் ஒருவரிடம் சிபாரிசும் செய்துள்ளார் மாதுரி.

இந்திப் படவுலக நம்பர் வன் நடிகையே சிபாரிசு செய்யும்போது மறுப்பதற்கு எந்தத் தயாரிப்பாளருக்கு தைரியம் வரும்.

ஆனாலும் ஜடேஜா யோசிக்கிறார். "சினிமா நடிகர்களை மார்க்கெட் விழுந்தால் யாரும் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள். கிரிக்கெட் வீரர்களுக்கு உள்ள மவுசுக்கு ஆயுள் அதிகம்!" என்று கூறுகிறார்.

தன்னுடன் இணைத்துப் பேசப்படும் நடிகைகள் பற்றிய கேள்விக்கு: "நடிகைகள், மொடல் அழகிகள் போன்றோர் எனக்கு நண்பிகள். அவர்களுடன் சேர்ந்து விருந்துண்டால்கூட வேறு மாதிரி கதைகட்டி விடுகிறார்கள்," என்கிறார்.

"ஆனால் ஜடேஜா வெறும் விருந்தோடு மட்டும் நிறுத்திக் கொள்ளக்கூடியவரல்ல!" என்கிறார்கள் அவரை அறிந்தவர்கள்.

ஜடேஜா ஒரு விளையாட்டுப் பிள்ளை. அதனால் காதலிகள் பட்டியல் மேலும் நீளலாம்.

# கிலாரிக்கும் பெப்பே

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனின் காதல் லீலை விவகாரம் முடிந்தபாடாக இல்லை.



மோனிகாவுக்கும் கிளின்ரனுக்கும் எப்படியான உறவுகள் இருந்தன, என்பதை பத்திரிகைகள் துருவி அறிகின்றன.

வெள்ளை மாளிகையில் கிளின்ரனின் மடியில் மோனிகா தவழ்ந்து கொண்டிருந்தபோது, கிலாரி ஃபோன் பண்ணியிருந்தாராம்.

"இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கிலாரி கேட்க, சற்றுத் தடுமாறிய கிளின்ரன் மோனிகாவின் தலைமுடியை கோதிவிட்டபடி "முக்கியமான ஃபைல் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!" என்று கூறினாராம்.

இப்படியான கிளு கிளு கதைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார் மோனிகா.

"கிளின்ரனுக்கும் கிலாரிக்கும் இடையே பிரிவை ஏற்படுத்த கிளின்ரனின் எதிரிகள் முயற்சிக்கிறார்கள். அது நடவாத காரியம்." என்று கிளின்ரனின் நண்பர்கள் கூறுகின்றனர்.

"கிலாரி மிகவும் உற்சாகமாக இருக்கிறார். முன்பைவிட கிளின்ரனுக்கு ஒத்தாசையாக இருக்கிறார்!" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

# சாமியார்கள் கும் கும்

தமிழ்நாட்டில் சாமியார்கள் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. யாகாவா முனிவர் என்றொரு சாமியார். நடிகர் ரஜினிகாந்த்தும் இவரை நம்பி குறி கேட்டார்.



'நான் ஒரு தீர்த்தம் கொடுத்தேன். அதனால் தினமும் காலையில் முகம் கழுவினார் ரஜினி. ஒருவாரத்தின் பின்னர் ரஜினி என்னிடம், 'இப்போ நன்றாக இருக்கிறேன்' என்று கூறினார் என மார்தட்டுகிறார் யாகாவா முனிவர்.

இவரது பூர்வீகத் தொழில் போதை மருந்துக் கடத்தல். ஒரு கொலையும் செய்திருக்கிறார். பின்னர் எப்படியோ சாமியாகிவிட்டார். ஆனாலும் காவி கிடையாது.

இன்னொரு சாமியார் பெயர்: சிவசங்கர் பாபா. இவரை 'டான்ஸ் சாமியார்' என்று அழைக்கின்றனர்.

கட்டடம் கட்ட வங்கியில் கடன் வாங்கினார். திருப்பிக் கேட்டபோது 'சிவசங்கர் எப்போதோ செத்துப்போனான். இப்போது இருக்கும் நான் கடவுள், என்று ஒரே போடாகப் போட, வங்கி நிர்வாகம் முடியைப் பிய்த்துக்கொண்டு அலைகிறது.

டான்ஸ் ஆடியபடியே இளம் பக்தைகளைக் கட்டியணைப்பது, தொட்டுப் பார்ப்பது போன்ற சில்மிஷங்களில் ஈடுபடுவார் சிவசங்கர் பாபா.

சிலர் இவரிடம் தெரியாமல் செல்கின்றனர். சிலர் தெரிந்தே செல்கின்றனர்.

இரு சாமியார்களும் ஒருத்தரை ஒருத்தர் கடுமையாகச் சாடி வந்தனர். அதனால் கலைஞர் கருணாநிதியின் குடும்ப சஞ்சிகையான குங்குமம் இருவரையும் ஒரே இடத்தில் இருத்தி விவாதம் செய்ய வைத்தது.

விவாதத்தில் தீப்பொறி கிளம்பியது. பொறுக்கமாட்டாத யாகாவா முனிவர் பாய்ந்து சென்று சிவசங்கர்பாபாவுக்கு குத்துக் கொடுத்தார். நடுவே இருந்த நிருபர்-நடுவர் வேலை பார்த்திருக்காவிட்டால் சிவசங்கர் பாபாவின் கதை கந்தலாகியிருக்கும்.

இந்த மோதல் காட்சி வீடியோவிலும் படமாக்கப்பட்டது. விவாதத்தைப் பதிவு செய்யச் சென்றவர்களுக்கு மோதல் காட்சி போனஸாகக் கிடைத்தது.

இரண்டு சாமியார்களுமே ஏமாற்றுப் பேர்வழிகள். இருவரும் மோதிக்கொள்வதால் பல உள்சமாச்சாரங்கள் அவர்கள் வாயில் இருந்தே கொட்டுகின்றன.

# காதல் கதை

இளவரசி டயானாவின் காதலரான டோடி ஃபயட்டின் தந்தையான முகமட் அல் ஃபயட் சொந்தமாக இண்டர் நெட் அலைவரிசை ஒன்றை ஆரம்பித்துள்ளார்.



அந்த அலைவரிசையில் டோடியின் புகைப்படங்களுடன், டோடி-டயானா காதல் கதையும் ஒளிபரப்பாகிறது.

மூன்று தலைப்புக்களில் டோடி, டயானா பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

'டோடியுடன் இளவரசியின் உறவும் மரணமும்', 'காதல் விவகாரம்', 'ஆகஸ்ட் 31ம் விடை காணமுடியாத வினாக்களும்' ஆகிய மூன்று தலைப்புக்களிலேயே தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

பிரிட்டிஷ் மகாராணியுடன் கடும் கோபம் கொண்டுள்ளார் டோடியின் தந்தை. இண்டர் நெட் அலைவரிசை ஆரம்பித்து டோடி, டயானா காதல் கதையை ஒளிபரப்பு வதும் அந்த கோபத்தில்தான். பிரிட்டிஷ் அரச குடும்பமே டோடியும், டயானாவும் பலியாகக் காரணம் என்று இன்னமும் நம்புகிறார் டோடியின் தந்தை.


www.padippakam.com



## சிதறாத ஓட்டம்

ஹொட்டல்களில் உணவு பரிமாறும் சர்வர்கள் வேகமாக சுழன்று பணியாற்ற வேண்டும். இல்லையானால் வாடிக்கையாளர்கள் வாடிப்போய் வேறு ஹொட்டலுக்கு வழி கேட்பார்கள்.

ஹொங்கொங் நகரில் சர்வர்களுக்கான ஓட்டப் பந்தயம் வைப்பார்கள். தட்டில் உள்ள போத்தலிலும், கோப்பைகளிலும் மது நிறைந்திருக்கும். ஒரு துளிகூட சிதறாமல் ஓடிமுடித்து முதலிடம் பெறுபவர்தான் சர்வர் சக்கரவர்த்தி. படத்தில் இருப்பவர்தான் அந்த சக்கரவர்த்தி. பயிற்சியு மாகிறது. பரிசும் கிடைத்தது. இதுவும் 'டு இன் வன்'தான்!



## புகையில்லாத கார்


ஒன்றில் இரண்டு உபயோகம் அதாவது டு இன் வன் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அப்படியான கார் இது. மின்சாரத்திலும் ஒடும். மின்சாரம் தீர்ந்துபோனால் சேமித்து வைத்துள்ள சூரியஒளி மூலமான மின்சாரத்தில் ஒடும். சூரிய ஒளியை சேகரித்து வைப்பதற்காக காரின்மேலே சோலார் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மன் போன்ற நாடுகளில் இந்தக் கார்கள் தயாரிக்கப்பட உள்ளன. முக்கிய சமாச்சாரம் யாதெனில்; இக்கார்கள் புகை விடமாட்டா. அதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு இருக்காது. நம் நாட்டில் சில வாகனங்கள் சென்றால், நாமெல்லாம் முகமூடித் திருடர்கள் மாதிரி முகத்தை மூடிக்கொண்டுதான் போக வேண்டியிருக்கிறது.

## அமரக் காதல்

'கண்ணோடு மணியானாய், கண்ணைவிட்டு பிரிவதில்லை' என்று மனிதர்கள்தான் காதலிக்கலாமா? யானைகளும் காதலிக்கும். அன்பு முத்தம் இட்டுக்கொள்ளும். ஆனால் இவை உயிருடன் உள்ள யானைகள் அல்ல. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து காதலித்து மடிந்த யானைகள். இந்த யானைகளின் காதலால் நெகிழ்ந்த அந்தக்கால சிற்பி ஒருவர் சிலையாக வடித்து வைத்தாராம். அதனால் நிலையாக நின்று நம் கண்களுக்கும் விருந்தாகிவிட்டன. இதுவும் அமரக் காதல்தான்.

இந்த யானைகளின் கொம்புகள் மிக நீளமானவை என்பது மற்றொரு ஆச்சரியம்.



## ஒற்றுமை உயர்த்தும்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு' என்பது முதுமொழி. உண்மைதான். ஒன்றுபட்டதால் எவ்வளவு உயரம் போய்விட்டனர் பாருங்கள்.

ஸ்பெயின் நாட்டில் உள்ள அர்போடெல் பெனடிஸ் என்னும் கிராமத்தில் பலர் ஒன்றுகூடி உருவாக்கிய மனிதக் கோபுரம் இது. 45 அடி உயரம்வரை கோபுரமாக உயர்ந்து நின்று அசத்தி விட்டார்கள்.



## தகவல் பெட்டி

கையால் பந்தை அடித்து விளையாடுவது கைப்பந்து. காலால் பந்தை உருட்டியும், அடித்தும் விளையாடுவது கால்பந்து. அதில் ஒரு திருத்தம். கையால் விளையாடும் கால்பந்து விளையாட்டும் அறிமுகமாகியுள்ளது.

பில்லியர்ட்ஸ் மேஜையில் கால்பங்கே இருக்கும் இந்த மைதானத்தில் இரு அணிவீரர்கள், கோல் கீப்பர் ஆகிய பொம்மைகள் இருக்கும். தனித்தனியாக கைப்பிடிகள் உள்ளன. இருபுறமும் நின்று விளையாடும் இருவரும் கைப்பிடிகளை அசைத்து விளையாட வேண்டும். பந்தை கோலுக்குள் செல்லவிடாமல் பொம்மை வீரர்களை பயன்படுத்தி தடுக்க வேண்டும்.

இந்த விளையாட்டை உலக விளையாட்டுக் கழகமும் அங்கீகரித்துள்ளது. உலகெங்கும் பிரபலமாகியுள்ளது.

## கையால் கால் பந்து







## பெரிய ரிக்கெட்

ஹொலண்ட் நாட்டில் ஆண்டுதோறும் கண்பார்வையற்றோருக்கான நீச்சல் போட்டிகள் நடக்கின்றன. லயன்ஸ் கழகம் இதனை நடத்தி வருகிறது.

இந்த நீச்சல் போட்டி மூலமாக 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்வரை வருமானமாக திரளும். அதனை கண்பார்வை இல்லாதோரின் சிகிச்சைகளுக்கு செலவிடுகின்றனர்.

சமீபத்தில் நடந்த நீச்சல் போட்டியில் மீனாக தாவி முதல் பரிசை வென்ற பெண்மணிதான் புன்னகை மின்னிட காட்சி தருகிறார். இலவச விமான ரிக்கெட் ஒன்று பரிசாக தரப்படுகிறது. ஒரு வித்தியாசமாக இருக்கட்டும் என்று மிகப் பெரிய ரிக்கெட்டாக செய்து வழங்கினார்கள். உலகிலேயே மிகப் பெரிய விமான ரிக்கெட் இதுதான்.



## நினைவுச் சின்னம்

ஈராக்மீது அமெரிக்கா உட்பட அதன் கூட்டாளிநாடுகள் போர் தொடுத்தபோது; ஏவுகணைத் தாக்குதலால் பாக்தாத் விமான நிலையம் சேதமானது.

தற்போது அந்த இடத்தில் தாக்குதலின் நினைவாக புதிய பள்ளிவாசல் ஒன்றை சதாம் ஹுசைன் கட்டிவருகிறார். அதன் மொடல்தான் இது.

கீழே பெரிய தண்ணீர் தடாகம் அமைத்து அதன்மேலே பலதூண்களை நிறுத்தி நவீன வசதிகளுடன் இந்த பள்ளிவாசல் எழப்போகிறது. அதற்கு 'சர்தாம் மஜ்ஜித்' என்று பெயரும் சூட்டியாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 71

# ரஜினியின் அதிரடியான பதில்

## அறிவிப்பாளரினியின் கஷ்ட காலம்

தமிழ் நாட்டில் சினிமா உலக மூத்த பத்திரிகையாளர் எஸ். விஜயன். ரஜினியுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றி சுவாரசியமாக விபரிக்கிறார்.

"ரஜினியின் பேட்டியை எடுக்க பலமுறை முயன்றும் அவர் பிடிகொடாமல் நழுவிக் கொண்டிருந்தார்.

'புதுக் கவிதை' படப்பிடிப்பில் ஒவ்வொரு ஷாட் இடைவெளியிலும் அங்குள்ள சோபாவில் படுத்துக் கொண்டு கைக்குட்டையால் கண்களை மூடிக்கொண்டார். இதைக் கவனித்தபடி காத்திருந்த நான், அடுத்தமுறை அவர் சோபாவில் சாய்வதற்கு முன்பாக அருகே சென்று பேட்டியை நினைவு படுத்தினேன்.

"இப்ப நான் பிஸியாக இருக்கேன்" என்று கூறியபடியே கைக்குட்டையால் கண்களை மூடிக்கொண்டார்.

'புதுக் கவிதை' படம் வெளிவந்தது. அதைப்பார்த்த போது அதில் சோகக்காட்சிகளில் ரஜினி மூக்கை உறிஞ்சுவதுபோல ஒரு மானரிஸம். அவர் வித்தியாசமாக நடித்த படங்களில் அதுவும் ஒன்று.

'அந்தா கானூன்' (சட்டம் ஒரு இருட்டறையின் இந்தி பதிப்பு) இந்தி படத்தில் ஹேமமாலினியுடன் நடித்துக்கொண்டிருந்தார் ரஜினி.

படப்பிடிப்பு இடைவேளையில் வேகமாக வந்து மூங்கில் சேரில் அமர்ந்திருந்தார். அருகில் சென்று வணக்கம் கூறிவிட்டு 'புதுக் கவிதை' யில் அவர் செய்த மானரிஸத்தை சொல்லி பாராட்டினேன். நான் முடிக்க முன்பாகவே 'தொந்தரவு பண்ணாதீங்க' என்று கைக்குட்டை இல்லாமலேயே கண்ணை மூடிக்கொண்டார்.

'சன்' என்ற ஆங்கில வார இதழுக்கு ரஜினி ஒரு பேட்டியளித்திருந்தார். அதில் குதிரையின் குணாதிசயங்கள் தன்னை கவர்ந்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். அதை மொழிபெயர்த்து சுஜாதா இதழுக்கு எழுத, அது வெளியாகி இருந்தது. அதனை எடுத்துக்கொண்டு ரஜினியிடம் சென்றேன்.

ஏ.வி.எம்.மில் 'எங்கேயோ கேட்ட குரல்' படப்பிடிப்பில் இருந்த ரஜினியிடம் சுஜாதா இதழைக் கொடுத்தேன். அதைப் படித்துவிட்டு சிரித்தார்.

"சார் பேட்டி" என்றதும் புன்னகை மாறாமல் "நாளைக்கு இதே நேரத்தில் வாருங்கள்" என்று பதில் கூற எனக்கு பெரும் ஆனந்தம்.

### ரஜினியின் பதில்

மறுநாள் கேள்விகளை எழுதிவைத்துக்கொண்டு அதே படப்பிடிப்பில் சந்தித்தேன். செட்டுக்குள்ளேயே பேசலாம் என்று அங்கிருந்த கதிரையில் அமரச் சொன்னார். அருகில் வந்து அமர்ந்தவர். "டக் டக்குன்னு கேட்கணும் என்ன?" என்றார் தனக்குரிய ஸ்டைலில்.

நான் கேட்ட கேள்விகளுக்கு வரிசையாக பதில் சொல்லிக்கொண்டே வந்தார். தடங்கல் ஏதுமில்லை. ஆனால் உங்கள் பொழுதுபோக்கு என்ன? என்ற கேள்வியை சுற்றிவளைத்து "படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதும் அவர் சொன்ன பதில் எனக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்திவிட்டது.

"படப்பிடிப்பு இல்லாத நேரத்தில்தானே?" என்று கேட்ட ரஜினி, அதே வேகத்தில் "தண்ணிபோடுவேன், பொம்பளைங்களோட கூத்தடிப்பேன்..." என்று அடுக்கிக்கொண்டே போனார். சற்று நிதானித்துவிட்டு "இப்படியான கேள்வியெல்லாம் ஆரம்பத்தில் நிறையப் பேர் கேட்டதாலேதான் எனக்கு எரிச்சல் ஏற்பட்டது. அவர்களை கத்தியெடுத்து குத்திடலாம் என்று கூடத் தோன்றும்..." என்றவர் மீண்டும் வேகத்துடன், "படப்பிடிப்பு இல்லாதபோது நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். அது என்னோட பர்சனல் மேட்டர். அதெல்லாம் உங்களுக்கு எதற்கு? சொல்லுங்க!" என்று என்னையே திருப்பிக் கேட்டார்.

நான் அதற்கு வருத்தம் தெரிவிப்பதுபோல மௌனமாக இருந்துவிட்டேன். அதை ரஜினியே கலைத்து "மேலே கேளுங்க" என்றார். பேட்டி முடிந்ததும் சிரித்தபடியே கைகொடுத்தார்." என்று விபரித்திருக்கிறார் விஜயன்.

### மிரட்டல்

வெளிநாடு ஒன்றில் நட்சத்திர கலைவிழாவில் பிரபல அறிவிப்பாளரினியுடன் 'காதல் கோட்டை' குமார நடிகர் உல்லாசமாக இருந்தார் என்பது இப்போது பரகசியமாகிவிட்டது.

'சூரியன்' தொலைக்காட்சியில் குளிர்பான அறிவிப்பாளராக தொலைபேசியில் உரையாடுபவர் அந்த அறிவிப்பாளரினி.

அன்று இருந்த 'ரூட்'டில் நடிகருக்கு இடம் கொடுத்து விட்டாராம். நடிகருக்கு அன்று 'செமகிக்'. "இத்தோடு இதனை மறந்துவிடவேண்டும். நாடு திரும்பிய பின்னர் நம் நட்பு வேண்டாம்." என்று அறைக்குள் சத்தியம் வாங்கினாராம் அறிவிப்பாளரினி.

தன் காதல் நடிகையுடன் சிறு பிரிவு ஏற்பட்ட சமயத்தில் அறிவிப்பாளரினியை அழைத்து தொல்லை கொடுத்...

இந்த மாதிரியான காரண... பங்களாவிற்கு அழைத்திருக்கி... னால் வெளியே தெரிந்துவிடும்... நடிகர் வெறுப்புடன் மிரட்டி...

'நான் எதையும் வெளிப் ப... நம்ம கதையையும் சொல்லிவிட... பங்களாவுக்கு சென்று சில ந...

ஒருநாள் ஆசையால் பல... விப்பா...



## திரும்பி வந்தார் நக்மா

சரத்குமாருடன் நெருக்கம் தளர்ந்து மும்பாய் போய் பதுங்கி இருந்தார் நக்மா.

சரத்குமார் கொடுத்த பங்களாவையும், விலை உயர்ந்த கார் போன்ற பரிசுகளையும் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டார் நக்மா. அதற்கு சரத்குமார் பழிவாங்கலாம் என்று பயந்துதான் மும்பாய்க்கு ஓட்டம் பிடித்தார்.

'நக்மாவுடன் இருந்த நாட்களை மறக்கமுடியாமல் தான் நான் தவிக்கிறேன். அந்த உடலுக்கு நான் தீங்கு செய்வேனா?' என்று நடிகர் உருக்கமாக கூறினாராம்.

அத்தகவல் நக்மா காதுக்கும் போனது.

அந்த துணிச்சலில்தான் மறுபடி தமிழ் நாட்டுக்கு திரும்பியுள்ளார்.

நெப்போலியனுடன் 'மாயா' என்ற படத்தில் ஜோடியாக நடிக்கிறார். ராம நாராயணன் இயக்கும் படம் 'மாயா.'

**முகப்பில்**

சுவலட்சுமி-நெப்போலியன்
படம்: பொன்விழா

ரேஷ்மா
படம்: கண்ணாத்தாள்



## கிடைத்தது எப்படி?

ரஜினியின் அடுத்த படத்தில் நடிக்க சௌந்தர்யா வாய்ப்பு பெற்றது எப்படி?

தெலுங்கு மாநிலத்தில் பிரபல நடிகர் மோகன்பாபுவும் ரஜினியும் நண்பர்கள். தெலுங்கு நாட்டாமையில் மோகன்பாபுவுக்காக கௌரவ வேடத்தில் நடித்திருந்தார் ரஜினி.

மோகன்பாபுவுடன் சௌந்தர்யாவுக்கு ஒட்டுதல் அதிகம். ரஜினியின் அடுத்த படத்திலும் தனக்கு வாய்ப்பு பிடித்துத் தருமாறு மோகன் பாபுவை பிடித்துக் கொண்டார் சௌந்தர்யா.

மோகன்பாபுவின் சிபாரிசை தட்ட முடியாமல்தான் சௌந்தர்யாவுக்கு வாய்ப்பு கிடைத்ததாம். பிடிக்கவேண்டிய இடத்தில்தான் பிடித்திருக்கிறார்.



## சுவலட்சுமியின் சிக்கல்
## ஒட்டுண்ணியான காதலர்

நடிகை சுவலட்சுமி அடக்கமான நடிப்புக்கு பெயர் பெற்றவர். 'ஆசை' படத்தின் மூலம் தமிழ்ப்பட ரசிகர்களின் உள்ளம் கவர்ந்தவர்.

சட்டப்படிப்பு படித்துவரும் சுவலட்சுமிக்கு அவரது மனேஜரிடமிருந்து சிக்கல்.

சுவலட்சுமியின் பட விவகாரங்களை கவனித்தவர் சுவலட்சுமியையும் கவனிக்கத் தொடங்கினார். சுவலட்சுமிக்கும் அவரது ஆதரவுக்கரம் தேவைப்பட்டது. அதனால் கரம் நீள அனுமதித்தார்.

ஒரு கட்டத்தின் பின்னர் தன் மனேஜர்மீது சுவலட்சுமிக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. தனது பணத்திற்காகத்தான் காதலிக்கிறாரோ? என்று நினைத்தார்.

சட்டப்படிப்புக்காக படங்களை குறைவாக ஒப்புக்கொண்டதை மனேஜர் கண்டித்தாராம். "கட்டுப்பெட்டித்தனமாக இருந்தால் முன்னேறமுடியாது சில படங்களில் அளவோடு கவர்ச்சி காட்டலாம் தப்பில்லை" என்றும் கூறினாராம்.

தனது சந்தேகம் உறுதியானதால் மனேஜரைகழற்றிவிட நினைத்தார் சுவலட்சுமி. ஆனால் அவரோ ஒட்டுண்ணியாக இருக்கிறார். அதனால் நிம்மதி இழந்து கண்ணீர்விடும் சுவலட்சுமி, சில ஹீரோக்களின் உதவியை நாடியுள்ளதாக தெரிகிறது.

## விஜய் உரை

'நினைத்தேன் வந்தாய்' படத்தின் நூறாவது நாள் விழாவில் விஜய் ஆற்றிய உரையில் சில துளிகள்:

"தொடர்ச்சியாக எனக்கு வெற்றி தந்து கொண்டிருக்கும் ரசிக, ரசிகைகளுக்கு எனது நன்றி. 'நினைத்தேன் வந்தாய்' கதை கேட்டபோதே இந்தப் படம் வெற்றிப்படமாகும் என்று நினைத்தேன்.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படமாயிற்றே, இதில் போயா நடிக்கிறீர்கள்? என்று என்னிடம் சிலர் கேட்டார்கள். எல்லாப் படமும் ஹீரோயிசம் சப்ஜெக்ட் கொண்ட படங்களில் நடிக்கிறோம். ஹீரோயின் சப்ஜெக்ட் கொண்ட படத்தில் நடிப்பது என்ன தவறு? என்று நடித்தேன். எனக்கு கதைதான் முக்கியம்!"

## படியளக்கிற ராசா

'என் ஆச ராசவே' படத்தில் சிவாஜி கணேசனை நடிக்கவைத்தார், கஸ்தூரி ராஜா. படத்தையே சிவாஜிதான் காப்பாற்றியிருக்கிறார். இப்போது தனது அடுத்த படத்திலும் சிவாஜியை நடிக்க அழைத்துள்ளார். படத்திற்கு 'படியளக்கிற ராசா' என்று பெயர் சூட்டியுள்ளார். சிவாஜி, பிரபு, நெப்போலியன் ஆகியோரை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.


படிப்பகம்

தாராம் நடிகர்.
ங்களுக்காகவே நடிகர் வாங்கிப் போட்டுள்ள ரார். சொந்த ஊரிலேயே நடிகருடன் பழகி என்று பயந்த அறிவிப்பாளரினி மறுப்புக் கூற. ாராம்.
டையாக பேசபவன் என்று பெயர் இருக்கிறது. ா?' என்றாராம். பதறிப்போன அறிவிப்பாளரினி ட்கள் நடிகரை குளிர்வித்தாராம்.
ாள் அவஸ்தைப்படுகிறார் குளிர்பான அறி ாரினி.

## ஹொலிவூட் இயக்குநர்

கமலின் 'மருதநாயகம்' பட வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகின்றன. மருதநாயகம் கமல் இயக்கும் படம் என்பது தெரிந்த செய்தி.

இப்போது ஹொலிவூட்டிலிருந்து ஒரு இயக்குநரை அழைத்து அவரிடம் பிரமாண்ட காட்சிகளை படமாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ரம்பா ராசி

ரம்பாவுடன் சுந்தர்.சி. மறுபடி சமரசம் செய்து கொண்டதற்கு சென்டிமெண்ட்டும் ஒரு காரணம்.

ரம்பா நடித்து சுந்தர் இயக்கிய படங்கள் எல்லாமே பெரும் வெற்றி பெற்றன.

ரம்பாவை தூக்கிப் போட்டுவிட்டு சுந்தர் இயக்கிய 'நாம் இருவர் நமக்கு இருவர்' தோல்விப்படம்.

அதனால்தான் ரம்பாவை மறுபடி தட்டிக்கொடுக்க தொடங்கி விட்டார் சுந்தர். குஷ்புவுக்குத்தான் கொஞ்சம் வருத்தம்.

பிரசாந்த்-சிம்ரான்
படம்: கண்ணெதிரே தோன்றினாள்

## மினி சினி

* அரவிந்தசாமிக்கு ஜோடியாக 'என் சுவாசக்காற்றே' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகும் இஷாகோபிகர், அப்படம் வெளியாகும் முன்னரே ஷங்கர், அகத்தியன் இயக்கும் புதிய படங்களில் கதாநாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார்.



ஜோதிமீனா

* கோடி ராமகிருஷ்ணா இயக்கிய 'பொலிஸ் லாக்கப்' என்ற தெலுங்குப்படத்தில் இரட்டை வேடத்தில் நடித்துள்ள விஜய்சாந்தி, தற்போது 'பாரத ரத்னா' என்ற தெலுங்குப் படத்தில் இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார்.

* சுந்தர்.சி. இயக்கத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடித்து வரும் 'அத்தை மகன்' படத்திற்கு சிற்பி இசையமைக்கிறார். இவரது இசையமைப்பில், மலையாள இசையமைப்பாளர் ஒசபச்சான் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

* சத்யராஜின் முன்னாள் மனேஜர் ராமநாதன் தயாரிப்பில் பிரபு தேவா கதாநாயகனாக நடிக்க 'ஹலோ' என்ற பெயரில் புதிய படமொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஏனோ தெரியவில்லை இப்படம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

* பிரசாந்த் ஐஸ்வர்யாராய் நடித்த 'ஜீன்ஸ்' தெலுங்கில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரசாந்த் நடித்த 'மன்னவா' தெலுங்கிற்கு மொழிமாற்றப்படுகிறது. தெலுங்கில் இப்படத்திற்கு 'ஈஸ்வர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'கண்ணாத்தாள்' என்ற படத்தில் இளையராஜா நடிக்கிறார். இப்படத்தில் 'அம்மன் புகழ்பாட...' என்று தொடங்கும் பாடலை பாடுவது போன்ற காட்சியிலேயே நடிக்கிறார் இளையராஜா.

* கன்னடத்தில் பிரபலமான நாவல் ஒன்றினை அடிப்படையாக வைத்து, 'மஹா ஏடா பிடாங்கி' என்ற படமொன்று உருவாகிறது. இப்படத்தில் எஸ்.பி.பாலசுப்ரமணியம்-குஷ்பு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்கள்.

* சரத்குமார் நடித்த 'சூர்யவம்சம்' படம், இந்தியில் அமிதாப்பச்சன் நடிக்க தமிழில் இயக்கிய விக்ரமன் இயக்குவதாக இருந்தது. தற்போது விக்ரமனுக்குப் பதிலாக 'ஹலோ பிரதர்' போன்ற தெலுங்குப் படங்களை இயக்கிய இ.வி.வி.சத்யநாராயணா இந்தி 'சூர்யவம்ச'த்தை இயக்குகிறார்.

## பெயர் வித்தியாசம்

படத்திற்கு நீண்ட பெயர் வைத்து பிரபலமான மன்சூர் அலிகான் தற்போது கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு சூட்டியுள்ள பெயர்: 'கொல கொலையா முந்திரிக்கா'.

இந்து, ரஞ்சித், வையாபுரி, வடிவேலு, தாமு உட்பட பலர் நடிக்கின்றனர். இயக்கம்: தினகரன், இசை: வாசகன்.



சுவலட்சுமி
படம்: பொன் [illegible]

## விண்கல அழகி

"நான் கீழ்நாட்டு கிளியோபாட்ரா கிட்டே வந்து பழகு.." என்று தொடங்கும் பாடல் 'கோடீஸ்வரன்' படத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்து.

விண்கலத்தில் வந்த பெண்போல இப்பாடல் காட்சியில் தோன்றுகிறார் கரிஷ்மா கபூர்.

குஞ்சு மோனின் மகன் எபி கதாநாயகனாக நடிக்கும் படம் கோடீஸ்வரன். இன்னொரு ஜோடி சிம்ரான். மற்றும் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், நம்பியார் ஜெய்சங்கர், ரகுவரன், அம்பிகா உட்பட பலர் உள்ளனர். இசை: ஆகோஷ். பாடல்கள்: வைரமுத்து. இயக்கம்: மு.நந்தகுமார்.

## குசு குசு பக பக

முரளியும், கௌசல்யாவும் கன்னடக்காரர்கள். வீட்டில் கன்னடத்தில் பேசுவர். இருவரும் இணைந்து நடிக்கும்போது தமக்கிடையே கன்னடத்தில்தான் பேசுவர். குசுகுசுவென்று பேசி பக பகவென்று சிரிப்பார்களாம். இருவரும் தற்போது 'உன்னுடன்' படத்தில் ஜோடியாக நடிக்கின்றனர்.

## பிஸியா ராமன்

வள்ளியில் ரஜினியால் அறிமுகமான கள்ளி பிரியா ராமன். இடையே சிலகாலம் ஃப்ரீயாக இருந்த பிரியாராமன் இப்போது பிஸியாராமன். ஏகப்பட்ட படங்கள். எல்லாவற்றிலும் கவர்ச்சிப் படையல்.

ரஜினியின் அடுத்த படத்தில் கவர்ச்சியான வேடம் இருந்தால் தன்னிடம் தள்ளிவிடச் சொல்லி தூதுவிட்டிருக்கிறாராம்.

## சிம்ரான் பேசுவது

தமிழ்ப்பட ஜொள்ளர்களின் வயாக்ரா சிம்ரான் என்று வர்ணித்துள்ளது ஒரு தமிழகப் பத்திரிகை.

சிம்ரான் எந்த ஊருக்குப் போனாலும் எஸ்.டி.டி.ஃபோன் பேசி பில்லை உயர்த்திவிடுகிறார். தயாரிப்பாளர்கள் நிலைதான் பரிதாபம். பில் கட்டித் தேய்ந்து போய் விட்டனர்.

சென்னையிலுள்ள பாட்டியம்மாவுடன் பேசாவிட்டால் தூக்கம் வராது என்கிறாராம். பாட்டியோடு பேசுகிறாரா? பார்ட்டியோடு பேசுகிறாரா?


சத்யராஜ்-ப்ரீதா விஜயகுமார்
படம்: பொண்ணு வீட்டுக்காரன்

## காதோடு சொல்லுகிறோம்

காதலர் இருந்தும்தன்கூட நடிக்கும் நடிகர்களை அனுசரிப்பதில் 'சிம்ம' நடிகை குறைவைப்பதில்லை. மீசைக்கார தயாரிப்பாளரின் மகனுடன் பணக்காரப் பெயர் கொண்ட படத்தில் நடிக்கிறார் சிம்ம நடிகை. தயாரிப்பாளரின் மகனுக்கு நடிகைமீது ஒரு கண். நடிகையும் அந்த இளம் புது நடிகரின் மனம் நோகாமல் நடந்துகொண்டாராம். தினமும் 'செல்போனில்' நடிகையுடன் அளவளாவுகிறார் நடிகர். தயாரிப்பாளரான தந்தையார் விஷயம் அறிந்தும் விட்டுப் பிடிக்கிறாராம்.

நகைச்சுவை 'வேல்' நடிகருக்கும், முன்னாள் பிரபல நடிகையான கடவுள் பெயர் கொண்ட நடிகைக்கும் இடையே நெருக்கம் தினந்தோறும் அதிகமாகிவருகிறதாம். அதனால் 'வேல்' நடிகரின் பாரியாருக்கும் தகவல் தெரிந்து விட்டதாம். அப்படியிருந்தும் அந்த இருவரையும் பிரிக்க முடியவில்லையாம்.

திலக வாரிசு மூன்றெழுத்து நடிகரும், 'பூ' நடிகையும் நீண்டகாலத்தின் பின்னர் சந்தித்தபோது மெய்யுருகி விட்டனராம். இது கோடம்பாக்க வட்டாரத்திலும் பலமாக அடிபடுகிறது. படப் பிடிப்பு ஒன்றுக்காக ஒரே ஹொட்டலில் தங்கியபோதுதான் சந்திப்பு நடந்ததாம். சந்திப்பு மட்டும்தான் என்று கூறுகிறார்கள்.

சூப்பரான சாந்தி நடிகை சூப்பர் கோபத்தில் இருக்கிறார். பாரதிய ஜனதா கட்சியில் முதலில் சேர்ந்தது அவர்தான். அப்படியிருக்க 'கௌ' நடிகைக்கு கட்சியில் பொறுப்புக் கொடுத்தால் கோபம் வரத்தானே செய்யும்.

நட்சத்திர தம்பதி தம் மகளை வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கு தனியாகத்தான் அனுப்பி வைக்கிறது. எல்லாம் காரணத்தோடுதான். "தனியாகச் செல்வதால் பயமில்லையா?" என்று நிருபர்கள் கேட்டதற்கு நடிகை சொன்னாராம்: "அங்கிள் இருக்கும்போது என்ன பயம்?" தன்னுடன்கூட நடிக்கும் நாயகர்களை அங்கிள் என்றுதான் அழைக்கிறாராம்.

## அழகிய லைலா மன்மதப் புயலா

அஜித்குமாரின் காதல்வலையில் முதன் முதலில் சிக்கியமீன் சுவாதி. பின்னர் முறிவு ஏற்பட்டு, தற்கொலை முயற்சிவரை சென்றார் சுவாதி.

படிப்படியாக மனதைத் தேற்றிக்கொண்டு மறுபடி புதுப்புது காதலர்களை தேடிக் கொண்டார். அதாவது சினிமா உலக நெளிவு சுழிவுகளில் தேறிவிட்டார்.

இப்போது அஜித்குமாரின் படம் ஒன்றில் இரண்டாவது கதாநாயகியாக சுவாதி நடிக்கிறார். படத்தின் பெயர் 'உன்னைத் தேடி'. முதல் நாயகி புதுமுகம். பெயர்: லைலா. இந்த லைலா மன்மதப் புயலா என்பது விரைவில் தெரியும்.

படத்தை இயக்குபவர் சுந்தர்.சி. கரண், மணிவண்ணன், சிவகுமார், ஜெய்கணேஷ், தாமு, வையாபுரி உட்பட பலர் நடிக்கவுள்ளனர். இசை: தேவா.

## பாலகுமாரன் எழுதுகிறார்

ஷங்கர் இயக்கும் படத்தின் கதையை எழுதப்போகிறவர் பாலகுமாரன். அவர் நாவல் வடிவில் கதையை எழுதிய பின்னர்தான் நகரத்து கதையா, கிராமத்து கதையா என்பது ஷங்கருக்கே தெரியுமாம்.

'உயிரே' படத்தின் கதையையும் நாவல் வடிவில் சுஜாதா எழுதிக் கொடுக்க மணிரத்னம் இயக்கினார். இந்தியில் படம் தயாரானதால் தமிழில் இருந்து மணிரத்னமே இந்தியில் மொழி பெயர்த்தாராம்.

www.padippakam.com

## இருட்டுக்குள்

ஏனென்று கேட்க ஏற்றவர்கள் இல்லை: இதனால்
வானும்தன் விருப்பம்போல மழைபெய்யும்!
சூரியனும் காலநிலை எதுவென்று பாராமல்
நாளும் தணலெறிந்தெம் நரம்பை உறிஞ்சிவிடும்!
ராவில் நுளம்பவுணர், இராவடியும் போது உடலை
தீய்க்கும் பனிக்காற்று, திசைகளெங்கும் கதவடைப்பு!
போதாக் குறைக்கு புழுதித் தடிமன், இடை
சாகவைக்கும் நூறு வழித்தடைகள்: என் செய்வோம்?
**
மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்
'பரிதாபர்' போகுமிடம் பள்ளந்திட்டி என்பதுபோல்
கரமிழந்து நிற்பவனின் கண்ணையும் திருடுதல்போல்
தெருக்கொலைகள், மனிதம் தொலைந்திடுதல்,
கருத்துக்கு உலைவைப்பு, வாழ்வைத் துகிலுரிதல்–இவை
சிறிதாய்த் தொடங்கி திரண்டின்று சீறி எழும்
அரவாச்சு! சண்டித் தனங்களது தார்பாரில்
இருட்டணிந்து தேசம் கிடக்கு: எவா நடுக்கிறது?

-அருணன்-

## தேன் கிண்ணம்

### அர்த்தமற்ற காத்திருப்பு

தாடிக் கறுப்புக்கொடி
பறக்கவிட்டு
'தோல்வி ராஜ்ஜியம்'
சோகம் அனுஷ்டிக்கும்!
*
ஒற்றைச் 'சூரியனாக'
நானும்
அழகு 'நிலவாக'
நீயும்
இணைய முடியாத
இமயங்களாக
எதிர்வலம்
வருகின்றோம்!
*
வார்த்தைகளுக்கு
உள்ள வலிமை
புதிய வார்ப்பாக
என்னை
உருமாற்றியதை
உன் 'கடித யாப்பு'
உறுதிப்படுத்தும்!
*
அர்த்தமற்ற
காத்திருப்புக்களினால்
தினம்
அணுவணுவாய்
இறப்புக்கள்
இளமையைக்
கூறுபோடுகின்றன!
*
ஒட்டாத
தாமரை இலையான
உன் மீது
இந்த நீர்த்துளிக்கு
என்ன வேலை?
*
மாரிமுத்து யோகராஜன்,
மட்/ஆசிரியர் கலாசாலை.

### முட்கிரீடம்

பட்டமரம்
கிளை நடுவே
பால் நிலவு;
பால் நிலவை
விட்டுப் பறந்து
ஓடும் மேகங்கள்...!
••
ஓட்டாத உள்ளுறவால்
உயிர் வலிக்கும்
உள்ளூரும் உண்மைகள்
வெளியேற வெட்கித்து
உள்ளுறையும்!
••
கிட்டாது போனாலும்
சித்தத்துள் தித்திக்கும்
பரிமாணம் இல்லாத
பரிணாமக் காதலுக்கு
சொப்பனங்களே மீதம்!
••
முட்கிரீடமாவது
தலையில் இருப்பதால்
இப்போதும் நான்
ராசாதி ராசனேதான்...
நிறைகுமைக் காதலுக்கு
ராசாதி ராசனேதான்!
••
விட்டிலின் தவறோ
விளக்கின் தவறோ
விளங்கவேயில்லை
என் கண்ணில் படுவதெல்லாம்
பட்ட மரம்
கிளை நடுவே
பால் நிலவு;
பால் நிலவை
விட்டுப் பறந்து
ஓடும் மேகங்கள்...!
••

பாலபேராதரன்

# உலகை உலுக்கிய மனித வேட்டை



வடக்கு-தெற்கு என்று வியட்நாமை கூறுபோட முற்பட்டன அமெரிக்கப்படைகள். வட வியட்நாமை தளமாக கொண்டிருந்தனர் வியட்நாம் விடுதலைப் போராளிகள். தென் வியட்நாமை மீட்கும் கெரில்லாத் தாக்குதலை ஆரம்பித்தனர்.

தென் வியட்நாமுக்குள் ஊடுருவி அமெரிக்கத் துருப்புக்கள் மீது கெரில்லா தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கிடுகிடுத்துப்போன அமெரிக்க இராணுவம் அப்பாவி மக்களை கெரில்லாக்கள் என்று கூறிப் படுகொலை செய்தது.

தென் வியட்நாமில் மைலை கிராமத்தில் 1968 மார்ச் மாதம் நிகழ்ந்த படுகொலைகள் உலகை உலுக்கின. பெண்களும் சிறுவர்களும் உட்பட நூறுபேர்வரை கொன்று குவிக்கப்பட்டனர்.

கொன்று வீசப்பட்டுக் கிடக்கும் பெண்களையும், சிறுவர்களையுமே படத்தில் காண்கிறீர்கள். இத்தகைய படுகொலைகள் வியட்நாம் மக்களை அஞ்சி நடுங்கி பணியவைக்கும் என்று அமெரிக்கா நினைத்தது.

நடந்ததோ வேறு. பழிவாங்கும் உணர்ச்சியும், அநீதியை வேரறுக்கும் ஆவேசமும் கொளுந்துவிட்டெரிந்தது. அந்தத் தீயில் அமெரிக்காவின் ஆதிக்கம் பொசுங்கிப்போனது.

## இல்லையடா...?

இங்கே வா கொஞ்சம் பார்!
இலிங்க நகரைப் பார்!
எங்கள் கதியதனை
என்னவெனச் சொல்பாப்பம்...!
தங்கி எழ மனை யுண்டா?
சமைத்துண்ண நீருண்டா?
பொங்கும் கடல் தாகம்
போக்கிடுமா உவராலே?
▫▫
வீட்டுக்குள் வானத்து
வெளியின் நிலவு விழும்!
கேட்டே அழுதாலும்
கிடுகுவர மாட்டாது!
போட்டே அனுப்பிய நம்
புண்ணியரும் தேடார்கள்!
பாட்டாய்ப் படித்தாலும்
பயனொன்றும் இல்லையடா!
▫▫
மக்கள் குழா யடியில்
மறவாமல் போர் செய்வார்!
பக்குவமாய் அட்டை
பதிந்தும் வர மறவார்!
தக்க வழக்கினது
தவணைக்கும் காத்திருப்பார்!
சிக்கல் அறுத் திறைவா
சீராக்க மாட்டாயா?
▫▫
தீவைத் தெரி வீடு
திரும்பி வரமாட்டாது!
தேவைகளைப் பலபேரும்
தேடிக்களைப்பார்கள்!
நாவைப் புரட்டு வதும்
நல்ல தொழில் சிலருக்கே!
சாவைத் தொடு மட்டும்
தமிழர் விதி இதுதானோ?

ஆதித் கவிராயர்-இலிங்கநகர்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(27.09.1998 தொடக்கம் 03.10.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| கன்னி | – | சூரியன், புதன். |
| சிம்மம் | – | சுக்கிரன், ராகு. |
| கும்பம் | – | குரு, கேது. |
| மேடம் | – | சனி, |
| கடகம் | – | செவ்வாய். |

சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை | 8 மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- அதிகலாபம், அலைச்சல் மிகுதி. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- உடல் நலக்குறைவு, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | மாலை | 4 மணி |
| **வெள்ளி**- பண வரவு, தொழில் உயர்வு. | காலை | 8 மணி |
| **சனி**- வாழ்க்கை முன்னேற்றம், புதிய முயற்சி. | மாலை | 5 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- குடும்ப மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- அதிகலாபம், இனசன ஒற்றுமை. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**-காரியக்கேடு, மனநிம்மதியின்மை. | காலை | 6 மணி |
| **புதன்**- தொழில் கஷ்டம், அலைச்சல். | மாலை | 5 மணி |
| **வியாழன்**- வெளிவிட வாழ்க்கை, உறவினர் உதவி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| **சனி**- கௌரவக் குறைவு, மனக்கஷ்டம். | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பலவித பேறு, புதிய முயற்சி. | காலை | 8 மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, மனக் கலக்கம். | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |
| **புதன்**- பயனுள்ள செயல், பணவரவு. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- அந்நியர் உதவி, தொழில் முன்னேற்றம். | மாலை | 5 மணி |
| **வெள்ளி**- கௌரவம் மிகுதி, குடும்ப மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| **சனி**- பெரியோர் பகை, மனக் கவலை. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- ஆடம்பர வாழ்க்கை, மகிழ்ச்சி. | காலை | 8 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், மனக் கவலை. | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- காரிய சித்தி, பண வரவு. | மாலை | 5 மணி |
| **புதன்**- உடல் ஆரோக்கியம் பாதிப்பு, நல்ல செய்தி. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- தெய்வானுகூலம், நன்மதிப்பு. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- பெரியோர் சந்திப்பு, முன்னேற்றம். | பி.ப. | 3 மணி |
| **சனி**- சுபகாரியம், மகிழ்ச்சி. | மாலை | 6 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண்பழி கேட்டல், கடன் தொல்லை | பகல் | 11 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- வெளியூர்ப் பிரயாணம், நன்மதிப்பு. | பகல் | 12 மணி |
| **புதன்**- இனசன ஒற்றுமை, காரியானுகூலம். | மு.ப. | 9 மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, லெக்ஷ்மி கடாக்ஷம் | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- தெய்வானுகூலம், நன்மதிப்பு, மகிழ்ச்சி. | காலை | 8 மணி |
| **சனி**- கௌரவ மிகுதி, மன மகிழ்ச்சி. | மாலை | 7 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3**

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளியூர் பயணம், காரியானுகூலம். | மாலை | 7 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, காரியானுகூலம். | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- நன்மதிப்பு, தொழில் முன்னேற்றம். | மு.ப. | 10 மணி |
| **புதன்**- வெகுமதி, கௌரவம். | மு.ப. | 9 மணி |
| **வியாழன்**- தொழில் முன்னேற்றம், மன மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| **வெள்ளி**- குடும்ப ஒற்றுமை, பெரியோர் உதவி. | காலை | 8 மணி |
| **சனி**- புதிய முயற்சி, முயற்சி பலிதம். | மாலை | 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | காலை | 6 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும் | பி.ப. | 2 மணி |
| **புதன்**- இனசன ஒற்றுமை, பலவித பேறு. | மாலை | 6 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், கௌரவம் பாதிப்பு. | பி.ப. | 3 மணி |
| **வெள்ளி**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| **சனி**- வீண்குறை கேட்டல், புதிய முயற்சி. | பி.ப. | 3 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை | 8 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மகிழ்ச்சி. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- காரிய கேடு, அவமானம். | மாலை | 6 மணி |
| **புதன்**- வீண்குறை கேட்டல், மதிப்பு. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- உடல்நலக் குறைவு, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- நண்பர் உதவி, பெரு மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| **சனி**- குடும்ப கவலை, வீண் விரயம். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக்கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10.30 மணி |
| **திங்கள்**- பிரயாணம் மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த எண்ணம், தொழில் விருத்தி. | பகல் | 11 மணி |
| **புதன்**- புதிய முயற்சி பலிதம், காரியசித்தி. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- குடும்ப விருத்திகள், சுபகாரியங்கள். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| **சனி**- வீண்குறை கேட்டல், மன நிம்மதியின்மை. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- காரியானுகூலம், புதிய முயற்சி. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, நன்மதிப்பு புகழ். | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- தெய்வானுகூலம், தொழில் விருத்தி. | மாலை | 6 மணி |
| **புதன்**- இனசன ஒற்றுமை, காரியக்கேடு. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- வீண் அலைச்சல், பொருள் விரயம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- அந்நியர் உதவி, காரியசித்தி. | மாலை | 5 மணி |
| **சனி**- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | மாலை | 6 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, மனக் கலக்கம். | பகல் | 11 மணி |
| **புதன்**- நன்மதிப்பு, தொழில் முன்னேற்றம். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- பணவரவு, குடும்பத்தில் சுபகாரியம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- வீண்பழி கேட்டல், துக்கம். | காலை | 8 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, காரியானுகூலம். | மாலை | 5 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- அலைச்சல் மிகுதி, நன்மதிப்பு. | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- காரியானுகூலம், மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், எதிர்பாராத உதவி. | பகல் | 11 மணி |
| **புதன்**- தொழில் உயர்வு, பண வரவு. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- இனசன ஒற்றுமை, உயர்ந்த நிலை. | காலை | 7 மணி |
| **வெள்ளி**- வாக்குப் பலிதம், சுபகாரியம். | காலை | 8 மணி |
| **சனி**- தொழில் பாதிப்பு, வீண் விரயம். | மாலை | 7 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## ஆஸ்பத்திரி யோசனை



ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய கட்டாயம் வாழ்க்கையில் கிட்டத்தட்ட எல்லாருக்குமே ஏற்பட்டு விடுகிறது. ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது முன்னெச்சரிக்கை உணர்வோடு நடந்துகொள்ள வேண்டிய சில விஷயங்கள்:

- டோர்ச் லைட், தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, துவாய், டெட்டோல் போன்றவற்றை நோயாளிகளின் அருகில் வைத்திருக்க வேண்டும்.
- சிறிதளவு உப்பு, சீனி போன்றவை எப்போதும் இருக்கட்டும். அது நோயாளிக்கும், நோயாளிகளைப் பார்க்க வருபவர்களுக்கும் உடனடியாக ஏதாவது தயார் செய்து கொடுக்க உதவும்.
- கொதித்தாறிய நீரை எந்நேரமும் தயாராக வைத்திருக்க வேண்டும்.
- நோயாளியின் அருகில் அதிக நேரம் குழந்தைகளை வைத்திருக்க வேண்டாம்.
- பத்திரிகை மற்றும் புத்தகம், சிறிய ரேடியோ போன்றவை நோயாளி அருகில் இருந்தால் நேரம் போகாத பிரச்சனை தோன்றாது.
- நோயாளிக்கு ஓய்வு அல்லது உறக்கம் தேவைப்படும்போது அருகில் இருப்பவர் பேச்சைத் தவிர்க்க வேண்டும்.
- நோயாளியைப் பார்க்க வருபவர்கள் நோய் பற்றியும், மருத்துவம் பற்றியும் பல அபிப்பிராயங்களைச் சொல்வார்கள். அதைக்கேட்டு நோயாளியும் அவரது குடும்பத்தினரும் குழம்பாமல், வைத்தியரின் ஆலோசனையை மட்டும் கேட்டுக் கொண்டால் போதும்.

## அழகு நயம்



**கருமை நிறம் நீங்க...**

உடலின் வெய்யில் படும் பாகங்களான முகம், கை கால்கள், கழுத்து ஆகியவற்றில் ஏற்படும் கருமை நிறம் நீங்க, பார்லி தூளுடன் சிறிது எலுமிச்சம் பழச்சாறு, பால் ஆகியவற்றைக் கலந்து தடவி, உலர்ந்த பின் கழுவிவிட வேண்டும். இதுபோல் தொடர்ந்து செய்து வந்தால் கருமை நிறம் மறையும்.

**மறுக்கள் நீங்க...**

முகப்பரு வந்த மறுக்கள் சருமத்தில் இருந்தால், கடுகு எண்ணெய், ஒலிவ் எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சரிவிகிதத்தில் கலந்து முகத்தில் பூசி, ஒருமணிநேரம் ஊறிய பின் முகத்தைக் கழுவி வந்தால் மறுக்கள் மறைந்து விடும்.

**எண்ணெய் வழியாமல் இருக்க...**

தக்காளிப் பழச்சாற்றை முகத்தில் தடவி, உலர்ந்த பின் முகத்தை அலம்பினால், முகத்தில் எண்ணெய் வழியாமல் இருக்கும்.

**சொரசொரப்பு நீங்க...**

கைகள் சொரசொரப்பாக பார்ப்பதற்கு அழகற்று இருந்தால், ஒலிவ் எண்ணெயுடன், தூள் உப்பைக் கலந்து, கைகளில் தடவி வந்தால் கைகள் சொர சொரப்பு நீங்கி அழகாகக் காட்சியளிக்கும்.

## தீப்பற்றினால் என்ன செய்யலாம்?



○ சமையலறையில் வாணலியில் சமைத்துக் கொண்டிருக்கும் போது அதில் தீப்பற்றினால் அடுப்பைவிட்டு நகர்த்தாதீர்கள். வெப்பத்தைக் குறைத்து ஈரத்துணி, வாணலிமூடி அல்லது தீப்பற்றாத எந்தவொரு பொருளையாவது போட்டு ஒற்றி எடுங்கள். அத்துடன் சுவாலை அருகே கையை நீட்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

○ ஒட்டிக் கொண்ட இரு பாத்திரங்கள், ஒன்றை ஒன்று விட்டுப் பிரிய மறுக்கின்றனவா? உள்பாத்திரத்தில் குளிர்ந்த நீரை நிரப்புங்கள். பின் வெளிப் பாத்திரத்தை, வெந்நீர் உள்ள வேறொரு பாத்திரத்தில் வையுங்கள். ஒட்டிக் கொண்டிருந்த பாத்திரங்கள் பிரிந்து விடும்.

○ போத்தல் மூடி போத்தலை விட்டு வர மறுக்கின்றதா? ஒரு சிறுதுளி கிளிசரின் அல்லது சமையல் எண்ணெயை போத்தல் மூடியின் விளிம்பில் விட்டு சிறிது நேரம் வையுங்கள் பின்னர் சரியாகிவிடும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EL

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-10-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

54 — புவனா



தன் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் டயானா அதிக அக்கறை காட்டினார். பாடசாலையில் நடைபெறும் பெற்றோர்தின விழாக்களிலும் தவறாமல் கலந்து கொள்வார்.

அழைப்பு அனுப்பி சிறப்பாக அழைத்தால் மட்டும்தான் சாள்ஸ்- பெற்றோர் தின விழாக்களுக்கு செல்லுவார்.

பெற்றோர்தின விழாவை முன்னிட்டு பிள்ளைகளின் தாய்மார்களிடையே ஓட்டப்போட்டி போன்றவை நடத்தப்படும்.

அவ்வாறு ஒருமுறை போட்டி நடந்தபோது டயானாவும் பெற்றோர்கள் வரிசையில் அமர்ந்திருந்தார்.

இளவரசி டயானா ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பமாட்டார் என்று நினைத்து போட்டிக்கு அவரை அழைக்கவில்லை.

தனது நாற்காலியில் இருந்து எழுந்து சென்ற டயானா; "என்னை ஏன் போட்டிக்கு அழைக்கவில்லை?" என்று கேட்டார்.

"நாட்டுக்கு இளவரசியானாலும், வில்லியம், ஹரிக்கு நான் அம்மா!" என்று கூறியபடியே போட்டியில் உற்சாகமாகக் கலந்துகொண்டார்.

ஓட்டப்போட்டி ஆரம்பமானது. டயானாதான் முதல் இடத்திற்கு வந்தார்.

முதலிடத்தில் வந்ததற்காக டயானாவை எல்லோரும் பாராட்டினார்கள். டயானாவோ பெருந்தன்மையோடு: "எனக்காக ஏனையோர் விட்டுத்தந்துள்ளார்கள். அதனால்தான் முதலிடத்தில் வரமுடிந்தது!" என்று கூறினார்.

பாடசாலை போட்டியில் டயானா கலந்து கொண்டு ஓடிய படமும் பத்திரிகைகளில் பெரிதாகப் பிரசுரமாகியது.



### கண்டகாட்சி

இலண்டனில் பிரபலமான கடற்கரை ஒன்றுக்கு சென்றிருந்தார் டயானா.

தானே காரைச் செலுத்திக்கொண்டு தனிமையை நாடிச் செல்வது டயானாவின் வழக்கம்.

டயானா வழக்கமாக காரை நிறுத்தும் இடத்தில் வேறொருகார் நின்றிருந்தது.

அக்காருக்குள் பார்வையைச் செலுத்திய டயானா துணுக்குற்றார்.

சாள்ஸ்சும், கமீலாவும் தம்மை மறந்து ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். சாள்ஸ் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தார். சாள்ஸின் கரம் ஒன்று கமீலாவின் முதுகை வருடிக்கொடுத்தபடி இருந்தது. கமீலா சாள்ஸின் கழுத்தை அழுத்தியபடி தன் உதடுகளை சாள்ஸ்சுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்.

## காருக்குள் கமீலா – சாள்ஸ்



உலக எய்ட்ஸ் தினத்தில்

டயானா காரை வேகம் குறைத்து தங்களைக் கூர்ந்து கவனித்துவிட்டு கடந்து செல்வதை அவர்கள் அறியவில்லை. புதிய காதலர்கள்போல முத்தத்தில் மூழ்கிக் கிடந்தனர்.

தான் வருவது தெரிந்துதான் இருவரும் அங்கு வந்தார்களோ என்றும் நினைத்தார் டயானா. தன்னை எரிச்சலபடுத்துவதற்காக அவ்வாறு செய்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்.

'உன்னைப் பிரிந்தும் நான் சந்தோசமாகத்தான் இருக்கிறேன்' என்று டயானாவுக்கு காட்டுவதற்காகவும் சாள்ஸ் அவ்வாறு செய்திருக்கலாம்.

"இலண்டனில் தொடர்ந்து இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும். இங்கே எல்லாமே வெறுப்பாக இருக்கிறது. உலகை சுற்றப் போகிறேன். என்னால் முடிந்த நல்ல காரியங்களைச் செய்யப்போகிறேன். என் மனதை ஒருநிலைப்படுத்த பொதுப்பணிகளில்தான் மனதை நிலைக்க விடப்போகிறேன்" என்று தன் சிநேகிதிகளிடம் கூறினார் டயானா.

### அன்னையுடன்

டயானாவுக்கு அன்னை தெராசாவின் மீது மகாமரியாதை. தொண்டுக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள அவரது தாயுள்ளம் டயானாவைக் கவர்ந்தது.

"அவரைப்போல தொண்டு புரிய என்னால் முடியாது. ஏதோ என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்!" என்றும் டயானா தன் சிநேகிதிகளிடம் கூறத் தவறவில்லை. பின்னர் அன்னை தெராசாவை டயானா சந்தித்தபோது மெய்யுருகி நின்றுவிட்டார்.

அன்னை தெராசாவும் டயானாவின் கன்னங்களை அன்போடு தடவிக் கொடுத்தார்.

டயானாவைப் பற்றிய செய்திகளை அன்னை அறிந்திருந்தார். அதனால் டயானா மீது அனுதாபம் கொண்டிருந்தார்.

'என் வாழ்க்கையிலேயே நான் சந்தித்த மனித தெய்வம் அன்னைதான். அவர் முன்னால் நிற்கும்போது என் உடம்பெல்லாம் புல்லரித்தது. என் மனம் குளிர்ச்சியடைந்தது. இதற்கு முன்னால் இவ்வாறான ஒரு ஆனந்தம் என்னைத் தீண்டியதில்லை!" என்று அச் சந்திப்பை விவரித்தார் டயானா.

அன்னை தெராசாவைச் சந்தித்தபின்னர் டயானா பொதுப் பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.

தனது பொதுப்பணிகளுக்கு பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் தருவதாக டயானா கருதினார். அதனை விரும்பாதபோதும், தடுக்கவில்லை.

அதற்கும் டயானா ஒரு காரணம் வைத்திருந்தார்.

"என் முடியலங்காரம், உடையலங்காரம் என்பவற்றைப் பார்த்து பலர் பின்பற்றுகிறார்கள். எனது பொதுச் சேவையைப் பார்த்து ஒரு சிலராவது பின்பற்றினால்கூட நன்மைதானே!" என்று கூறினார் டயானா.

தொழுநோயாளிகள், எய்ட்ஸ் நோயாளர்கள் போன்றோரை தொடுவதால் கெடுதி இல்லை என்று மருத்துவம் சான்று தந்தது. அப்படியிருந்தும் சமூகம் அவர்களை ஒதுக்கி வைத்தது.

டயானா அந்த நோயாளர்களுடன் கைகுலுக்கி சகஜமாகப் பழகிய புகைப்படங்களைப் பத்திரிகைகளில் பார்த்த பின்னர்தான் அவர்கள் அருவருப்புக்கு உரியவர்கள் அல்ல என்று பலரும் நம்பினார்கள்.

தொழுநோயாளர்களும், எய்ட்ஸ் நோயாளிகளும் டயானாவுக்கு மனம் நெகிழ்ந்து நன்றி கூறினார்கள்.

### அரசகுடும்ப கவலை

டயானாவின் பெயரும், புகழும் வளர்ந்து கொண்டே இருப்பதை அரச குடும்பத்தால் ஜீரணிக்க முடியவில்லை.

'டயானாவை எப்படிச் சமாளிப்பது?' என்பதே அரச குடும்பத்திற்கு பெரும் தலைவலியாக இருந்தது.

இதற்கிடையே சாள்ஸ்சின் சகோதரரான ஆண்ட்ரூவின் முன்னாள் மனைவி சாராவைப் பற்றியும் புதுப்புது கிசு கிசுக்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

தனது செயலாளருடன் சாரா சல்லாபம் காணும் புகைப்படங்கள் முன்னர் வெளியாகி இருந்தன. சாராவின் கால் பெருவிரலை செயலாளர் தன் வாயில் வைத்துக் சுவைத்துக் கொண்டிருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப் படம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

அதன் பின்னர் சிலகாலம் சாரா பற்றிய செய்திகள் வெளிவரவில்லை.

சாரா ஒரு விளம்பரப்பிரியை. தன்னைப் பற்றிய கெட்ட செய்தியோ, நல்ல செய்தியோ வெளியாகிக் கொண்டே இருக்கவேண்டும் என்று நினைப்பவர்.

அதனால் பொது நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவருடன் தோன்றினார் சாரா.

அந்தக் கோடீஸ்வரருடன் நெருங்கிக் காட்சி தந்தார்.

படப்பிடிப்பாளர்கள் அதனைத் தவறவிடவில்லை.

கிளிக், கிளிக், கிளிக்

சகல பத்திரிகைகளிலும் செய்தியும், படமும் வெளியாகின.

அந்தப் பரபரப்பு நீடிக்கவில்லை. அதனை எல்லாம் ஓரம்கட்டத்தக்க டயானாவின் அந்தரங்கப் புகைப்படங்கள் வெளியாகின.

டயானாவே திகைத்து நின்றார்.

அவை என்ன புகைப்படங்கள் என்பதையும், அவை எடுக்கப்பட்ட சூழ்நிலையையும் அடுத்த வாரம் பார்க்கலாம். (அடுத்த வாரமும் வரும்)


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கல்முனை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**என். திலகவதி,**
தோம்புதர் வீதி, பாண்டிருப்பு-01,
கல்முனை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

### தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 20

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





உடன்பிறந் தார்களைப் போல-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்!
இடம் பெரி துண்டுவை யத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?
-சுப்பிரமணிய பாரதியார்.

# புதுப்பாசம் பெருநாசம்

**பாப்பா முரசு சிறுகதை**

ஒரு வீட்டில் இரண்டு கோழிகள் இணைபிரியாது வாழ்ந்து வந்தன. இரண்டும் ஒன்றையொன்று விட்டுப் பிரிவதேயில்லை.

இவை வீட்டுக்காரருக்குப் பயன்படும் வகையில் தினமும் முட்டைகள் இட்டன. ஆனால் வீட்டுக்காரர்கள் இவற்றிற்குச் சரியான உணவு வழங்குவதில்லை. கோழிகள் இரண்டும் சிறு பூச்சி புழுக்கள் மற்றும் நிலத்தில் சிதறுண்டிருக்கும் தானியங்களையும் உண்டு வந்தன.

ஒருநாள் அவ்வீட்டின் சமையலறையில் இருந்து பலகார வாசனை காற்றில் வந்து கொண்டிருந்தது. அப்போது, ஒரு கோழி மற்றையக் கோழியிடம்:

"எம்மால் பயன்பெறும் இவர்கள், எம்மைச் சரியானபடி கவனிப்பது இல்லை. எமக்கு நல்ல உணவுகளைத் தருவதும் கிடையாது. தமக்கு எப்படியெல்லாம் உணவு தயாரிக்கிறார்கள்! நன்றி கெட்டவர்கள்!" என்று சொன்னது.

"ஆமாம்!" என்று ஆமோதித்தது அடுத்த கோழி.

இதேவேளை, அந்த வீட்டுக்காரன் அழைக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தது, வீட்டுக்காரரைப் பற்றிக் குற்றம் சாட்டிய கோழி. வீட்டுக்காரன் கைகளில் நிறையத் தானியங்கள் இருந்தன.

கோழிகளை நோக்கி அந்தத் தானியங்களை வீசினான் வீட்டுக்காரன்.


"நண்பனே! வா அந்தத் தானியங்களை உண்போம். நீதான் அவர்களைக் குறை கூறினாயே! அவர்கள் அப்படியல்ல." என்று சொன்னது அடுத்தக் கோழி.

"வேண்டாம்! போகாதே. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. என்றைக்குமே இல்லாத புதுப்பாசம் இவர்களுக்கு இன்றைக்கு ஏன் வந்தது? கொஞ்சம் யோசித்துப் பார்!" என்று தடுத்தது.

என்றுமே தமக்குக் கிடைத்திராத தானியத்தைக் கண்டதும், ஆசை கொண்ட கோழியோ நண்பனின் பேச்சைப் பொருட்படுத்தாது, ஓடிச்சென்று தானியங்களைக் கொத்தித் தின்றது.

அவ்வளவுதான். தானியங்களைப் போட்ட வீட்டுக்காரன், ஒரே அமுக்காகப் பிடித்தான் அந்தக் கோழியை.

"இன்று எங்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு இந்தக்கோழி போதும்!" என்று அருகில் நின்ற தனது தம்பியிடம் கூறி, கோழியைக் கொண்டு சென்றான் வீட்டுக்காரன்.



வீட்டுக்காரன் தன் நண்பனைப் பிடித்துக் கொண்டு செல்வதைக் கவலையுடன் பார்த்துக்கொண்டது மற்றக் கோழி.

ஒருவர் என்றுமில்லாதவாறு எம்மீது பாசம் காட்டினால் நாம் கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கோழிக்கு ஏற்பட்ட கதிதான் எமக்கும் ஏற்படும்!


# அதிசயம்—ஆனால் உண்மை!



**பூகோளக் கற்பாசி:**
← ஜெர்மனியில் உள்ள ப்ளாக் ஃபொரஸ்ட் பாறைகளின்மீது பூகோளப்படம் போன்ற வடிவங்களை இப்பாசியினங்கள் அமைக்கின்றன.



**தொட்டில் விலை:**
↑ பெல்ஜியத்தில் 1450ம் ஆண்டு செய்யப்பட்ட இந்தத் தொட்டில் 480 வருடங்கள் கழித்து 12,250 டொலருக்கு விற்கப்பட்டது.



**மலர்ப் புழு:**
→ தென் அமெரிக்காவில் உள்ள 'ஜோமெட்ரிக் கெட்டர் பில்லர்' என்ற புழு, எதிரிகளை ஏமாற்ற பூக்களின் மொட்டுக்களில் ஒளிந்து கொள்ளும்.



**168 மணிநேர அழுகை:**
← பார்பேரியர்கள், சீனநாட்டின்மீது படையெடுத்தபோது, நேச நாட்டு அரசன் பிரின்ஸ் சின், உதவியளிக்க மறுத்ததால், சீன நாட்டு மன்னன் செள, தொடர்ந்து 7 இரவுகளும் 7பகல்களும் அழுது கொண்டிருந்தான். பிறகு பிரின்ஸ் சின் உதவியளித்த பின்தான் அழுகையை நிறுத்தினான் செள.

# வாரம் ஒரு நாடு

## யூகோஸ்லாவியா



தலைநகர்- பெல்கிரேட்
பரப்பு- 1,02,173 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 1.08 கோடி
மொழி- செர்போ-குரோஷியன், அல்பேனியன், ஸ்லோவேனியன், மாஸிடோனியன்.
எழுத்தறிவு- 90%
சமயம்- கிறிஸ்தவம், இஸ்லாம்.
நாணயம்- புதிய டினார்.
தனிநபர் வருமானம்- 5040 டொலர்.

**அமைவிடம்:**

வடக்கே ஹங்கேரி; கிழக்கே ரோமேனியா மற்றும் பல்கேரியா; தெற்கே அல்பேனியா மற்றும் மசெடோனியா; மேற்கே குரோஷியா, பொஸ்னியா-ஹெர்ஸெ கோவினா ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டது இந்நாடு.

**வரலாறு:**

பால்கன் நாடுகளின் ஒன்றான யூகோஸ்லாவியா 6 குடியரசுகளைக் கொண்டிருந்தது. செர்பியா, மோன்டெனெக்ரோ, குரோஷியா, ஸ்லோவேனியா, மாசிடோனியா, பொஸ்னியா-ஹெரசேகோவினா ஆகிய 6 குடியரசுகளில் முதல் இரண்டு குடியரசுகளைத் தவிர ஏனையவை 1991ல் தனிநாடுகளாகப் பிரிந்துவிட்டன. 1945ல் குடியரசான யூகோஸ்லாவியாவில் மார்ஷல் டிட்டோவின் தலைமையில் கம்யூனிச ஆட்சி நடைபெற்றது. 45 வருட கம்யூனிச ஆட்சி மாறியதும் நாடு பிளவுபட்டது.

**பொருளாதாரம்:**

முக்கிய பயிர்கள்- கோதுமை, உருளைக்கிழங்கு, இனிப்புக்கிழங்கு மற்றும் புகையிலை. மின்சாரம், நிலக்கரி, இரும்பு, உருக்கு, சிமெந்து, மரப்பொருட்கள், மோட்டார் வாகனங்கள் சார்ந்த தொழிற்சாலைகள் உண்டு.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.10.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 264
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 262

**பரிசுக்குரியவர்:**
∴பாத்திமா நிஷ்மா நஜீம்,
ஒக்ஸ்∴போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| தருமரட்ணம் பிரபாகரன்,<br>களுதாவளை ம.வித்தியாலயம், களுவாஞ்சிக்குடி. | எஸ். அருண்பிரியந்தன்,<br>6வது ஒழுங்கை, கொட்டாஞ்சேனை, கொ-13. |
| கி. ஷர்மினா,<br>ஆர்.சி.சி. தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை. | ஏ.எம். ஸவ்பீக்,<br>பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. |
| சி. அரவிந்தன்,<br>கந்தபுரவாணி வித்தியாலயம், வவுனியா. | செல்வி ப. நர்த்தனா,<br>பேராதனை வீதி, கண்டி. |
| முருகதாஸ் திவாகரன்,<br>சிவசக்தி வித்தியாலயம், கல்முனை. | மர்ழியா டின்ஸில்,<br>கோழிக்கடை வீதி, வாழைச்சேனை-05. |
| ஆர். சுரதிஸ்,<br>க/கலாபொக்க த.வி., மடுல்கெல. | மாணிக்கராசா ஜசோதரன்,<br>தி/ விபுலானந்தர் த.ம.வி., திருகோணமலை. |

# ஏழுவர்ணக் கிளி




கிளிகளில் பஞ்சவர்ணக்கிளி மிகவும் அழகானது. 5 நிறங்களை உடையதால் இது பஞ்சவர்ணக்கிளி என்று அழைக்கப்படுகிறது. இது உங்களுக்குத் தெரியும். கிளிகளில் வானவில் வர்ணக்கிளி என்று ஒருவகை உண்டு.

வானவில்லில் 7 வர்ணங்கள் உள்ளன. அதேபோல் ஏழு வர்ணங்கள் உடைய கிளிகள் வானவில் வர்ணக்கிளிகள் என்று அழைக்கப்படுகின்றன. வானவில் வர்ணக்கிளிகள், பஞ்சவர்ணக்கிளிகளை விடவும் கவர்ச்சித்தன்மை கொண்டவை.

வானவில் வர்ணக்கிளிகள் 2 வருடங்களில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். இவை மரப்பொந்துகளில் சென்று ஒரே சமயத்தில் 2 முட்டைகள் இட்டு, 24 முதல் 28 நாட்களில் குஞ்சு பொரிக்கின்றன. இவற்றின் பிரதான உணவு தேன்.

இவை அவுஸ்திரேலியா, பப்புவா நியூகினியா, லம்போர்க், மொழுக்கா, சம்பா போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

# வளரும் கோபுரம்




ஏழு உலக அதிசயங்களில் ஒன்றுதான் ஃபிரான்ஸ் தலைநகரான பாரீஸில் அமைந்திருக்கும் ஈஃபிள் கோபுரம். உலகப் புகழ்பெற்ற இந்தக் கோபுரம் இரும்பாலானது என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

'வெப்பத்தினால் உலோகம் விரிவடையும்' என்பது விஞ்ஞான உண்மை. இதற்கேற்ப ஈஃபிள் கோபுரமும் குளிர்காலத்தில் இருப்பதைவிட வெய்யில் காலத்தில் 6 அங்குலம் வரை கூடுதல் உயரம் வளருகிறதாம். பின் குளிர்காலத்தில் சரியாகிவிடுகிறதாம்.

# எலும்பு மச்சை

எமது உடலில் உள்ள எலும்புகளும் ஒரு வகையான திசுக்கள்தான். மற்ற திசுக்களை விட இது வலிமையுடையதாகும். இது மேட்ரிக்ஸ், ஜெலட்டின் போன்ற பொருட்களினால் ஆனது.

எலும்புகள் தன்னகத்தே கல்சியம் கார்பனேட், கல்சியம் பொஸ்ஃபேட் போன்ற இரசாயனப் பொருட்களைக் கொண்டிருப்பதால் இவை வலிமையுடையனவாக இருக்கின்றன.



எலும்பின் உட்பகுதி ஒரு குழாய் போன்று இருக்கும். அதனுள் நிரம்பியிருப்பது எலும்பு மச்சை என்னும் பொருளாகும். இந்த எலும்பு மச்சையானது மஞ்சள் மச்சை, சிவப்பு மச்சை என இருவகைப்படும். சிவப்பு மச்சையில் இருந்துதான் இரத்தச் சிவப்பணுக்கள் உண்டாகின்றன.

# உணவுக் காளான்கள்




உணவுக்குப் பயன்படும் காளான்கள் மாரல்ஸ் என்று அழைக்கப்படுகின்றன. இவை உலகம் முழுவதும் வளர்க்கப்பட்டு, உணவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில்தான் காளான்- உணவுக்காக அதிகளவில் பயன்படுகிறது.

ஜெர்மனியில் மரக்கிளைகள், இலைகள் ஆகியவற்றை ஓரிடத்தில் குவித்து, எரித்து, அதில் உணவுக் காளான்களை வளர்க்கின்றனர். காளான் சிறந்த உணவாக இருப்பதால் இப்போது பலராலும் விரும்பி உண்ணப்படுகிறது.

# செயற்கைக் கோள்

ஒவ்வொரு விநாடியும் நாம் வாழும் பூமி கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியை மேற்கொள்வது யார் தெரியுமா? செயற்கைக் கோள்கள்தான்!



அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் விண்வெளிக்கு செயற்கைக் கோள்களை அனுப்புகின்றன. இந்தச் செயற்கைக் கோள்கள் பூமியில் உள்ளவற்றை படமாக எடுத்து அனுப்புகின்றன. முக்கியமாக இந்தப் படங்களில் இருந்து சுற்றுச் சூழல் அமைப்பு, நீர்வளம் ஆகியவை அறியப்படுகின்றன.

சில நாடுகள் உளவு பார்ப்பதற்காகவும் செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு அனுப்பியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாம் பாகம்

அங்கம் 05

# மேற்கே ஒரு குற்றம்

எழுத்துலக வேந்தன் **சுஜாதா**

"குட்! உங்களுடன் பேசின ஆளை ஞாபகம் இருக்கிறதா?"

"வசந்த் ஃபோட்டோ பிடித்தான்."

"தெரியும். நீங்கள் பார்த்த அடையாளம் ஏதாவது?"

"மெலிதான கண்ணாடி பிம்பத்தில் பார்த்தேன்."

"சரி, நீங்கள் பான்ஹாஃபில் இறங்கிக் கொள்ளுங்கள். ஒரு நீல நிறக் கார் உங்கள் அருகில் வந்து நிற்கும். அதில் ஏறிக்கொண்டு எங்கள் அலுவலகத்திற்கு வாருங்கள். மேற்கொண்டு பேசலாம். டிரைவரிடம் மைக்ஃபோனைக் கொடுங்கள்."

"இந்தா!" என்றான்.

டிரைவருடன் ஜெர்மன் பாஷையில் பேசினார் ஸ்டைன் ஹாஃப்.

"ரிமார்க்கபிள்! பாஸ்! என்ன பொலிஸ்! என்ன சாமர்த்தியம்!"

"நம்மை அறியாம நம்ம பின்னாலேயே வந்துகிட்டு இருக்காங்க! டாக்ஸி ஏறிய உடனே அவங்களுக்கு செய்தி போய்ட்டு டாக்ஸி நம்பர் விவரமெல்லாம் போயி டாக்ஸிக்குள்ள இருக்கிற ரேடியோவில் தொடர்பு கொண்டுட்டாங்க. அப்பா அசுர வேகம் கம்யூனிகேஷன்!"

"கவலையே இல்லை பாஸ்! அப்புறம் ஒரு சின்ன விஷயம். வசந்த்தை உதவாக்கரைன்னு அடிக்கடி சொல்லிக்கிட்டிருக்கிங்க இல்லை? ஃபோட்டோ பிடிச்சனா இல்லையா?"

"உனக்கும் கொஞ்சம் புத்தி இருக்குடா!"

"அந்தப் பொண்ணு தொடையைத் தடவினதும் மூளை சுறுசுறுப்பாயிடுச்சு!"

ஸ்டைன் ஹாஃப் காத்திருந்த பொலிஸ் அலுவலகம் நவீன ஆபீஸ் போலிருந்தது. நீளமான காரிடாரில் மௌனமாக நடந்தார்கள். ஒற்றைப் படை எண்கள் ஒருபுறம் இரட்டைப் படை மறுபுறம். மார்க் ஸ்டைன் ஹாஃப் என்ற ஆரவாரமில்லாத சிறிய போர்டு அமைத்த அறைக்குள் அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள்.

"ஹலோ மிஸ்டர் கணேஷ், ஹலோ மிஸ்டர் வசந்த்?" ஜன்னல் திரையைத் திறந்ததும் ம்யூனிக் நகரம் சகலமும் விரிந்தது. சுவற்றில் மிகச்சிக்கலான ம்யூனிக் நகரின் வரைபடங்கள். வர்ண வர்ணக் கோடுகள். இழுத்துப் பிரிக்கப்பட்ட விஸ்தாரச் சதுரங்கள். ஓரத்தில் ஒரு கம்ப்யூட்டர் டெர்மினல். மூன்று வர்ணங்களில் டெலிஃபோன்கள்.

"உட்காருங்கள்!"

"வசந்த் எடுத்த படம் எங்களிடம் இருக்கிறது!"

"க்ளெவர்!" அருகில் இருந்த ஹோனிஷிடம் அதை ஜெர்மனில் சொல்ல அவன் வசந்தின் கையைப் பிடித்துக் குலுக்கினான்!

"வலிக்கிறது விடுறா!"

அரைமணியில் அந்த ஃபோட்டோ ஈரமாக பெரிசாக வந்து மேஜைமேல் வைக்கப்பட்டது. கணேஷ் பார்த்துக் கொண்டிருக்க அவன் பின்னே அந்த ஆள் பக்கவாட்டில் தெரிந்தான். ஸ்டைன் ஹாஃப்பும், ஹோனிஷும் அதை ஆர்வத்துடன் ஆராய்ந்தார்கள். ஹோனிஷ் உதட்டைப் பிதுக்கினான்; தலையைச் சொறிந்தான்.

"சரி! உபயோகப்படும். இதை கம்ப்யூட்டருக்கு அனுப்புகிறோம். சற்று நேரத்தில் இவன் யார் என்று தெரிந்துவிடும். மிஸ்டர் கணேஷ்! அவர்கள் உங்களிடம் சரக்கு கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார்கள் அல்லவா?"

"ஆம்! என்ன சரக்கு?"

"அப்படி என்றால் சரக்கு உங்களுடன் வந்திருக்க வேண்டும். உங்கள் பெட்டிகளைத் தீவிரமாகப் பரிசோதித்துப் பாருங்கள். அதில் ஏதாவது லைனிங் கொடுத்து மறைவாக ஏதாவது இருக்கிறதா பாருங்கள். உங்களை அறியாமல் அந்தப் பெட்டிக்குள் ஏதாவது இருக்கலாம்!"

"சந்தேகம். நான் கொண்டு வந்தது பழைய பெட்டி!"

"மிஸ்டர் வசந்த்?"

"நான் புதிதாக ஒரு பெட்டி வாங்கினேன்!"

"எதற்கும் இரண்டையும் பார்த்து விடுங்கள். கிழித்தே பார்த்துவிடுங்கள். அப்புறம் உங்கள் பொருட்கள் ஒவ்வொன்றையும் மிக நுட்பமாக ஆராய்ந்து விடுங்கள். முக்கியமாக பவுடர் டப்பா, பாட்டில்கள், சிறிய பெட்டிகள்... ஷேவிங் சாதனங்கள்... எல்லாவற்றையும்...!"

"சரி!"

"கவலைப்படாதீர்கள். வேறு பெட்டி வாங்கிக்கொடுத்து விடுகிறோம்."

"கவலையே இல்லை! உங்கள் பொலிஸ் திறமை எங்களை ஆச்சரியப்படுத்துகிறது...!"

"பீர் சாப்பிடப் போய் வம்பில் மாட்டிக் கொண்டீர்களாமே? அங்கெல்லாம் ஏன் போகிறீர்கள்?

"நல்லவேளை, உங்கள் ஆசாமி ஒருவர் வந்து காப்பாற்றினார்."

"கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் மறுபடி உங்களுடன் தொடர்பு கொள்ளுவார்கள்! அடுத்த தடவை அவர்களுடன் பேசும்போது... 'பொலிஸ் என்னைத் தொடர்கிறார்கள் என்கிற பயம் எனக்கு இருக்கிறது' என்று வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள். என்ன?"

"எதற்கு?" என்றான் கணேஷ் ஆச்சரியத்துடன்.

"உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு. பிற்பாடு புரியும்."

"எனக்கு ஒரு சந்தேகம்!"

"சொல்லுங்கள்."

"சென்னையில் என்னுடன் தொடர்பு கொண்ட கோஷ்டி என்னிடம் சரக்கு எதுவும் கொடுக்கவே இல்லை. டிக்கெட்டிற்கு பணம் கொடுத்தார்கள். நான் எப்படி அதில் நுழைந்தேன்- அந்தப் பெண்ணிற்குப் பதிலாக? அப்படி என்றால் அந்தப் பெண்ணிடம் ஏற்கனவே அவர்கள் ஏற்பாடு ஏதாவது செய்திருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டை, மாற்றுவதற்கு அவசியம் இருந்திருக்கவில்லை. 'சரக்கு' என்பது அந்தப் பெண்ணிடம் இருந்திருக்க வேண்டும். அந்தப் பெண் இறந்து போய் அவள் இங்குவர முடியாமற் போய்விட்டது. இருந்தும் வேறு ஏற்பாடுகள் ஏதும் தேவையில்லாமல் இருந்திருக்கிறது! இதில் ஒரு செய்தி இருக்கிறது."

"புரியவில்லை."

"அந்தப் பெண் அந்த நாட்டிய கோஷ்டியைச் சேர்ந்தவள். அந்த நாட்டியக் கோஷ்டி கொண்டுவரும் பெட்டிகளில் ஒன்றில்தான் சரக்கு இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அது அவளுக்கு மட்டும் தான் தெரியும். அவள் என்னிடம் சொல்லி விட்டாள் என்று அவர்கள் நம்பி எனக்கு டிக்கெட் மட்டும் வாங்கினார்கள். எனவே பொருள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. நான் மத்யஸ்தம் பேசத்தான் அனுப்பப்பட்டிருக்கிறேன் என்பது தெளிவாகிறது."

ஸ்டைன் ஹாஃப் யோசித்து, "நீங்கள் சொல்வது சாத்தியம். எதற்கும் உங்கள் பெட்டிகளையும் பார்த்து விடுங்கள்."

"சரி, அந்த கலாராதனாவின் பெட்டிகளை எப்படிச் சோதிக்கப் போகிறீர்கள்?"

"அது சுலபம். அவர்களை ஹொட்டல் மாற்றும்படி ஏற்பாடு செய்து. மாற்றுகையில் பெட்டிகள் அத்தனையையும் குடைந்து சோதித்து விட்டு அனுப்பிவிடுவோம். அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

"நல்லது."

"நீங்கள் எடுத்த ஃபோட்டோ எங்களுக்கு ஏராளமாக உதவப்போகிறது. கவலைப் படாதீர்கள். சற்று ஜாக்கிரதையாக இருங்கள். இரவில் தனியாகச் செல்லாதீர்கள். டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருங்கள்."

திரும்ப அவர்கள் ஹொட்டலுக்கு வந்தபோது மாலை ஆறு மணியிருக்கும். அந்தப் பெண் மாறியிருந்தாள். மற்றொருத்தி. லாபியில் டெலிவிஷன் கேட்பாரற்று கலர் கலராகக் காட்டிக்கொண்டிருந்தது. விளம்பரங்கள். கணேஷுக்குப் பசித்தது. அந்தப் பெண்ணிடம் சென்று,

"இங்கிலீஷ் வருமா?" என்றான்.

"கொஞ்சம் கொஞ்சம்."

"அரிசி இருக்கிறதா என்று ஜெர்மனியில் எப்படிக் கேட்பது?"

"ஹாபன்ஸி, ரய்ஸ்."

ஹாபன்ஸி ரய்ஸ் என்று அந்த ரெஸ்டாரண்டில் கேட்டார்கள்.

"யோயா" என்று தலையாட்ட 'அப்பாடா' என்று இரண்டு பிளேட் ஆர்டர் செய்தார்கள். பொறுக்கி பத்துப் பதினைந்து அரிசியை அரைவேக்காடாகக் கொண்டு வைத்து சுற்றியும் சில தழை அமைத்துக் கொண்டுவந்து வைத்தான் வெய்ட்டர். ஓரத்தில் உப்பில்லாமல் வேக வைத்த உருளைக்கிழங்கு.

ஓரத்தில் சாப்பிட்டுப் பார்த்தார்கள்.

"ரெண்டு நாளில் நாக்கு செத்துப் போய்டும் போல் இருக்கு! நல்ல நார்த்தங்கா ஊறுகா கிடைச்சா நாக்கில் தேச்சுக்கணும் போல இருக்கு... அங்க பாருங்க?"

அடுத்த மேஜையில் ஒருத்தன் மிகச் சிறிய முள் கரண்டியால் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்!

"என்ன சாப்பிடறான் தெரியுமா?"

"என்ன?"

"நத்தையை!"

"குமட்டறது வா போகலாம்!"

வெளியே வர்ண விளக்குகள் நடனமாடின. குளிர் பாதி உற்சாகத்தைக் கொடுத்தது. பசி அடங்கவில்லை. பயம் கொஞ்சம் இருந்தது. வினோத தேசம். பொலிஸ் ஒருபக்கம்; அவர்கள் மறுபக்கம். இடையே இரண்டு இந்தியர்கள். எந்த முறையில் எந்தக் கத்திக்குத்து காத்திருக்கிறது! எந்தத் துப்பாக்கி வெடிக்கப்போகிறது! எங்கே இருக்கிறது அந்தச் சரக்கு? என்ன சரக்கு அது? சென்னையில் ஒரு ஷெட்டில் கண்ணாடிக்குப் பின் பேசியவனுக்கும் ம்யூனிக் நகரத்தில் ஒரு சித்திரக் காட்சி சாலையில் முதுகுப் பக்கம் பேசினவனுக்கும் என்ன சம்பந்தம்?



முதல் தடவையாக இந்த வினோத விவகாரத்தின் உள் பொதிந்திருந்த மூர்க்கத்தனத்தின் பரிச்சயம் மறுநாள் காலை அவர்களுக்கு ஏற்பட்டது. இரவு சீக்கிரம் வந்து படுத்து விட்டார்கள். சற்று நேரம் புரியாத டி.வி. பார்த்துவிட்டு தூங்கி விட்டார்கள். காலை எழுந்து குளித்துவிட்டு ஹொட்டலின் கீழே இறங்கும்போது ரெஸ்டாரண்டிலேயே அரை வேக்காட்டு முட்டை ரொட்டி காப்பி சாப்பிட்டார்கள்.

ஹோனிஷ் வந்து அவர்களுடன் உட்கார்ந்து கொண்டான். "கம்" என்றான்.

"எங்கே?" என்றான்.

"ஸ்டைன் ஹாஃப் வரச் சொன்னாரா?"

"யா யா" என்றான்.

இருவரும் அவனுடன் சென்றார்கள். கருநீலநிற மெர்ஸீஸ் கார் அது. ஏறிக் கொண்டார்கள். பொலிஸ் இலாக்காவினுடையது என்பதற்கு அடையாளங்கள் ஏதும் இல்லை. ரேடியோ ஒலித்துக் கொண்டிருந்தது. அதன் மைக் ஃபோனை எடுத்து ஹோனிஷ் ஏதோ பேச ஸ்டைன் ஹாஃபின் குரல் ஒலித்தது;

"மிஸ்டர் கணேஷ், நீங்கள் கொடுத்த ஃபோட்டோவிலிருந்து அந்த ஆளைக் கண்டுபிடித்து விட்டோம். அவனைச் சந்திக்கப் போறோம். சின்னச் சின்ன காரியங்கள் செய்யும் பழைய குற்றவாளி அவன். அவனை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா என்று பார்க்கலாம்."

கணேஷ் மைக்கை வாங்கி, "அவன் முகத்தை கண்ணாடியின் பிரதிபிம்பமாகத்தான் பார்த்தேன், குரல் ஞாபகம் இருக்கிறது" என்றான்.

"சரி பார்க்கலாம்."

கார் விரைந்தது. மிக நவீனமான அகலமான பாட்டைகளைக் கடந்து சென்றது. வசந்த் ஹோனிஷிடம், "அது என்ன இடம்?" சைகை மூலம் புரியவைத்துக் கேட்டான்.

"ஷ்வாபிங்!" என்றான்.

(தொடர்ந்து வரும்)

---

அமெரிக்க

## வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன் 08

**ராஜையா**

'அரபு ஒற்றுமையைக் குலைக்க ஈராக் இராணுவத்தை அனுப்புவதா? இது இனத் துரோகம்' என்று எல்லா ஈராக்கியர்களையும் போல சதாமும் குமுறினான்.

'இந்நேரம் நான் மட்டும் இராணுவத் தளபதியா இருந்திருந்தா...?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். எந்திரத்துப்பாக்கியால் டட்டட்டட... என்று சுட்டு, ஈராக் ஆட்சியாளர்களையெல்லாம் சில வினாடிகளுக்குள் கொன்று குவிக்கும் காட்சி அவன் மனக்கண்ணுக்குள் விரிந்தது.

இராணுவத்தில் சேர முடியாமல் போனதை நினைத்து மீண்டும் வருந்தினான்.

இனி என்ன செய்வதென்று தெரியாமல், என்ன செய்கிறோம் என்றும் புரியாமல் எந்திரம் போல் வானொலியைத் திருகினான்.

நிலைய வித்வான் வயலின் வாசித்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று ஒலிபரப்பு நின்றது.

சில நிமிடங்களுக்குப் பின் வானொலி மீண்டும் பேசியது.

"இராணுவ உயர் அதிகாரி அப்துல் சலாம் ஆரி.:ப் இப்போது நாட்டு மக்களுக்கு ஒரு முக்கிய செய்தியை அறிவிப்பார்...!"

-இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இராணுவ அதிகாரியின் குரல் வானொலியில் கம்பீரமாக ஒலித்தது...

"எல்லாம் வல்ல அல்லா அருள் புரிவானாக. ஈராக் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!"

1958 ஜூலை 14-ந் திகதியாகிய இன்று ஈராக் வரலாற்றில் ஒரு பொன்னாள்!

எகிப்து-சிரியா இணைப்பை உடைத்தெறிய ஈராக் ஆட்சியாளர்கள் இட்ட உத்தரவை ஏற்க மறுத்து இன்று ஈராக் இராணுவத்தினர் புரட்சி செய்தார்கள். அவர்கள் ராஜ குடும்பத்தினர் வசித்து வந்த அரண்மனையைச் சுற்றி வளைத்து திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இரண்டு மணிநேர முற்றுகைக்குப் பின் இளவரசர் இரண்டாம் .:பைசால், இளவரசர் சார்பில் நாட்டை ஆண்டு வந்த அவரது தாய் மாமன் அப்துல்லா,



அப்துல்லாவின் தாய் மற்றும் சகோதரி ஆகியோர் இனப்பற்று மிக்க இராணுவத்தினரின் எந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இதன் மூலம் மன்னராட்சி என்ற பீடை ஈராக்கிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டது.

இன்று முதல் ஈராக்கில் குடியரசு மலருகிறது. இராணுவத் தளபதி அப்துல் கரீம் காசிம் ஈராக் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார் என்பதை இனப்பற்று மிக்க ஈராக் இராணுவத்தினர் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்."

வானொலிச் செய்தியைக் கேட்ட சதாம் இது கனவா? நனவா? என்று தடுமாறினான். பின்னர் "மன்னராட்சி ஒழிந்தது!" என்று குதித்தான். சந்தோஷம் தாங்காமல் வீட்டுக்கு வெளியே ஓடி வந்தான்.

அவனைப் போலவே வானொலிச் செய்தி கேட்ட பாக்தாத் நகரவாசிகள் உற்சாகம் பொங்க தெருவுக்கு வந்து ஆடினார்கள்: பாடினார்கள். "துரோகிகள் ஒழிக! இராணுவம் வாழ்க!" என்று விண்ணதிர முழங்கினார்கள். "பழிக்குப் பழி வாங்குவோம்!" என்று கர்ஜித்தார்கள். கும்பல் சேர்ந்தார்கள். தெருவே அடைக்கிற மாதிரி திருவிழாக் கூட்டம் போல் கிளம்பிப் போனார்கள். அவர்களுடன் சதாமும் சேர்ந்துகொண்டான்.

இத்தனை நாட்களும் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை அந்தக் கும்பல் தெருவில் அவிழ்த்துக் கொட்டியது. அது இங்கிலாந்து தூதரகத்தைத் தாக்கியது. உள்ளே புகுந்து சூறையாடியது.

பின்னர், சதாம் முன் செல்ல, அவனைப் பின்தொடர்ந்து வந்த அந்தக் கும்பல், 'ஹோ'-வென அரண்மனைக்குள் புகுந்தது. அரசரின் பிரதிநிதியாக நாட்டை ஆண்டு வந்த அப்துல்லாவின் பிணைத்தைத் தேடி எடுத்து, குண்டு துளைத்திருந்த அந்த உடலை ஆத்திரத்துடன் அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைத்து, பின்னர் அதை பாக்தாத் நகர தெருக்கள் வழியே எல்லோரும் பார்க்க கோபாவேசத்துடன் தரதரவென்று இழுத்துச் சென்றது.

இவற்றிலெல்லாம் குதூகலத்துடன் கலந்துகொண்ட சதாமுக்கு ஆத்திரம் இன்னும் குறையவில்லை. "பிரதமர் நூரி சேத் என்ன ஆனான்?" என்று தனக்குத் தெரிந்தவர்களிடம் விசாரித்தான். "இராணுவத்தின் கையில் நூரிசேத் சிக்கவில்லையாம்!" என்ற பதிலைக் கேட்டு ஏமாற்றம் அடைந்தான். அந்த பிரிட்டிஷ் ஏஜெண்ட் தப்பி விடக்கூடாது என்று மனசுக்குள் படபடத்தான்.

மறுநாள் நூரி சேத் பெண்வேடமணிந்து வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல முனைகையில் இராணுவத்திடம் பிடிபட்டான். உடனே, சுட்டுக் கொல்லப்பட்டான். பின் அடக்கம் செய்யப்பட்டான்.

நூரி சேத் கொல்லப்பட்ட செய்தி கேட்டு சதாம் ஊழிக்கூத்து ஆடினான். அவனோடு மற்றவர்களும் சேர்ந்துகொள்ள, ஆவேசக் கும்பல் மீண்டும் தெருவை அடைத்த மாதிரி புறப்பட்டுச் சென்றது.

நூரி புதைக்கப்பட்ட இடத்தை அது தேடி கண்டுபிடித்தது. கல்லறையைத் தோண்டியது. "எங்கே ஒளியப் பாக்குறே?" என்று இரைந்தவாறு நூரியின் பிணத்தை வெளியே எடுத்தது. ஆத்திரம் தீரும்வரை அதை வெட்டிச் சிதைத்தது. அப்துல்லாவின் பிணத்தைப் போலவே இதையும் தெருத்தெருவாக இழுத்துச் சென்றது. இந்த 'வைபவத்தில்' சதாம் உற்சாகமாகக் கலந்து கொண்டான். கலவர வெறியாட்டத்தில் முன்னணி வகித்தான். இது தவறு என்றோ, தேவையற்றது என்றோ அவனுக்குத் தோன்றவே இல்லை.

'அரபு இனத்துக்கும், அரபு தேசத்துக்கும் ஒருவன் துரோகம் செய்தால், அவன் பிணத்தைக் கூட முழுசாய் விட்டு வைக்கக்கூடாது' என்ற வெறி மட்டும்தான் அப்போது அவன் மனதில் இருந்தது.

புதிய ஜனாதிபதி காசிம்மீது நிறைய நம்பிக்கை வைத்தான் சதாம்...

அந்த நம்பிக்கை நீடிக்கவில்லை...

நீடிக்க காசிம் விடவில்லை...

சதாம் உசேன் உன்னிப்பாகப் பார்த்தான்.

மறுமலர்ச்சிக் கட்சியின் தீவிர உறுப்பினர் என்ற முறையில், புதிய ஆட்சியை, அதன் செயல்பாடுகளை, புதிய ஜனாதிபதி அப்துல் கரீம் காசிமின் போக்குகளை அவன் கவனமாகப் பார்த்து வந்தான்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# நிலவு 14

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்
எழுதியுள்ள
விறு விறு காதல்கதை....
உங்கள் இதயத்தில்
இந்தக் கதையின் நாயகி
'நிலா'வுக்கும்
இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

# முள் நிலவு

"விமானத்தில் கோளாறு இப்போது சரிசெய்யப்பட்டு விட்டது. அடுத்த சில நிமிடங்களில் விமானம் பத்திரமாகத் தரையிறங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்..."

வெங்கடேஷ்வரன் மனைவியை முறைத்தார். "பார்த்தியா..! ஃப்ளைட் கோளாறை சரி பண்ணிட்டாங்க... கொஞ்ச நேரத்துக்குள்ளே நீ என்னென்ன பேச்செல்லாம் பேசிட்டே...." நிலாவுக்குக் கேட்டு விடாமல் கிசுகிசுத்தார்.

"இப்பவும் சொல்றேங்க...! எனக்கு இந்த சம்பந்தத்துல இஷ்டமில்லை..."

"முட்டாள்தனமா உளறாதே...! இப்படியெல்லாம் பேசினா அந்தப் பெண்ணோட மனசு கஷ்டப்படாதா...?"

"எனக்கு அதைப்பத்தி என்ன கவலை...? என்னோட மனசுக்குப்பட்டதை சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்..."

"மாமா...!"

குரல் கேட்டு வெங்கடேஷ்வரன் திரும்பினார்.

நிலா கண்களில் நீர் நிரம்பி பளபளத்தது.

"என்னம்மா...?"

"அத்தைக்கு என்பேர்ல கோபம் வர்றது நியாயம்தான். உங்க மகன் பத்திரமா வந்து சேர்ந்ததும் என்மேல இருக்கிற கோபம் மாறிடும்.... இந்தக் கல்யாணம் நடக்கணும்னு அவங்க பிரியப்பட்டா நடக்கட்டும். இல்லேன்னா வேண்டாம். நானும் அப்பாவும் வீட்டுக்கு கிளம்பறோம்...."

சொல்லிக்கொண்டே நகர முயன்ற நிலாவை, குரலை உயர்த்தித் தடுத்தார்.

"நில்லம்மா..."

நின்றாள்.

"அவ ஏதோ பேசிட்டாள்ங்கிற துக்காக நீ இப்படி போறது சரியாம்மா...? உன்னோட அத்தை பேசினது எதையுமே மனசுல வைச்சுக்காதே...! ப்ளைட்டை விட்டு இறங்கி வந்ததுமே கிருஷ்ணகாந்த் உன்னைத்தான் கேட்பான். இதோ... ப்ளைட்டும் லேண்ட் ஆகப்போறது. கிருஷ்ணகாந்த்தை எல்லோருமே சேர்ந்து சந்தோஷமா ரிஸீவ் பண்ணுவோம்."

நிலா தன் பார்வையை ரன்வேயின் கோடிக்குக் கொண்டு போனாள். விமானம் ரன்வேயில் தன் சக்கரங்களைப் பதிக்கும் கடைசி விநாடிகளில் இருந்தது.

காற்றில் ஆகாயத்தையே 'அறைத்துத் தள்ளுகிற மாதிரி இரைச்சல்.

நிலா வைத்த கண் வாங்காமல் விமானத்தையே பார்த்துக்கொண்டிருக்க-

அது ராட்சசப் பறவையாய் மாறி இரை எடுக்கிற தினுசில் தாழ்ந்து ரன்வேயைப் பற்றியது.

அடுத்த விநாடி...

ர்ர்ர்ர்ரொய்ங்க்க்.... என்று ஆயிரக்கணக்கான ஆணிகள் ஒரு பெரிய தகரப் பரப்பைச் சீறிக் கிழிப்பது போன்ற சத்தம் அந்தப் பிராந்தியத்தையே கிடுகிடுக்க வைக்க- விமானத்தின் சக்கரங்களில் தீபாவளி மத்தாப்பு போல் தீப் பொறிகள் பறந்தன.



'விமானத்துக்கு என்னாயிற்று?' என்று எல்லோரும் திகைத்துக் கொண்டிருக்கும் போதே-ரன்வேயில் தாறுமாறாய் இழுபட்ட விமானம் ஒரு மோசமான ரோட்டில் பயணம் செய்யும் ஆட்டோவைப் போல் எம்பி எம்பி குதித்து, ஒரு எம்பலில் இடது பக்கமாய்ச் சரிந்து-

பின்-

ஒரு நெருப்புக்கோளமாய் வெடித்துச் சிதறியது. இருபது மீட்டர் உயரத்திற்கு தீக்கங்குகள் எகிறி விழுந்தன.

பார்த்துக்கொண்டிருந்த நிலாவின் விழிகள் அப்படியே உறைந்துபோக- அவள் தன் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு 'நோ...ஓ...ஓ....ஓ....ஓ...' என்ற மிகப் பெரிய அலறலோடு அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

-★-

மேற்கொண்டு எழுதும் முன் என் அறை வாசலில் நிழலாடியது. கலைந்து போய் நிமிர்ந்தேன்.

என் மனைவி.

"என்ன...?"

"நிலாவோட அப்பா சிவராஜன் உங்களைப் பார்த்துப் பேசறதுக்காக வந்திருக்கார்."

நான் எழுந்து போனேன்.

என் வீட்டு முன்னறை சோபாவில் சிவராஜன் மழிக்காத வெள்ளை ரோம மோவாயோடு உட்கார்ந்திருந்தார்.

கைகளைக் குவித்தேன்.

"வணக்கம்... வாங்க..."

"மன்னிக்கணும்...! எழுதற நேரத்துல வந்து உங்களைத் தொந்தரவு பண்றேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை... உங்க வீட்டுக்கு இன்னும் கொஞ்ச நேரத்துல நானே வரலாம்ன்னு இருந்தேன்..." சொல்லிக்கொண்டே அவருக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்.

சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டுக் கேட்டார்.

"நீங்களும் உங்கள் மனைவியும் நிலாவை பார்க்கிறதுக்காக ஹாஸ்பிடல் போய்ட்டு வந்ததா கேள்விப்பட்டேன்..."

"ஆமா..! பம்பாயிலிருந்து வந்திருக்கிற டாக்டர் புன்னம் சந்தர் என்னை வரச் சொல்லியிருந்தார். போனேன். நிலாவுக்கு என்னைத் தெரியுதான்னு டெஸ்ட் பண்ணினார்."

"அவ உங்களை அடையாளம் கண்டு கிட்டாளா?"

"அந்த... அறிகுறி கொஞ்சம் கூட இல்லை! விமானம் வெடித்துச் சிதறிய அந்தக்கோரமான அதிர்ச்சி சம்பவம் அவளை அப்படியே புரட்டிப்போட்டிருக்கு... ஊசி முனையளவு வெளிச்சம் உள்ளே வந்தால்கூட எதையோ பார்த்து மிரண்ட மாதிரி நடுங்கிப் போயிடறா... சம்பவம் நடந்து இன்னிக்கு பதினெட்டு நாள் ஆயிடுச்சு... இருந்தாலும் நிலாவோட மனநிலையில் எந்த மாறுதலும் இல்லை... டாக்டர் புன்னம் சந்தர் எந்த மாதிரியான சைக்கோதெரபியை உபயோகப்படுத்துவார்ன்னு தெரியலை..."

சிவராஜன் கண்கள் கலங்கினார். "நிலா பழைய நிலைமைக்கு திரும்புவாளா ஆர்.கே.ஸார்...?"

"கட்டாயம் திரும்புவா...! நிலா யாருக்கும் எந்த துரோகமும் செய்யலை! ரொம்ப நல்ல பெண்ணான அவளுக்கு இது ஒரு சோதனையான காலம். என்னோட கவலையெல்லாம் அவ குணமாகப் போறது பத்தியில்லை..."

"பின்னே...?"

"குணமானதும் அவ கிருஷ்ணகாந்தோட மரணத்தை எப்படி எடுத்துக்கப்போறா... கிருஷ்ணகாந்தோட மரணத்தை சாதாரணமா எடுத்துக்கிட்டு வேற கல்யாணம் பண்ண ஒத்துக்குவாளா...? இல்லை அவன் நினைப்போடவே காலத்தை ஒட்டிடுவாளா...?"

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

"இவ குணமானாப் போதும் ஆர்.கே. ஸார். இனிமே நிலா வாழ்க்கையில கல்யாணம்ங்கிற நிகழ்ச்சி நடந்தாலும் சரி... நடக்காமே போனாலும் சரி... அவ அந்த இருட்டறையிலிருந்து வெளிச்சத்துக்கு வரணும். எங்களுக்கு ஒரு மகளா எங்க கடைசிகாலம் வரைக்கும் இருந்துட்டா போதும்."

"நிலா இப்போ ஒரு முள் நிலவு. கூடிய சீக்கிரமே அவ ஒரு முழு நிலாவாய் பிரகாசிக்கிற காலம் வரும். கவலையே படாதீங்க... மனசைத் திடப்படுத்திக்கிட்டு சந்தோஷமா இருங்க..."

நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே என் மனைவி குறுக்கிட்டாள்.

"என்னங்க..."

"ம்..."

"வெங்கடேஷ்வரன் நம்ம வீட்டுக்கு வந்துட்டிருக்கார்."

நான் பக்கவாட்டு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தேன்.

கவலையில் கறுத்துப்போன முகத்தோடு வெங்கடேஷ்வரன் தளர்ந்த நடையோடு படியேறிக் கொண்டிருந்தார்.

.....

நான் முகத்தில் ஆச்சர்யக் குறிகளை கணிசமாய் நிரப்பிக் கொண்டு படியேறி வந்து கொண்டிருந்த வெங்கடேஷ்வரனை எதிர் கொண்டேன்.

"வாங்க ஸார்.."

இறுகிய முகத்தோடு உள்ளே வந்த அவர், சோபாவில் உட்கார்ந்திருந்த சிவராஜனைப் பார்த்து விட்டு இன்னமும் முகம் இறுகினார். ஒரு விநாடி தயங்கி விட்டு பின் வாங்கினார்.

"நான் அப்புறமா வர்றேனே...?"

நான் அவருடைய கையைப் பற்றினேன். "பரவாயில்லை வாங்க ஸார்...! இனியும் உங்களுக்குள்ளே எதுக்காக இந்த பாராமுகம்... என்கிட்ட ஏதோ சொல்ல வந்திருக்கீங்க... அதை இவர் முன்னாடியே நீங்க தாராளமா சொல்லலாம்...! ப்ளீஸ்... உட்காருங்க..."

வெங்கடேஷ்வரன் தயக்கமாய் வந்து உட்கார்ந்தார். சிவராஜன் தலைகுனிந்து தன் வேஷ்டியின் மடிப்பை மெதுவாய் நீவி விட்டுக் கொண்டிருக்க- நான் வெங்கடேஷ்வரனுக்கு முன்பாய் இருந்த நாற்காலிக்கு வந்து சாய்ந்தேன்.

"சொல்லுங்க ஸார்... என்ன விஷயம்...?"

அவர் தன் கையோடு கொண்டு வந்திருந்த தோல்பையின் ஜிப்பைப் பிரித்து ஒரு பழுப்பு நிறக் கவரை எடுத்தார்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

# கவியரசுவின் 16 சுயசரிதை

கவியரசு கண்ணதாசன் எழுதிய-அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

சிறைச்சாலைக்குள் அவர்கள் நுழையும்போது மாலை ஆறு மணி இருக்கும்.

சிறைச்சாலை மூடப்பட்ட நிலையிலேயும் உதவி ஜெயிலர் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

எல்லாக் கைதிகளும் அங்க அடையாளம் குறிக்கப்பட்டு உள்ளே அனுப்பப்பட்டார்கள்.

அவர்களுக்குச் சிறைச்சாலையிலேயே உணவு சொல்லப்பட்டிருக்கிறதென்று மாஜிஸ்ட்ரேட் சொல்லியிருந்தார்.

ஆனால், சிறைச்சாலையில் அப்படி எந்த ஏற்பாடும் இல்லை.

அன்று இரவு மட்டும் அவர்களை 'காமன் பிளாக்' என்னும் பொதுக் கொட்டடியில் அடைத்தார்கள்.

அங்கே ஏற்கனவே பல வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட கைதிகள் சுமார் ஐம்பது பேர் நிறைந்திருந்தார்கள்.

புதிய கைதிகளைப் பார்த்ததும் அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

அவனிடமும் ஒரு கைதி வந்து "என்ன சார், பேங்க் கேஸா?" என்று கேட்டான்.

திருச்சி நகரத்திலிருந்த ஒரு பேங்க் அப்போதுதான் திவாலாகியிருந்தது.

அது சம்பந்தப்பட்ட கைதிதான் போலிருக்கிறது இவனும். என்று கருதி அந்தக் கைதி அனுதாபத்தோடு விசாரித்தான்.

"இல்லைப்பா நான் டால்மியாபுரம் கைதி!" என்று அவன் பதில் சொன்னான்.

"எத்தனை மாதம் சார்?" என்று அவன் கேட்டான்.

"பதினெட்டு மாதம்!"-அவன் பதில் சொன்னான்.

அந்தக் கைதிக்குக் கோபம் வந்துவிட்டது.

"எந்த மாஜிஸ்ட்ரேட்?" என்று கேட்டான்.

நீதிபதியின் பெயரை அவன் சொன்னான்.

உடனே அந்தக் கைதி நீதிபதியைக் கடுமையான வார்த்தைகளில் திட்டத் தொடங்கினான்.

"விடாதே சார்; அப்பீல் பண்ணு!" என்று அவனுக்கு யோசனை சொன்னான் கைதி.

அன்று இரவு அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு எதுவுமில்லை என்று தெரிந்ததும், எல்லாக் கைதிகளும் அவரவர் சேமித்து வைத்திருந்த பழைய கஞ்சியைக் கலயத்தோடு, எடுத்துக் கொடுத்தார்கள்.

கழுவப்படாத கலயங்கள்!

மூடப்பட்டிருந்ததோ அழுக்குப் படிந்த துணிகள்!

அவன் அந்தக் கஞ்சியைத் தொடக்கூட விரும்பவில்லை.

ஆனால் வேறு வழி?

இருந்ததிலேயே கொஞ்சம் சுத்தமான கலயத்தைப் பார்த்துக் கையிலே வாங்கிக் கொண்டான்.

மோரிலே ஊறப்போட்டிருந்த கஞ்சியை நன்றாகக் கரைத்தான்.

'மட, மட' வென்று குடித்துவிட்டான்.

எண்ணெய் படிந்து கறுத்துக் கிடந்த தரையில் தன் மேல் துண்டை விரித்து அவன் படுத்துவிட்டான்.

பொழுது விடிந்தது.

திருச்சி மத்திய சிறையின் பரப்பளவை



அவன் அப்போதுதான் பார்த்தான்.

உட்பக்கமாக சிறையின் மதிலைச் சுற்றி வருவதென்றாலே ஒரு மணி நேரமாகும்.

பிரம்மாண்டமான ஒரு தொழிற்சாலை கட்டக்கூடிய நிலம் சிறைச்சாலையாக வடிவெடுத்திருப்பதுபோல் தோன்றிற்று.

கைத்தறி நெசவு, தையல் வேலை, மாடு வளர்ப்பது போன்ற பல தொழில்கள் உள்ளே இருந்தன.

பலவகையான தொழிலாளிகளும் குற்றவாளிகளாக வரக்கூடுமல்லவா!

சிகைத் தொழிலாளி வந்தால் அவனுக்கு அதே வேலை!

சலவைத் தொழிலாளிக்கென்று தனி டோபி யார்டு!

சமையல் தொழிலாளி என்றால் என்பது வருஷங்களாக இடைவிடாமல் எரிந்து கொண்டிருக்கும் அடுப்பிலே சமையல் வேலை.

தபால் ஊழியர்கள் வந்தால் உள்ளுக்குள்ளேயே பட்டுவாடா.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் குற்றம் புரிந்து வந்துவிட்டால் உள்ளுக்குள்ளேயே ஆஸ்பத்திரியில் வேலை.

மாடு மேய்ப்பவர், பால் கறப்போருக்கென்று நூற்றுக் கணக்கான மாடுகள்.

சிறைச்சாலையின் தேவை பெருமளவு பூர்த்தியாகும் வண்ணம் காய்கறித் தோட்டம்.

படித்தவர்கள் மேலும் படிக்க விரும்பினால் அதற்கொரு புத்தகசாலை.

அது ஒரு தனி உலகம்!

எல்லா வகையான மனிதர்களிலேயும் குற்றவாளிகள் இருப்பார்கள் என்பதற்கு அந்த இடம் ஓர் உதாரணம்.

குடும்பக் கவலை இல்லாதவனுக்கும் உணவைப் பெரிதாகக் கருதாதவனுக்கும் சிறைச்சாலையைவிட இனிமையான சொர்க்கம் கிடையாது.

வெளி உலகத்தின் பரபரப்பு அங்கே இல்லை.

அமைதியான சிந்தனைகள் அங்கே பூத்துக் குலுங்குகின்றன.

தினமும் அவன் ஒவ்வொரு குற்றவாளியாகக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு அவர்களுடைய கதையை விசாரிப்பான்.

பயங்கரம், மர்மம், பரிதாபம் அனைத்தும் அந்தக் கதைகளில் வரும்,

சில கொலையாளிகளை அவன் அங்கே சந்தித்தான்.

கொலை செய்யும்போது அவர்கள் இருந்த நிலமை வேறு; தண்டனை பெற்ற பின் இருந்த நிலைமை வேறு!

தாங்கள் உணர்ச்சிக்கு வசப்பட்டுவிட்டதற்காக அவர்கள் தலையிலே அடித்துக்கொண்டார்கள்.

அங்கு போன சில நாட்களிலேயே எந்த வகையான குற்றங்கள் அதிகம் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது.

எண்ணிக்கையில் அதிகமாக இருந்த குற்றவாளிகள் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்.

இரண்டாவது இடத்தை வகித்தவர்கள் 'பிக்பாக்கெட்' அடிப்பவர்களும். ஆடு மாடு திருடுபவர்களும்,

மூன்றாவது எண்ணிக்கை 'ஜாமீன் கேஸுகள்' எனப்படும் நிரபராதிகள்.

நான்காவது கொலைகாரர்கள்.

கொலைகாரர்களிலேயும் எந்தக் காரணத்திற்காகக் கொலை புரிந்தோர் அதிகம் என்பதையும் அவன் ஆராய்ந்தான்

பெண் தகராறு காரணமான கொலைகளே அதிகம்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதவி



ரி. சத்யநாராயணன்

தன்னுடைய அபிமான நட்சத்திரம் நடித்த அந்தப் புதுப்படத்திற்கு டிக்கெட் கிடைக்க வேண்டுமே... என்ற அதிமுக்கிய(?) கவலையுடன் வேகமாக சைக்கிளில் பறந்தான் முகுந்தன்.

அப்போது-

ஒரு மூதாட்டி வீதியைக் கடக்க-அவளை மோதித் தள்ளினான்.

சுற்றும், முற்றும் பார்த்தான்; யாருமில்லை!

'சனியன்! நம்ம வண்டியிலா வந்து விழவேண்டும்? இந்தக் கிழவியைப் பரிதாபம் பார்த்தா படம் ஹவுஸ் ஃபுல்லாயிடும். நாம பறந்துட வேண்டியதுதான்...' என மனதுக்குள் தீர்மானித்து நிற்காமல் பறந்து போனான்.

கீழே விழுந்த அந்த மூதாட்டி வலியினால் புலம்பிக் கொண்டிருந்தாள்.

சினிமா பார்த்துவிட்டு மாலை வீடு திரும்பிய முகுந்தனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவனுடைய அம்மாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருப்பதாகச் சொன்னார்கள் பக்கத்து வீட்டினர்.

ஆஸ்பத்திரியில் அம்மா காயங்களுடன் படுக்கையில் கிடந்தாள். பக்கத்தில் ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

முகுந்தன் "அம்மா... என்ன ஆச்சு?" என்று கத்தினான். அந்த இளைஞன் முகுந்தனிடம்-

"அவங்களை தொந்தரவு செய்யாதீங்க. ஒரு ஆட்டோக்காரன் இவங்கமீது மோதிட்டுப் போயிட்டான். காயமுற்று விழுந்து கிடந்த இவங்களை நான்தான் இங்கே கொண்டு வந்து சேர்த்தேன். நீங்க உங்கம்மாவை கவனிச்சிக்குங்க. நான் வர்றேன்..." என்று கூறிவிட்டு சென்றான்.

ஒரு மூதாட்டியை 'தள்ளிவிட்டுட்டு கவனிக்காம வந்துவிட்ட குற்ற உணர்வுடன் குறுகிய மனிதனாய் நின்றிருந்தான் முகுந்தன். ■

# உரமாகும் விதைகள்



எம்.சண்முகராஜா – தலவாக்கலை

சூரியனின் செம்மஞ்சள் நிறத்தைப் பிரதிபலிப்பது போன்று செம்பச்சை நிறமாக தேயிலை மலைகளும் காட்சியளித்தன. அந்த மலைகளுக்கிடையே இருந்த ஒற்றையடிப் பாதையூடாக வேலைக்கெனச் செல்ல இடுப்பில் படங்கும், தலையில் கூடையும், கையில் எட்டு அடி நீளத்திற்கு மெல்லிய மூங்கில் தடியும் (மட்டகம்பு) தாங்கிய பெண்கள் ஒருவர். பின் ஒருவராகச் செல்ல, அவர்களுக்கு முன்பாக தலைப்பாகையுடன், நிறம் வெளுத்த பழைய கோட்டு அணிந்த கங்காணியும் செல்லும்போது சர்வதேச மரியாதை அணிவகுப்புக் குழுவொன்று வேற்றுக் கிரகத் தூதுவர் ஒருவரை வரவேற்கச் செல்வது போன்று தோன்றியது.

மூக்கனும், இன்னும் இருவரும் யாரோ கொடுத்த நீளக் காற்சட்டை ஒன்றை முழங்காலுக்கு மேலாக அறுத்து, சிறிது நூல்கள் தொங்கும்படி செய்து அரைகாற்சட்டையாக அணிந்து கொண்டபடி அந்தப் பிரதான பாதையோரமாக இருந்த கற்பாறை ஒன்றில் அமர்ந்து சாணி உரம் ஏற்றுவதற்காக வரும் டிப்பர் லொறியை எதிர்பார்த்தபடி காத்திருந்தார்கள்.

ஒரு லோட் உரம் ஏற்றி முடிக்க நானூறு ரூபா கொடுப்பார்கள். அந்தத் தொகையை உரம் ஏற்றுவதில் பங்கு கொள்ளும் அனைவரும் பிரித்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் அவர்களது உழைப்பு, சம்பாத்தியம். வீட்டுக்குச் சில உணவுப் பண்டங்கள் உட்பட அரைக்கால் போத்தல் சாராயம் குடித்துவிட்டு மிகுதியாய் இருக்கும் சில சில்லறைகளுக்கு முறுக்கும் பீடியும் வாங்கிக் கொண்டு நிம்மதியாய் வீட்டுக்குப் போய் விழுந்து விடுவார்கள்.

ஆனால் மூக்கனுக்கு, அந்தத் தோட்டப் பாடசாலையில் பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் தனது மகன் கண்ணாவின் தொல்லையே அதிகம்.

'தோட்டத்து வேலய ஒழுங்கா செய்யாம, தொரய அடிக்கப்போயி, அந்தாளு வேலய நிப்பாட்டுனதுமுல்லாம, பதினாலுனா சல்லி, பிராடபண்டு எல்லாத்தையும் ஒரு மாசத்துல கொடுத்து வூட்ல உட்கார வச்சிட்டான்.....' மூக்கனுக்கு நினைக்கும்போது தனது பெண்டாட்டி மீதுதான் ஆத்திரமாக வந்தது.

'சனியேம்புடிச்சவ, எல்லாரும் பதினெட்டு கெலோ எடுத்தாங்கனாக்கா, இந்த சோம்பேறி மட்டும் பத்து, எட்டு கெலோ எடுத்து தொலைஞ்சதுனாலதானே தெனோ அறப்பேரு, அறப்பேரு.. அந்த கண்டியாம் பேச்சக்கேட்டுத்தான் தொர திருட்டு பண்றதுன்னு, அந்தாள அடிக்கப்போனது. இல்லாட்டி நானேன் சாணி உரம் ஏத்த வரணும்? வட்டிக்சில்ல கொடுத்துகிட்டிருந்தேன்.'

யாவும் வறண்ட நதியாகியபோது அந்த நதியில் கல்கட்டைகளை எறிந்து விளையாடும் சிறுவர்களின் தொல்லையைப் போல 'மூத்த குட்டி மொளச்சி மூணு எல விடுறதுக்குள்ளவே- படிச்சிகிட்டு இருக்கும்போதே ஒருத்தன இழுத்துகிட்டு போயி, இப்போ வயித்துல புள்ளையோட வேற வந்து கிடக்கிறா. அவ புருசேன்... கொழும்புக்கு போனவே... போனவந்தான்.. பதிலேல்ல.' எண்ணங்கள் மறைந்தபோது.....

தனது அடுத்த மகன் கண்ணா தன் படிப்புச் செலவுக்காக தினமும் சமினார், டியுசன், சி.ஆர் கொப்பி, கிராஃப் ஏடு, பென்சில், வோட்டர்கலர் போன்ற தான் அறியாதவற்றுக்காக, பணம் கேட்டு நச்சரித்துக்கொண்டிருப்பது மிகுந்த தலையிடியாக இருந்து வந்தது.

'நாங்கெடக்குற கெடையில சம்பினாராவது, சிம்பினாராவது...' என அலட்சியப் படுத்தி விட்டு, வாயில் குதம்பிய எச்சிலை துப்ப முயலும்போது எதிர்பார்த்த சாணி உரம் ஏற்றும் லொறி வரவே காத்திருந்த யாவரும் வேலைக்கெனக் கிளம்பினர்.

ஒருநாள் காலை வேலைக்கென கிளம்பிய மூக்கன் தனது வீட்டு வாசல்படியருகே வந்ததும் பக்கத்து வீடான சின்ன கண்ணுவின் வீட்டு வாசலில் நன்கு கொழுத்து, சிவந்த மேனியுடன் தோளில் டவல் ஒன்றையும் போர்த்திக்கொண்டு, கையில் மணிக்கூடு, வாயில் டூத் பேஸ்ட்டுடனும் பணக்கார வீட்டு பிள்ளைபோல் ஒரு வாலிபன் அமர்ந்திருப்பதைக் கண்டு வியந்தபடியே நோக்கினான்.

"என்ன... மூக்கண்ணே... நம்மள தெரியலயா...? ஜாதி ஆள் தானே! வா... ஒங்கட மகனோட ஒண்ணா ஸ்கூல் போவனே.. ராசுக்கண்ணு, அவன்தான். இப்ப சரியா... ஜாதி ஆள்தானே.. எங்க உங்கட மகன் கண்ணா.. கூப்பிடுங்களேன்" என கொழும்பு ஆசாமிபோல் அவன் சொன்ன பிறகுதான் மூக்கனுக்குப் புரிந்தது; அந்த வாலிபன் பக்கத்து வீட்டு சின்ன கண்ணுவின் மகன் என்பதும், மூன்று வருடங்களுக்கு முன்பு கொழும்புக்கு வேலைக்கு அனுப்பப்பட்டவன் என்பதும்.

தொடர்ந்து அவனுடன் பேசிக் கொண்டிருந்ததில் அவன் கொழும்பில் ஒரு ஹொட்டலில் கெஷியராக வேலை செய்வதாகவும், மாதம் சாப்பாடு போக நாலாயிரம் ரூபா உழைப்பவன் என்பதாகவும் தெரிந்து கொண்டான். மூக்கன் தனது மகன் கண்ணாவையும் அவனுடன் அழைத்துக் கொண்டுபோய், ஒரு வேலை பிடித்துக் கொடுக்கும்படியும், கண்ணாவை ஒரு பெரிய ஆளாக ஆக்கிவிடும்படியும், மாதா மாதம் தனக்கும் கொஞ்சம் காசு அனுப்பும்படியும் கேட்டுக் கொண்டான்.

அந்த வாலிபனும் சரியென்று உறுதி கூறவே மிகுந்த மகிழ்ச்சியடைந்த மூக்கன், இன்னும் இரண்டு நாட்களில் அந்த வாலிபன் கொழும்பு செல்லத் தயாராகவே தனது மகனையும் எப்படியோ வற்புறுத்தி அனுப்பி வைத்தான். ஏதோ ஆயுள் தண்டனையை அனுபவித்து முடித்த கைதியின் மனம்போல் நிம்மதி கொண்டது மூக்கனின் மனம்.

கொழும்பு வந்தடைந்ததும் எங்கோ ஒரு ஹொட்டலுக்குள் நுழைந்தான் அந்த வாலிபன் கண்ணாவுடன். ஹொட்டலுக்குள் முதலாளிடம் ஏதேதோ கதைத்த அவன் கண்ணாவையும் கூட்டிக்கொண்டு உள்ளே சமையலறைக்குள் போனான். அதன் பிறகு அந்த வாலிபன் தனது ஊரில் பார்த்த வாலிபனாகவே இல்லை. அந்த அசுத்தம் நிறைந்த சமையலறைக்குள் வேலை செய்து கொண்டிருந்த பல வியர்வை வடிந்த வெற்று உடல்களில் தானும் ஒன்றாகிப் போனான்- கண்ணாவையும் அவனைப் போலவே ஆக்கிக் கொண்டிருந்தான்.

ஊரில், தான் கெஷியராக வேலை செய்கின்றவன் என்று பொய்யைச் சொல்லி பெருமை தேடிக்கொண்ட அந்த சின்ன கண்ணு மகனை நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்ட கண்ணன், தொடர்ந்து அவன் இட்ட கட்டளைகளை செய்து கொண்டிருந்தான்.

சில நாட்களில் அந்த வாலிபனிடம் இருந்து வந்த கடிதத்தில், கண்ணன் பொலிசாரால், சந்தேகத்தில் கைதாகிவிட்டதாகவும், இன்னும் இருதினங்களில் விடுவித்து விடுவார்கள் எனவும் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படவேண்டாம் எனவும் எழுதியிருந்தான்.

ஆனால் வருடம் ஒன்றாகியும் கண்ணாவைப் பற்றிய தகவல்கள் வரவில்லை. அந்த வாலிபனிடம் விசாரித்ததற்கு "இன்று, நாளை- என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்", எனவும் சொன்னான். மனமுடைந்த மூக்கன், 'படித்துக் கொண்டிருந்தவனைப் பிடித்து நல்லா இருக்கட்டுமே என்று கொழும்புக்கு அனுப்பியது எவ்வளவு தவறு!' என்பதை உணர்ந்தபடியே பல தொழிற் சங்கங்களிலும் முறையிட்டு முயற்சித்தபடியே மாதங்கள் பலவாகிவிட்டன. எதுவும் பலன் இல்லை.

என்றோ ஒரு நாள் கண்ணன் ஜெயிலிலிருந்து தனது சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அவன் ஊருக்குள் வரும்போது அவனுடன் படித்த டீமெக்கர் மகன், கணக்குப் பிள்ளை மகன் போன்றோர் O/L டெஸ்ட் முடித்து பாஸாகி உயர்தர வகுப்புக்காக வெவ்வேறு பள்ளிக் கூடங்களுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கண்ணன் ஒருநாள் நூல் பிரிக்கப்பட்ட பழைய காற்சட்டையுடனும், ஊத்தை படிந்த பழைய டீசர்ட்டுடனும் சாணி உரம் ஏற்றும் டிப்பர் லொறி ஒன்றில் போய்க் கொண்டிருக்கும்போது, அந்த உயர்தர வகுப்பு மாணவர்களையே பார்த்தபடி போய்க் கொண்டிருந்தான். ■

# இருப்பிழந்தோர்



வெண்ணிலா சூரியகுமாரன் – வன்னி

காலையில் சொன்ன அதே செய்தியை வானொலி மாலையிலும் சொன்னது.

கிளிநொச்சியில் இராணுவம் முன்னேறுகிறதாம். விமானங்கள் புலிகளின் நிலைகளில் குண்டுமழை பொழிகிறதாம். செய்தியைக் கேட்டதும் அவனது நெஞ்சுக்குள் ஒரு அழுத்தமான துயரம் வந்து அடைத்துக் கொண்டது. இரண்டு வருடங்களாக கிளிநொச்சி பிரதேசம் அதிர்கிறது.

நாவலப்பிட்டியிலிருந்து கிளிநொச்சி எத்தனை மைல்கள் தூரத்தில் இருக்கிறது..?

ஆனாலும் அவனின் நினைவுகள் இன்னமும் கிளிநொச்சியைச் சுற்றி வந்து கொண்டுதான் இருக்கிறது. நாவலப்பிட்டிக்கு வந்து நான்கு வருடங்களாகிவிட்டன. இந்த மலைப் பிரதேசத்தையும் தேயிலைச் செடிகளையும் பார்க்கும் போதெல்லாம் மனதுக்குள் சிலிர்ப்பு ஊடுருவும். இதே சிலிர்ப்பு கிளிநொச்சியின் பரந்து விரிந்த நெல் வயல்களை பார்த்த போதும் ஏற்பட்டதை அவனால் மறக்க முடியாது.

அவன் பிறந்து வளர்ந்ததிலிருந்து பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியாக வெளிவரும் வரைக்கும் அவன் யாழ்ப்பாண வாசிதான். முதல் ஆசிரிய நியமனம் கிடைத்த போது கிளிநொச்சிக்கு முழு விருப்பத்தோடு தான் போனான்.

நகரத்தில் உள்ள வீட்டில் அறை எடுத்துத் தங்கினான். பாட்சாலை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. விஞ்ஞான ஆசிரியர்கள் குறைவாய் இருந்ததனால் அவனது விசுவாசமான சேவையை அந்த மாணவர்கள் மகிழ்வோடு உள்வாங்கிக் கொண்டார்கள். அவன்மீது மதிப்பு வைத்தார்கள். அந்த மாணவர்கள்மீது மட்டும் அல்ல அந்த மண்ணின்மீதுகூட நேசம் ஏற்பட்டது.

பரந்த பச்சை நிற வயல்கள்... அவற்றின் மேலாகப் பறந்து போகின்ற வெள்ளைக் கொக்குகள்... நீளமாய் புரண்டு ஓடும் தண்ணீர் வாய்க்கால்கள்.. எல்லாமே அவனுக்கு இரசனை மிக்க காட்சிகளாயின.

இரணைமடுக் குளக்கட்டின் மேல் பாலத்தில் நண்பர்களுடன் நடந்ததும் இலக்கியம் பேசியதும் இன்னமும் இனிமையான நிகழ்வுகளாய் மனதில் இருக்கிறது. இலக்கிய விழாக்களில் கலந்து கொண்டது... பட்டிமன்றங்களில் பேசியது.... கவிதையரங்கத்தில் கவிதை வாசித்தது..... விடிய விடிய கோவில் திருவிழாக்கள் பார்த்தது... எதையும் மறக்க முடியவில்லை. நிலவு நாட்களில் முற்றத்தில் நண்பர்களுடன் நேரம் போவது தெரியாமல் பேசிய நாட்கள் அவை. அந்த நான்கு வருட கிளிநொச்சி வாழ்வில் அவன் தேடிய நண்பர்கள் எத்தனைபேர்....

சிவா எத்தனை இனிமையானவன். சிவா கவிதை சொல்லக் கேட்டுக் கொண்டிருப்பது தனி சுகம். பாலேந்திரன், செவ்வேல், இளங்கோ, நாவுக்கரசு என்று ஒவ்வொருவரும் வரிசையாய் நினைவில் வந்து போனார்கள். நீண்ட பெருமூச்சு அவனிடத்தில் எழுந்தது. தலையின் பின்னால் கைகளைக் கோர்த்துக்கொண்டு எதிரே பார்த்தான். மாலைப் பொழுது மங்கிய நேரம் மலைச்சரிவில் வரிசையாய் பெண்கள் நடந்து போனார்கள். குளிர்காற்று சில்லென்று அடித்தது. வானம் இருட்டி வர... நல்ல மழை வரப் போகிறது.

"இந்தாங்கோ.... இவளை கொஞ்சம் வைச்சிருங்கோ..."

சுமதி குழந்தையை அவனிடம் கொடுத்தாள்.

"இருட்டுது வீட்டுக்குள்ள வந்து இருங்கோவன்."

"கொஞ்சநேரம் இருந்திட்டு வாறன்."

பானுக்குட்டியை மடியில் இருத்திக் கொண்டான்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கிறீங்கள்...?"

அவன் முகத்தைக் கவனித்து விட்டு சுமதி கேட்டாள்.

அவன் நிமிர்ந்து சுமதியைப் பார்த்தான். இந்த சுமதியால்தான் கிளிநொச்சியிலிருந்து மாற்றம் எடுத்துக் கொண்டு நாவலப்பிட்டிக்கு வரவேண்டியதாயிற்று.

சுமதிக்கு நாவலப்பிட்டியில் வேலை. அதனால் திருமணத்திற்கு பின்னர் இங்கேயே இருக்கிறார்கள். இங்கேயும் இலக்கியக்கூட்டம் பேச்சு கவிதை என்று கலந்து கொள்ள முடிகிறது. இயற்கையை இரசிக்க முடிகிறது. ஆனாலும் கிளிநொச்சி ஞாபகம் வரும்போது மட்டும் மனம் பாரமாய்க் கனக்கும்.

கிளிநொச்சி பற்றிய செய்திகளைக் கேட்கும் போதோ... வாசிக்கும் போதோ மனதிற்குள் ஏக்கம் இழையோடும். தன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்ற சுமதியிடம், ஒன்றுமில்லை, என்று தலையசைத்துவிட்டு எதிரே பார்வையைப் பதித்தான்.

காலம் கிளிநொச்சிமீது தன் அடையாளங்களை குரூரமாகப் பதித்துவிட்டது. அங்கே இப்போதும் இலக்கிய விழாக்கள் நடக்கக் கூடுமோ? பட்டிமன்றங்கள், கவியரங்குகள் நடக்குமா? கோவில் விழாக்களில் மேடை போட்டு பிரசங்கங்கள் நடக்குமா? விடிய விடிய திருவிழாவும் மேளக்கச்சேரிகளும் நடக்குமா?

இரணைமடுக் குளமும் கனகாம்பிகை அம்மன் கோவிலும் இப்போது எந்த நிலையில் இருக்குமோ? சிவாவும் மற்றவர்களும் எப்படி இருப்பார்கள்... இங்கு வந்த புதிதில் அவர்களுடன் கடிதத் தொடர்பு இருந்தது. பிறகு படிப்படியாய் குறைந்து இப்போது இரண்டு வருடங்களாக முற்றிலும் நின்றுவிட்டிருந்தது. கிளிநொச்சியின் நிலவரங்கள் மனக் கலக்கத்தையே தருகிறது.

திடுமென்று சிவாவுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட வேண்டும்போல் ஒரு நினைவு எழுந்தது. அப்போதுதான் இந்த மனப்பாரம் குறையக்கூடும்.

அவன் பானுக்குட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான். மின் விளக்கு பளீரிட்டது. உறங்கிவிட்ட குழந்தையை கட்டிலில் கிடத்திவிட்டு மேஜைக்கு வந்தான்.

காகிதம் எடுத்து வைத்து பேனாவைக் கையில் எடுத்தபோது நெஞ்சில் 'திடுக்'கென்ற உணர்வு.

கடவுளே என்று நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டான். பேனாவை அப்படியே மேஜையில் வைத்தான்.

கடிதம் எழுதிய பிறகு எந்த விலாசத்தை உறையில் எழுதுவது..? அவர்கள் எல்லோரும் எங்கே எந்த இடத்தில் வாழக்கூடும்?

நெஞ்சுக்குள் துக்கம் அடைத்துக்கொள்ள அழவேண்டும் போலிருந்தது. ●

# நிறம்

தமிழண்ணா

அன்பு மகன் தங்கராசுக்கு, அப்பா எழுதிக் கொள்வது. உனக்கு இங்கு ஒரு பெண் பார்த்திருக்கிறோம். நல்ல குடும்பம். எங்களுக்கும் பெண் பிடித்துவிட்டது. நீ வந்து பார்த்து சொன்னால் மற்றதை பேசலாம். அதனால் இந்த கடிதம் கண்டதும் உடனே புறப்பட்டு வரவும்!

இப்படிக்கு,
அப்பா கணேசன்.



கடிதத்தை படித்த தங்கராசுக்கு 'உடனே போய் பெண்ணை பார்த்துவிட வேண்டும்' என மனம் துடிக்க, அந்த வாரத்தின் வெள்ளிக்கிழமையே ஊருக்கு கிளம்பினான்.

பெண்ணை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்த தங்கராசு, "அந்த பொண்ணு எனக்கு பிடிக்கலே" என்றான்.

"ஏண்டா பொண்ணு நல்ல குடும்பம். நல்லாவும் படிச்சிருக்கு, அழகாவும் இருக்கு கேட்கிற வரதட்சணையும் கொடுக்கிறதா சொல்லிட்டாங்க. வேற உனக்கு என்னப்பா குறை?" அப்பா கேட்டார்...

"எல்லாம் இருந்தும் பொண்ணு நிறத்துலே அமாவாசையாட்டம் இருக்கா. இப்படி அட்டக்கரியாட்டம் இருக்கிறவளை கல்யாணம் பண்ணிக்கிட்டு, நான் கொழும்புக்கு கூட்டிக்கிட்டு போனா என் நண்பர்கள் எல்லோரும் அசிங்கமா கிண்டல் பண்ணுவாங்கப்பா!"

தங்கராசு சொல்வதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அவன் தங்கை கவிதா. "அண்ணா நான்கூட அமாவாசை நிறத்துலதானே இருக்கேன். அப்படின்னா என்னையும் யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்களா?" தங்கை கேட்க,

ஒரு கணம் திகைத்த தங்கராசுவின்மனம் தெளிவுபெற, "அப்பா இப்ப பார்த்துட்டு வந்த பெண்ணையே கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்றான்! ◎


படிப்பகம்

www.padippakam.com



தாசி வீட்டில்
தவம் கிடந்தான்!

இராத்திரி நேர பூஜையில்
சாத்திரம் பல கற்றான்!

முத்தங்களால் தோய்த்தாள்
தேகம் தேய்கிறதோ
என அவன் தித்தித்தான்!

"அமுதம் இதுதான்
அமுதே நீதான்
தமிழும் கசந்ததடி-உன்
இதழை சுவைத்த பின்னர்!"
என்றான் மோகித்து!

"அத்தனை மோசமாகவா
இருக்கிறது
என் முத்தம்?"
என்றாள் முறைத்து.

"தமிழிலும் உயர்ந்த
சுவை உலகில் இல்லை!
அதனிலும் உயர்ந்ததடி
உன் இதழ் சுவை!"

தன் நலத்துக்காக
தாயைக்கூட இகழத்
தயாராக இருந்தவனுக்கு
தாய்மொழியை
இகழ்வதற்கோ தயக்கம்!...

"தாய்மொழி தெரியாது
என்று சொல்வதை
தற்பெருமையாக நினைக்கும்
தற்குறிகள் பலர் உளர்!

உம் மொழியை
உயரம் குறைக்காதீர்!
உடல் இச்சையால்
உயிர் மொழியை
குள்ளமெனக் கூறாதீர்!"
என்றாள் அவள்.

"தாசியாக இருந்தாலும்
தத்துவம் பேசுகிறாய்!"

"உடலைத்தானே விற்கிறோம்
உள்ளத்தையல்லவே!"
என்றாள் அவள்.

"மொழிப்பற்று
உனக்கும் உண்டோ?"
இடக்காகக் கேட்டான்.

"மொழி நம் விழி
மொழி நம் உயிர்
எப்படி பற்றின்றிப் போகும்?"

"நாம் வாழ்வது
வெள்ளையன் ஆட்சியில்!"
நினைவுபடுத்தினான் அவன்!

"வெள்ளையன் மட்டுமல்ல
எந்த அந்நியன் வந்தாலும்
கொள்ளையிட முடியாது
நம் மொழிப் பற்றை!"

"நீ என்ன
கட்டப் பொம்மன் கட்சியா?"
குத்தலாகக் கேட்டான்.

"இல்லை!-தன்மானம்
கெட்டுப்போகாதவன் கட்சி!"

"உன்மானம்தான்
கப்பலேறுகிறதே-இதில்
என்ன தன்மானம்!"
என்றான் அவன்.

"அப்படிப் பார்த்தால்
உம் மானமும்தான்
இங்கே கப்பலேறுகிறது!"

"நான் ஆண்மகன்
நீ பெண்!"

"ஆணுக்கு
மானம் இல்லையா?"

"நான் மானத்தையா
இழக்கிறேன்,-உன்
மேனியைத்தானே மேய்கிறேன்!"

"அது எனக்கு மட்டும்
பொருந்தாதா?

மானத்தை விற்கவில்லை
மேனியைத்தான்
வாடகைக்கு விடுகிறோம்!
இதுவும் வயிற்றுக்காக
வெறுப்புடன் செய்யும்
தொழில்தான்!"

"ஆடையை அவிழ்ப்பவள்
மானத்தை இழப்பவள்தானே?
குறுக்கே கேட்டான்.

"ஆடை என்பது
மானத்தின் சின்னமல்ல!

ஆடையின்றி வாழ்ந்த
ஆதி மனிதன்
மானம் கெட்டவனுமல்ல!

பிறக்கும்போது
ஆடையின்றி வருவதால்
நாமெல்லாம்
மானம் கெட்ட
பிறவிகளாகிவிட்டோமா?"

அவள் விளக்கினாலும்
அவன் விடவில்லை;
"ஆடையின்றி நீ
திரிந்து பாரேன்!"
என்றான் இடக்காக.

"ஆடைகள் என்பவை
நாகரிக வளர்ச்சி
நமக்குத் தந்த போர்வை!

மானம் என்பது
நமக்குள் உள்ளது!

என் அனுமதியுடன்
என்னை நீ
எடுத்துக் கொள்ளலாம்!

அனுமதியின்றி
எந்தன்மீது உந்தன்
சுட்டுவிரல்
பட்டாலும் உதைப்பேன்!
அதுதான் தன்மானம்!"

அவள் கண்களில்
புத்தொளி பளபளத்தது!

"அப்படியானால்
கற்புக்கு இங்கே
மரியாதை இல்லையா?"
என்றான் அவன்!

"கற்பு என்பது

## இலக்கிய நயம்

உறுப்பு சம்பந்தப்பட்டதல்ல!
மன ஒழுக்கம் சார்ந்தது!

நண்பனுக்கு
துரோகம் செய்பவனும்
கற்பிழந்தவனே!

'கற்பு' என்பது
பரஸ்பர நம்பிக்கை.
கூட இருந்து
குழிபறியாமை!
ஒருவருக்கொருவர்
துரோகம் செய்யாமை!

கற்பு என்பது
ஆணுக்கும் உள்ளது!

கற்பு என்பது
பெண்ணுக்கும் உள்ளது!

மனைவி இருக்க
மலர் பல தாவுவதும்
கற்பிழத்தலே!

கணவன் இருக்க
வண்டு பல நாடுவதும்
கற்பிழத்தலே?

ஒட்டாத உறவு
என்றால்
வெட்டிக் கொள்!
பின்னர் புது உறவை
சுட்டிக் கொள்!

அது நட்புக்கும்
பொருந்தும்!
தாம்பத்தியத்துக்குப்
பொருந்தும்!

தாசி என்பர்
என்னை!

கொடுக்கும் கூலிக்கு
சுகம் கொடுக்கிறேன்!

துரோகம் இல்லை
ஏமாற்றுதல் இல்லை!

ஆகவே நான்
கற்போடு இருக்கிறேன்!

துணையிருக்க-என்
துணை தேடி வந்தீர்!
கண்மணியாம் உம்மவளுக்கு
துரோகம் இழைத்தீர்!

கற்பிழந்தவர் நீரே
கற்பழிந்தது உமக்கே!"

## அவள் தான் சொன்னாள்!

## தருவது ரசிகன்

நீண்ட விளக்கம்
ஒவ்வொன்றும்!
ஆணியாய் இறங்கிய
வார்த்தையடிகள்!

"மொழிப் பற்றும்
உண்டு
இனப்பற்றும்
உண்டு!
பெண் இனத்துக்கான
வீரமும் உண்டு!"

போற்றிவிட்டு
வெளியேறினான்!

மகாகவி பாரதி
சொன்னதைத்தான்
மா அழகியும்
சொல்லிவிட்டாள்;

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார்-
இரு கட்சிக்கும் அஃது
பொதுவில் வைப்போம்!"

---

ஸ்போர்ட்ஸ்

## ஸிம்பாப்வே சுற்றுப்பயணம்

கனடாவில் நடைபெற்ற சஹாரா கோப்பைப் போட்டியில் 4-1 என்ற கணக்கில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்துள்ள இந்திய கிரிக்கெட் அணி அடுத்து ஸிம்பாப்வேயிற்கு சுற்றுப்பயணம் செய்கிறது.

இம்மாதம் 24ம் திகதி ஸிம்பாப்வே புறப்படும் இந்திய அணி, ஸிம்பாப்வேயுடன் இம்மாதம் 26,27,30 ஆகிய திகதிகளில் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகின்றது. இது முடிந்ததும் ஒக்டோபர் மாதம் 7ம் திகதி முதல் 11ம் திகதிவரை ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது.

முகமட் அஸாருதீன் தலைமையில் செல்லும் இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக தேபஷிஷ் மொஹந்தி சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் சகலதுறை ஆட்டக்காரர் ரிஷிகேஷ் கனிட்கர் அணியில் இடம்பெறவில்லை.

ஸிம்பாப்வே செல்லும் இந்திய அணி விபரம் வருமாறு:

முகமட் அஸாருதீன் (கேப்டன்), அஜய் ஜடேஜா (துணை கேப்டன்), நயான் மொங்கியா (விக்கெட் கீப்பர்), சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, நவ்ஜோத் சிங் சித்து, றொபின்சிங், ராகுல் ட்ராவிட், ஜவகல் ஸ்ரீநாத், அஜித் அகர்கார், தேபஷிஷ் மொஹந்தி, அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங், ராகுல் சங்வி.

## புறக்கணிக்கப்படும் கபில்

உலகிலேயே அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைச் சாய்த்து சாதனை படைத்தவர் இந்திய சகலதுறை ஆட்டக்காரரும், முன்னாள் கேப்டனுமான கபில்தேவ் என்பது தெரிந்த விஷயம்.



கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றபின் கபில்தேவ் உதைபந்து விளையாடினார். அதில் அவரால் ஈடுபாடு காட்ட முடியவில்லை. தற்போது கபில்தேவ் கோல்ஃப் விளையாட்டில் அதிக அக்கறை காட்டி வருகிறார். கோல்ஃப் விளையாட்டில் இந்தியாவில் தேசிய அளவில் கபில் பல போட்டிகளில் பங்கேற்றும் வருகிறார்.

உலக அளவில் கபில்தேவின் சாதனைகளுக்கு அங்கீகாரம் கிடைத்தும்கூட 'அவரது மாநிலமான ஹரியானாவில் உள்ள கிரிக்கெட் சங்கத்தில் இவருக்கு எவ்வித ஆதரவும் கிடைக்கவில்லை. காரணம் கபில்தேவிற்கும் ஹரியானா கிரிக்கெட் சங்கத்திற்கும் மோதல் என்கிறார்கள்.

"ஹரியானா கிரிக்கெட் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களான 62 பேருக்கும் கிரிக்கெட்டுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இச்சங்கம் ஜனநாயக முறைப்படி இயங்கவில்லை!" என்று இந்த மோதலுக்கான காரணத்தை வேதனையோடு கூறுகிறார் கபில்தேவ்.

அதுமட்டுமன்றி இந்திய அணிக்காக பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த இந்தச் சாதனை வீரருக்கு, இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழு உறுப்பினராகவோ அல்லது கிரிக்கெட் சபையிலோ இன்னமும் இணைத்துக் கொள்ளவில்லை என்பதும் கவலைக்குரிய விடயமே.

## ஆயுட்காலத் தடை

பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டன் வாஸிம் அக்ரம் உட்பட 3 பேர் இலஞ்சம் பெற்றதற்கு ஆதாரம் உள்ளது என்றும், அதனால் அவர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிக்க வேண்டும் என்று விசாரணைக்குழு அண்மையில் அறிவித்திருந்தது.



அக்ரமுடன் குற்றம் சாட்டப்பட்ட இஜாஸ் அஹமட், சலீம் மாலிக் ஆகியோர் தற்போது பாகிஸ்தான் அணியில் விளையாடி வருகின்றனர். அக்ரம் மட்டுமே அணியில் இடம்பெறவில்லை.

அண்மையில் வாஸிம் அக்ரம் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்திருந்தார். ஆனால் தற்போது தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார்.

"ஊழல் குற்றச்சாட்டில் இருந்து எனது பெயர் நீங்கும்வரைதான் விளையாடாமல் இருப்பேன். அதன்பின் மீண்டும் அணியில் சேர்ந்து விளையாடுவேன். இந்த விசாரணை முடிய இரண்டு மாதமோ அல்லது இரண்டு வருடமோ ஆகலாம். அதுவரை ஒதுங்கியிருந்து, நான் குற்றமற்றவன் என்பதை நிரூபித்துவிட்டு மீண்டும் அணியில் இணைவேன்." என்று வாஸிம் அக்ரம் கூறியுள்ளார்.

---

## சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா! ஆனந்தசங்கரி துணிந்துவிட்டாரே பார்த்தீரா?**

இ.ஜெகநாத், கொழும்பு-11.

கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார். பின்னர் உஷாராகிவிட்டார். "சொன்னதெல்லாம் நானல்ல..." என்றுவிட்டாரே! நீதியமைச்சர் பீரிஸ் அவசரப்பட்டு பாராட்டியதற்கு அவரா பொறுப்பு? மறுப்பறிக்கையை மாண்புமிகு அமைச்சருக்கன்றோ அனுப்பியிருக்க வேண்டும்!

**★ கிலாரி கிளின்ரனின் பெருந்தன்மையைப் பார்த்தீரா? கிளின்ரனை மன்னித்து விட்டாரே?**

சி.சிவமதி, நுவரெலியா.

கிளின்ரன் ஜனாதிபதியாக இருந்திருக்காவிட்டால், கிலாரி பின்னி எடுத்திருப்பாரோ என்னவோ- யார் கண்டது!

**★ வன்னியில் பட்டினிச்சாவு இல்லையென்று தமிழ்க் கட்சிகள் சில கூறியுள்ளனவே?**

பூ.ராகவன், யாழ்ப்பாணம்.

மக்களின் வயிறு பற்றியெரிகிறது; இவர்கள் நிவாரண வெட்டுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். இதன் பெயர் ஜனநாயகப் பாதையல்ல, ஜனவிரோதப் பாதை!

**★ கதை இல்லாமல் பத்திரிகை வெளியிட முடியாதா?**

செல்வி ஆர்.ஜெயந்தி, மட்டக்களப்பு.

முடியுமே! திருமணப் பத்திரிகை.

**★ நோய் என்றால் வைத்தியரும் பணம் பறிக்கிறார், 'கேஸ்' என்றால் வழக்கறிஞரும் பணம் பறிக்கிறார்? இருவருக்கும் என்ன ஒற்றுமை?**

ச.கிருஷ்ணகாந்தன்,
கொழும்பு-06.

ஒற்றுமை உங்கள் கேள்வியிலேயே இருக்கிறதே. உங்களுக்கு ஒரு குட்டிக்கதை.

ஒரு மருத்துவ மனையில் நோயாளி மருத்துவரை அழைத்தார். "டாக்டர் உண்மையைக் கூறுங்கள். நான் இன்னமும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன்?" என்றார்.

"இன்று இரவுவரை தள்ளுவதே சந்தேகம்!" என்றார் டாக்டர்.

"என் வழக்கறிஞரை அழையுங்கள்!" என்றார் நோயாளி.

வழக்கறிஞர் வந்ததும் நோயாளி தன் படுக்கையின் ஒருபுறம் மருத்துவரையும், மறுபுறம் வழக்கறிஞரையும் இருக்குமாறு வேண்டினார். பின்னர் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடியபடி சிந்தித்தார். திடீரென்று சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்றனர் டாக்டரும், வழக்கறிஞரும்.

நோயாளி கூறினார்:" இயேசு மரிக்கும் போது அவருடன் இரு திருடர்களும் இருந்தனர் என்பதை நினைத்தேன்; சிரித்தேன்!" என்றார்.

**★ அதிகமான தமிழ்த் திரைப்படப் பாடல்கள் பாடியவர் யார்?**

கே. நிசாம், வத்தளை.

அதிகமான தமிழ்ப் பாடல்கள் மட்டுமல்ல, உலகிலேயே அதிகமான பாடல்களைப் பாடியவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். மூவாயிரத்தி ஐநூறுக்கு மேல். அதனை கின்னஸில் பதிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன! தாய்மொழி தெலுங்கானாலும், தமிழ் மொழியிலும் அசத்தியவர் பாலு!

**★ சிந்தியா! அல்வா கொடுப்பது எப்படி?**

செ.பிரகலாதன்-திருமலை.

இதுவும் ஒரு வழக்கறிஞர் சம்பந்தப்பட்ட கதைதான்.

பயங்கரமான வழக்கில் இருந்து ஒருத்தனை காப்பாற்றினார் வழக்கறிஞர். அந்த வழக்கில் தன்னைக் காப்பாற்றினால் தனது அரண்மனையை விற்று அந்தக் காசை அப்படியே தருவதாகக் கூறியிருந்தான்.

வழக்கறிஞரும் பல கோடி ரூபாய்கள் கிடைக்கப்போகும் சந்தோசத்தில் சட்டத்தின் சந்து பொந்தெல்லாம் புகுந்து வாதாடி வெற்றி பெற்றுக் கொடுத்தார்.

தான் கூறியபடியே அவன் அரண்மனையை விற்பதற்கு ஏலம் போட்டான். ஏலம் போடும்போது, "என் அரண்மனையையும் அதிலுள்ள என் பூனையையும் சேர்த்தே ஏலம் போடுகிறேன். அரண்மனையின் விலை ஒரு டொலர். பூனை விலை பத்து இலட்சம் டொலர்" என்று அறிவித்தான்.

கேட்டவர்கள் ஆச்சரியப்பட்டாலும் பத்து இலட்சம்+ ஒரு டொலருக்கு அரண்மனை கிடைக்கிறதே என்பதால் ஏலம் கேட்டார்கள்.

விற்பனை ஆகியது. அரண்மனைக்கு விலையாக கூறப்பட்ட ஒரே ஒரு டொலரை வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டு பத்து இலட்சம் டொலரை அவன் எடுத்துக் கொண்டான். அல்வா கொடுத்துவிட்டான் பார்த்தீர்களா!

**★ பொது நலவாய கிரிக்கெட்டில் இந்தியா தோற்றுவிட்டதே?**

கே.சொர்ணராஜா, கொழும்பு-09.

"தங்கத்துடன் திரும்புவோம்!" என்று பேட்டி கொடுத்துவிட்டுப் போனார் ஜடேஜா. குறைந்த பட்சம் வெண்கலத்துடனாவது திரும்பி இருக்கலாம். வெறும்கையுடன் அல்லவா திரும்பியுள்ளனர்?

**★ நல்ல நண்பர்களுடன் உறவு முறியாமல் இருக்க என்ன செய்யவேண்டும்?**

எஸ்.பௌமி, கந்தளாய்.

நீங்களும் நல்ல நண்பராக இருந்தால் போதும்!

**★ சிந்தியா! ரஜினிகாந்தின் அடுத்த படம் பற்றி சினிவிசிட் தந்த செய்திகள் உண்மையாகுமா? எப்போது நாம் ரஜினி படம் பார்ப்பது?**

என்.மகேந்திரன்,
தெகிவளை.



கே.எஸ். ரவிக்குமாருடன் ரஜினி

ரஜினியே தன் வாயால் கூறிய தகவல்களைக் கேளுங்கள்: படத்தின் பெயர்: 'படையப்பா'. இயக்குவது: கே.எஸ்.ரவிக்குமார். ஜோடிகள்: சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன். இசை: ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள் வைரமுத்து. முக்கியமான ஒருவரும் நடிக்கிறார். அவர் சிவாஜி கணேசன். ரஜினிக்கு அப்பாவாக நடிக்கிறார். ஏப்ரல் 14ம் திகதி திரைக்கு வருகிறது. என்ன சந்தோசம்தானே!

**★ தாய் தந்தையின் அறிவு பிள்ளைகளுக்கு இல்லாமல் போகிறதே? எதிர்காலத் தலைமுறை என்னாகும்?**

பா.சிங்காரவேல், கண்டி.

இந்தப் புலம்பல்தானே வேண்டாங்கிறது.

அப்பா மகன் இரண்டு பேரில் யார் அதி புத்திசாலி? என்று ஒரு தந்தையும் மகனும் விவாதித்தனர்.

"அப்பாதான் புத்திசாலியாக இருப்பார்!" என்றார் தந்தை.

"மகன்தான் புத்திசாலியாக இருப்பான்!" என்றான் பிள்ளை.

"ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று கேட்டார் தந்தை.

"நீராவியைக் கண்டு பிடித்தது யார்? என்று கேட்டான் மகன்.

"ஜேம்ஸ் வாட்!" என்று கூறினார் தந்தை.

மகன் கேட்டான்: "ஜேம்ஸ் வாட்டின் அப்பா ஏன் நீராவியைக் கண்டு பிடிக்கவில்லை?"



ரசிகா

**★ நடிகை சங்கவி தமிழ் நடிகையா?**

பி.தேவ், கொழும்பு-06.

தமிழிலும் நடிக்கும் கன்னடப்புயல்.

**★ சிந்தியா! காதலுக்காக நாவை வெட்டுவது சரியா?**

ச.வந்தனாதேவி, மாத்தளை.

காதலுக்காக நாவை அடக்கலாம். அறுக்கக்கூடாது! 'சொல்லாமலே' படத்தின் உச்சக்கட்ட காட்சி தவறான முன்னுதாரணம்!

**★ நடிகைகளே இல்லாமல் ஒருபடம் எடுத்தால்?**

அ.பாலச்சந்திரன், மட்டுநகர்.

தயாரிப்பாளர் தலையில் துண்டு போடவேண்டியதுதான்! பாலச்சந்திரன்கூட படம்பார்க்கமாட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 28

ஆண்டவருக்கு மாறான பல காரியங்களை அபிமெலக்குப் புரிந்துவந்தான். தானே தலைவன் என்ற மமதையில் தீய செயல்களைப் புரிந்த அவனை ஆண்டவர் தண்டித்தார். அவன் பிறந்து வாழ்ந்த- அவனை இஸ்ரயேல் மக்களின் தலைவனாக்கிய- செக்கேம் குடிமக்களே அபிமெலக்குமீது வெறுப்புற்றனர். இதுவும் கர்த்தரின் சித்தத்தினாலேயே இடம்பெற்றது.



அபிமெலக்கு மூன்றாண்டுகள் இஸ்ரயேல் மக்களை ஆட்சி புரிந்தான். சுற்றியிருந்த பல இன மக்களையும் பகைத்துக் கொண்டான். தெபேசு நகரை முற்றுகையிட்டுத் தாக்குவதற்கு அபிமெலக்குச் சென்றான். அந்நகரைத் தீமூட்டி எரிக்கத் தீர்மானித்தான்.

அந்நகரின் நடுவே ஒரு மலைக் கோட்டை இருந்தது. நகர மக்கள் அனைவரும் அக்கோட்டைக்குள் புகுந்து கோட்டைக் கதவுகளைப் பூட்டிக் கொண்டனர். அக்கதவினைத் தீமூட்டி எரிக்க அபிமெலக்கு முன்னேறினான். கோட்டைக்குள் பதுங்கியிருந்த ஒரு சாதாரண பெண், தானியம் அரைக்கப் பயன்படுத்தப்படும் கல்லொன்றை எடுத்து கோட்டையின் மீதேறி நின்றவாறு அபிமெலக்கின் தலைமீது எறிந்தாள். தலை சிதறி அவன் கீழே சாய்ந்தான். ஆனால் உடனடியாக அவன் உயிர்பிரியவில்லை.

அபிமெலக்கு தன் அருகிலிருந்த தனது உதவியாளனை சைகையால் அழைத்து, அவனுடைய உடை வாளால் தன்னைக் குத்திக் கொன்றுவிடுமாறு கேட்டுக்கொண்டான். ஒரு பெண்ணால் தான் மடிவது அவமானம், என்று கருதியமையினாலேயே இவ்வாறு தன்னைக் கொல்லும்படி அவன் கேட்டுக் கொண்டான். அபிமெலக்கின் உதவியாளன் அவனுடைய வேண்டுகோளை ஏற்று வாளினால் குத்திக் கொன்றான்.

அபிமெலக்கு மறைந்ததும் தோலா, யாபிர், இப்தா போன்றோர் தோன்றி மக்களை வழி நடத்தினர். இப்தாவுக்கு கிலயாத்து நாட்டு மக்களும் ஒத்தாசை புரிந்தனர். இப்தா சமாதானமான பாதைகளையே விரும்பினார். ஆனால் அம்மோனிய மன்னனோ, ஏதோமின் மன்னனோ இப்தாவின் சமாதானப் பேச்சைக் கேட்கவில்லை. போரிடவே விரும்பினர். வேறு வழியின்றி இப்தா போர்க்கோலம் பூண்டார்.

## இப்தாவின் நேர்த்தி

அம்மோனியருடன் போர் புரியப் புறப்படு முன்னர் ஆண்டவரைப் பிரார்த்தித்து ஒரு வேண்டுகோளை விடுத்தார் இப்தா. "அம்மோனிய மக்களை நான் தோற்கடிப்பேனேயானால், போர்க்களத்திலிருந்து வீடு திரும்பும் போது என்னை என் இல்லத்திலிருந்து வரவேற்க முதலில் எவர் முன் வருகிறாரோ- ஆண்டவரே! அவரை உமக்கு எரிபலியாக்குவேன்!" என்று நேர்ந்தார்.

போர்க்களத்தில் பெரும் போர் நடந்தது. ஆண்டவர் இப்தாவின் சேனைக்கே வெற்றி வாய்ப்பைத் தந்தார். வெற்றிக் களிப்பில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்த இப்தா, தன்னை நோக்கி, ஆடிப்பாடிக் கொண்டு வந்த உருவத்தைக் கண்டதும் திகிலடைந்தார். கண்கள் கண்ணீர் பெருக, தழுதழுத்த குரலில், "ஐயோ மகளே! நீயா இன்று என்னை வரவேற்க ஓடி வந்தாய்? எனக்கு உன்னைத் தவிர வேறு பிள்ளைகள் எவரும் இல்லையே! உன்னையா நான் பலியாக்கி இழக்க வேண்டும்?" என்று பெருங்கவலையிலாழ்ந்தார்.

தன் தந்தையின் நிலைப்பாட்டை அறிந்த அவரது மகள், தன் தந்தையைக் கலங்க வேண்டாம் என்று ஆறுதல் கூறினாள். தந்தையின் நேர்த்தியை நிறைவேற்றத்தான் சித்தமாயிருப்பதாகக் கூறினாள். தான் கன்னிமை இழக்காதவள் என்பதை உறுதிப்படுத்த இரு மாதங்கள்வரை மலைமீது சுற்றித்திரிய அவகாசம் கேட்டாள். இப்தாவும் அதற்கு உடன்பட்டார். இருமாதங்களின் பின்னர் இப்தா தன் நேர்த்தியை நிறைவேற்றினார்.

இப்தா ஆறு ஆண்டுகள் இஸ்ரயேல் மக்களின் நீதித் தலைவராக இருந்து வழி நடத்தினார். அவரைத் தொடர்ந்து இப்சான் என்பவர் ஏழு ஆண்டுகளும் ஏலோன் என்பவர் பத்து வருடங்களும் அப்தோன் எட்டு ஆண்டுகளும் மக்களை வழிநடத்தினர். இதன் பின்னர் மக்கள் வழி தடுமாறி ஆண்டவருக்கு விரோதமான செயல்களில் ஈடுபடலாயினர். ஆண்டவருடைய கோபத்தின் பயனாக இஸ்ரயேல் மக்கள் பெலிஸ்தியரின் அடிமைகளானார்கள்.

தான் குலத்தவரான மனோவாகு என்பவர் மணம் முடித்தும் நீண்டகாலம் குழந்தைச் செல்வமின்றி வருந்தினார். கணவனும் மனைவியும் கர்த்தரைப் பிரார்த்தித்து, குழந்தைச் செல்வம் அருளும்படி வேண்டினர். ஆண்டவர் மனமிரங்கி அவருடைய தூதரை மனோவாகுவின் துணைவியாரிடம் அனுப்பினார். தூதர் அப்பெண்மணியிடம், "உமக்கு ஓர் ஆண் மகவு பிறக்கப்போகிறது. அக்குழந்தை கடவுளுடைய கடாட்சம் பெற்றவனாக இருப்பான். ஆகவே நீர் கருவுறும் காலத்திலிருந்து தூய்மையாக இருக்க வேண்டும். மதுபானம் அருந்தலாகாது, திராட்சை ரசம்தானும் குடிக்கலாகாது. தீட்டைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மிகவும் பத்திரமாக இக்காலத்தைச் செலவிட வேண்டும். உமக்குப் பிறக்கும் குழந்தையின் தலை மற்றும் முகத்தில் வளரும் முடியை எக்காலத்திலும் சவரக்கத்தி கொண்டு மழித்து விடலாகாது. இவற்றை மிகக் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டும்!" என்று கூறி விட்டு மறைந்தார்.

# சிம்ம பலம் பெற்ற சிம்சோன்



## சிம்சோனின் பிறப்பு

மனோவாகுவின் மனைவியிடம் தேவதூதன் கூறியவற்றை கணவரிடம் அவ்வம்மையார் கூறினார். மனோவாகு சற்றுக் குழப்பமடைந்தார். அதேவேளையில் தேவதூதர் தோன்றி மனோவாகுவின் சந்தேகத்தைத் தீர்த்தார். அவர் மனித உருவில் வந்தாலும் அவர் ஆண்டவரால் அனுப்பி வைக்கப்பட்ட தூதரே என்பதை அறிந்து இருவரும் பெருமகிழ்ச்சியடைந்தனர். தரையில் விழுந்து தொழுதெழுந்தனர்.

தேவதூதர் கூறியது போல் மனோவாகுவின் மனைவி உரிய காலத்தில் ஓர் அழகிய ஆண் மகனைப் பெற்றெடுத்தார். சிம்சோன் என்று மகனுக்குப் பெயர் சூட்டினர். புத்திக் கூர்மையும் நல்ல திடமான சரீரமும் கொண்ட இளைஞராக வளர்ந்தார். இறைவனின் பரிசுத்த ஆவி சிம்சோனைப் பூரணமாக ஆட்கொண்டது.

இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் அப்போது பெலிஸ்தியர்களிடம் அடிமைப்பட்டுக்கிடந்தது. சிம்சோன், திமினா என்ற ஊருக்குச் சென்றிருந்தபோது அழகான ஓர் இளம் பெண்ணைக் கண்டார். சிம்சோனின் உள்ளத்தில் அப்பெண் குடியேறி விட்டாள். தன் தந்தை-தாயிடம் வந்து தான் அப்பெண்ணை மனதார விரும்புவதால் அம்மங்கையையே தனக்கு மணம் முடித்துத் தருமாறு வேண்டினார்.

பெலிஸ்தியப் பெண்ணை சிம்சோனுக்கு மணம் முடித்துக் கொடுக்க பெற்றார் முதலில் மறுத்தனர். தங்கள் குலத்தில் எத்தனையோ அழகிகள் இருக்கும்போது அந்நிய குலப் பெண்ணை ஏன் மணம் முடிக்க வேண்டும் என்று பலவாறாக மறுத்துரைத்தனர். இருப்பினும் சிம்சோன் அப்பெண்ணையே தான் மணம் முடித்தாக வேண்டும் என்று அடம் பிடித்தார்.

இஸ்ரயேல் மக்கள் பெலிஸ்தியரிடம் அடிமைகளாகத் தொடர்ந்திருப்பதை ஆண்டவர் விரும்பவில்லை. தன் மக்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டெடுக்கவே இறைவன் திருவுளம் கொண்டிருக்கிறார் என்பதை சிம்சோனின் பெற்றோர் அறிந்திருக்கவில்லை. தங்கள் ஒரேயொரு மகன் விரும்பிக் கேட்பதைக் கொடுப்பதே ஒரே வழி எனக்கருதி அப் பெண்ணைக் கண்டு திருமண ஒழுங்குகளைச் செய்வதற்காக திமினாவுக்கு பெற்றோர் சென்றனர். அவர்களுடன் சிம்சோனும் புறப்பட்டுச் சென்றார்.

## தேன் கிடைத்தது

மனோவாகுவும் மனைவியும் பின்னே வந்து கொண்டிருக்க மகன் சிம்சோன் திமினாவின் அடர்ந்த திராட்சைத் தோட்டத்தில் முன்னே சென்று கொண்டிருந்தார். அப்போது சிங்கக்குட்டி ஒன்று சிம்சோனை நோக்கிப் பாய்வதற்காக வந்தது. அதனை ஒரேபிடியில் பிடித்துக் கீழே தள்ளினார் சிம்சோன். தொடர்ந்து அதன் வாயில் இரு கைகளையும் கொடுத்துப் பிளந்தார். சிங்கம் இரண்டாகப் பிளந்து கீழே விழுந்து உயிர் விட்டது. எதுவுமே நடவாதது போல் சிம்சோன் முன்னேறினார். சிங்கத்துடன் தான் சண்டைபோட்டு அதனைச் சாகடித்த கதையைத் தன் பெற்றாரிடம் அவர் கூறவில்லை.

பெற்றார், தங்கள் புதல்வன் விரும்பிய பெண்ணைப் பார்த்துத் திருப்தியடைந்தனர். திருமணத்துக்கான நாள் குறிக்கப்பட்ட பின்னர் மற்றொரு தடவை, பெற்றாரையும் அழைத்துக் கொண்டு சிம்சோன் திமினாவுக்குச் சென்றார். தான் தனது கைகளால் கிழித்தெறிந்த சிங்கத்தின் உடலை ஒருமுறை பார்த்துவர ஆசைப்பட்ட சிம்சோன் தனியாக அவ்விடம் சென்றபோது அவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. சிங்கத்தின் உடலில் தேனீக்கள் கூடு கட்டி அதிலிருந்து தேன் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. ஓடிச் சென்று தேன் வதையைப் பிய்த்தெடுத்தார். தானும் நன்றாகக் குடித்ததுடன் தன் தாய் தந்தையாருக்கும் தேனைக் கொடுத்தார். ஆனால், சிங்கத்தின் உடலில் பெறப்பட்ட தேன் என்பதை அவர்களிடம் கூறவில்லை.

சிம்சோனுக்கும் பெலிஸ்தியப் பெண்ணுக்கும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அப்போதிருந்த வழக்கப்படி பெண் வீட்டாருக்கு சிம்சோன் ஒரு விருந்தளித்தார். இதனைத் தொடர்ந்து சிம்சோனுடன் தோழமை பூண்டிருப்பதற்காக முப்பது இளைஞர்களை திமினாவைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்தனர். இவர்களும் விருந்தில் பங்கேற்றனர். விருந்தின் முடிவில் அந்த முப்பது தோழர்களிடமும் சிம்சோன் ஒரு விடுகதையினைக் கேட்டு விடையளிக்கும்படி கூறினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 26 விடை** ☛ லேவியக் குருக்கள்.

**பரிசு பெறுவோர்:**

1. **எஸ்.வினோதினி,** மொன்டிகிரிஸ்டோ, நாவலப்பிட்டி.
2. **ச.மஞ்சுதா,** 66/23 மீசான் ரெரஸ், மாத்தளை.
3. **ரஜிதா சுரேஷ்,** 7,4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
4. **செல்வன் ஆ.அசோக்கானந்த்,** ஒலிரூட், தலவாக்கலை.
5. **மோ.ஜயபோசன்,** பெரியநீலாவணை-02, கல்முனை.

**திருமறை 28** வினா:- சிம்சோன் விரும்பிய பெண் எந்த இனத்தைச் சேர்ந்தவள்?

ஒக்.03க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 28— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : போரிஸ் யெல்ட்சின் |
| தொழில் | : ரசிய அதிபர் |
| முகவரி | : மருத்துவமனை |
| உபதொழில் | : அமெரிக்காவை தாஜாபண்ணுவது |
| எதிரிகள் | : கம்யூனிஸ்டுக்கள். |
| நண்பர்கள் | : முதலாளித்துவ நாடுகள்! டாக்டர்கள்! |
| சந்தோசம் | : அதிகாரத்தில் நீடிப்பது |
| துக்கம் | : கம்யூனிஸ்ட்டுகளின் எழுச்சி |
| பொழுது போக்கு | : பெண்களின் பின்புறத்தில் கிள்ளுவது |
| சாதனை | : பொருளாதார நெருக்கடி. |
| சோதனை | : அடிக்கடி சிகிச்சை |
| இலட்சியம் | : ரசியாவை குட்டிச் சுவராக்குதல்! |
| உடனடி இலட்சியம் | : மாட்டிக்கொள்ளாமல் மற்றொரு கிளின்ரனாவது. |

# கலைஞர் விளக்கம்

கலைஞர் கருணாநிதியும் வை.கோவும் சென்னை விமான நிலையத்தில் கைகுலுக்கிக்கொண்டனர். பிரதமர் வாஜ்பேயியை வரவேற்கச் சென்றபோதே இச் சந்திப்பு நிகழ்ந்தது. உடனே கற்பனைக் குதிரையை தட்டிவிட்டிருக்கிறார் காதிலை பூ கந்தசாமி.



கா.பூ.க: வணக்கம் கலைஞரே! புழுதியில் எறிந்த போர்வாளை மீண்டும் கையில் எடுக்க கணக்குப்போடுகிறீர்கள் என்கிறார்களே?

கலை: கழகம் என்றைக்குமே வன்முறையை வரவேற்ற கட்சியல்ல. அதனால் வாள் ஏந்திய வரலாறு என் வாழ்க்கையில் கிடையாது!

கா.பூ.க: வை.கோ.வை போர்வாள் என்று அன்றொருநாள் பாராட்டியதை மறந்து விட்டீர்களா?

கலை: போர் வாள் என்று நான் சொன்னதாக சில பத்திரிகைகள் தவறாக எழுதி விட்டன. போ வாள் என்றுதான் கூறி னேன். போர் வாள் என்று கூறவில்லை. வை.கோ.வின் போக்கு வன்முறைக்கு சார்பாக இருந்த காரணத்தால், அவரை வாளாக உருவகித்து, என் வாயாலேயே 'போ வாள்' என்று கூறினேன். வெளியே போ என்று நேரடியாக கூறுவது நாகரிகம் இல்லையென்பதால் நாசூக்காக கூறியதை நாசத்தனமாக வியாக்கியானம் செய்வது நல்லதல்ல!

கா.பூ.க: உங்களை கொலைசெய்ய சதி செய்ததாக நீங்களே கூறியவருடன் புன்முறுவல் செய்திருக்கிறீர்களே?

கலைஞர்: அது புன்முறுவல் அல்ல, புண் முறுவல். உடன்பிறப்பாக நம்பியிருந்த வை.கோ. என்னைக் கொல் என்று கூறுமளவுக்கு கல் மனம் கொண்டவராக இருந்தார் என்ற செய்தியை அறிந்த போது என் இதயத்தில் ஏற்பட்ட காயம் இன்னமும் ஆறவில்லை. அப்படியே இருக்கிறது. அந்தப் புண்தான் என் முறுவலில்கூட முன்னால் தெரிந்திருக்கிறது. ஆம்! அது புன்முறுவலல்ல, புண் முறுவல்!

கா.பூ.க: அன்றைய வை.கோ. இன்றைய வை.கோ. என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?

கலை: அன்று என் உடன் பிறப்பு இன்று என் எதிரி உடன் பறப்பு!

கா.பூ.க: வை.கோ, ஜெயலலிதா உறவைப் பிரிக்கத்தான் வை.கோ.வுடன் கைகுலுக்கி அந்தம்மாவை ஆத்திரமூட்டியதாகக் கூறுகிறார்களே?



கலை: அவர்கள் உறவைப் பிரிக்க நான் எதற்கு? அவர்களாகவே பிரியத்தான் போகிறார்கள்!

கா.பூ.க: பிரிவை நீங்கள் விரும்புவது போல இருக்கிறதே?

கலை: எந்தப் பிரிவையும் பரிவுடன் கவனித்து புரிவு ஏற்பட பாடுபடுகிறவன் நான்!


கா.பூ.க: காற்றுப்போன டயர் என்று வை.கோ.வை கூறினீர்களே?

கலை: காற்றுப் போன-டயரை வண்டியில் இருந்து கழற்றிப் போட்டு விட்டேன் என்று கூறினேன்.

கா.பூ.க: அப்படியானால் காற்றுப்போன டயருடன்தான் கைகுலுக்கினீர்களா?

(கலைஞர் முறைக்கிறார். கா.பூ.கந்தசாமியார் நைசாக நழுவுகிறார்)

# கத்தரித்த கார்ட்டூன்




# பேச்சாளர் பேரம்பலம்



குண்டுவெடிப்புக்கள் நடத்தி சமாதானத்தை குழப்புகிறார்கள் என்று அண்ணர் கண்டித்தாரேதவிர, விடுதலைப் புலிகளை எக்கட்டத்திலும் கண்டிக்கவில்லை என்பதுடன், இந்த கொலைகளைக் கண்டு அஞ்சமாட்டோம், ஓடி ஒளியமாட்டோம் என்று அண்ணர் விட்ட சாவல்... மன்னிக்கவும்... சவால் விடுதலைப் புலிகளை நோக்கி விடப்பட்டதாக விஷமிகள் கூறுவது கட்டுக்கதை.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O. (QD/21/NEWS/98)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


# குட்டி

→ விளையாட்டுப் பொம்மை போல் காட்சி தருவது உயிருள்ள ஒரு நாய்தான். 'டன்டி டின்மொன்ற் ரெறியர்' என்ற இனத்தைச் சேர்ந்த வேட்டை நாய்.

இந்த நாயின் முன்னங் கால்கள், பின்னங்கால்களை விடச் சின்னவை, மிக அடர்த்தியான பட்டுப்போன்ற ரோமங்களைக் கொண்ட இந்நாயின் தலை உச்சியில் கொண்டை போன்ற ரோமக்கற்றை காணப்படும். கண்கள், ஆழமான குழிபோன்ற அமைப்பில் ஏனைய நாய்களின் கண்களை விடப் பெரியனவாக இருக்கும்.



'டன்டி டின்மொன்ற்' என்ற பெயர் வரக்காரணமாக இருந்தது சேர் வால்டர் ஸ்கொட் என்ற ஆங்கில எழுத்தாளரின் நாவலாகும். இந்நாவலில் வரும் டண்டி டின்மொன்ற் என்ற விவசாயி, குள்ளநரி, முயல், எலி போன்ற பிராணிகளை வேட்டையாட ஒரு வேட்டை நாயை வளர்த்தாராம்.

அந்த நாயைப் பற்றிய வர்ணனை இவ்வின நாய்க்கு ஏற்றதாக இருந்தமையினால் அந்தக் கதாபாத்திரத்தின் பெயரையே இந்த நாய்க்கும் சூட்டிவிட்டனர்.





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


# உதவி

↘ கடற்கரையில் நீச்சலடிப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதனால் கடல் நீரோட்டத்தில் சிக்கி ஆபத்துக்களில் மாட்டிக் கொள்வோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

கடலில் நீச்சலடிக்கும்போது ஆபத்துக்களில் சிக்குவோரைக் காப்பாற்றுவதற்கென்றே ஒவ்வொரு நாட்டிலும் பாதுகாப்புக்கான தொண்டர் குழுக்கள் இயங்கி வருகின்றன. பெரும்பாலும் இக்குழுக்களில் இணைந்து தொண்டுபுரிவோர், இதனை வருமானம் தரும் தொழிலாகக் கொள்வதில்லை. மனிதாபிமான சேவைகளில் ஒன்றாகவே கருதித் தொண்டு புரிகின்றனர்.

கடற்கரையில் நீச்சலடிப்போரைப் பாதுகாக்கும் தொண்டர் கழகங்களில் சேர்ந்து தொண்டு புரியவிரும்புவோர் நீச்சல் கற்றுக்கொள்ள வேண்டும். ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் இப்பயிற்சிகளில் சேரலாம். நீச்சல் பயிற்சி முடிந்ததும் ஆபத்தில் சிக்கித் தத்தளிப்போரை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்ற பலதரப்பட்ட பயிற்சிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

அவுஸ்திரேலியாவில் உள்ள பல தொண்டர் கழகங்கள் பங்குபற்றும் களியாட்டவிழா வருடா வருடம் நடைபெறுவதுண்டு. ஏறத்தாழ 4000 தொண்டர்கள் வரை பல சாகசச் செயல்களைப் புரிவார்கள். இலட்சக்கணக்கில் பார்வையாளர்கள் கூடுவார்கள்.

படத்தில் நீச்சலடிப்போரைப் பாதுகாக்கும் தொண்டர் கழக உறுப்பினர்கள் அணிவகுத்து நிற்பதைப் பார்க்கலாம்.

நீச்சலடிப்போரை பாதுகாக்கும் தொண்டர்களை வைத்து படம் ஒன்றும் எடுத்துள்ளனர். 'பே வாச்'. இது இங்கும் எம்.ரி.வி.யில் ஒலிபரப்பாகிறது. திரை முழுக்க கட்டழகிகள்.



# பூங்காவனம்

↓ இந்த அழகிய பூந்தோட்டத்தைப் பார்க்கும்போது பேராதனைப் பூந்தோட்டம்தான் நம் நினைவுக்கு வரும்.

பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலத்தில் பேராதனை தாவரவியல் பூங்காவில் ஓர் அறிவிப்புப் பலகை தொங்கியதாம். 'உலகில் உள்ள எல்லாச் செடி, கொடி, மரம், பூண்டு அத்தனையும் இத்தோட்டத்தில் உள்ளன. ஏதாவது ஒரு மரமோ, பூண்டோ, செடியோ இல்லை என்று நிரூபித்தால் ரூபா.1000/- பரிசு தரப்படும்!' என்று அவ்வறிவித்தல் காணப்பட்டதாம். ஆனால் அத்தகைய ஒரு அறிவித்தல் பலகை இன்று காணப்படவில்லை.

படத்தில் காணப்படும் இவ்வழகிய பூங்கா கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தில் விக்டோரியா நகரில் உள்ள புச்சாட் தோட்டம். இங்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மரஞ்செடி கொடிகளைக் கொண்ட பல்வேறு பிரிவுகள் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆங்கில ரோஸ் தோட்டம், இத்தாலியப் பூங்கா மற்றும் ஜப்பான் பூங்கா ஆகியன பிரசித்தமானவை.

ஒவ்வொரு நாட்டின் தப்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப தாவரங்கள் மாறுபட்டு வளர்கின்றன. ஒரு நாட்டில் பயிரிடப்படும் ஒரு குறிப்பிட்ட செடி பிறிதோரிடத்தில் வளர முடியாது. ஆனால் நவீன அறிவியல் துணைகொண்டு இத்தகைய சூழ்நிலையை முறியடித்து சகல நாட்டு தாவரங்களையும் இங்கு உற்பத்தி செய்கிறார்கள். இது ஒரு சர்வதேசப் பூங்கா.



தினமுரசு வாரமலர்



# பார்க்கத்தான் ஆசை

↑ துணிகளைக் கொண்டு அமைக்கப்பட்டதொரு வடிவம் இது என்றுதான் கருதத் தோன்றும்.

இதுவும் இயற்கையின் ஒரு வேடிக்கைதான்

ஆம், இதுவும் ஒரு பூ தான். உலகில் மிகப் பெரிய பூ என்ற பெருமையைப்பெறும் இப்பூவின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை குறுக்களவு 90 சென்டி மீட்டர்.

இப்பூவுக்கு ஒரு தனித்துவம் என்னவென்றால் இது செடியிலோ, கொடியிலோ அல்லது மரத்திலோ மலர்வதில்லை. இலையோ காம்போ இம்மலருக்குக் கிடையாது. பிற செடிகளில் தான் இம்மலரின் வாழ்வு மலர்கிறது. இது ஓர் ஒட்டுண்ணி. இந்தோனேஷியாவில் மட்டுமே இம்மலர் காணப்படுகிறது. ரஃப்லீசியா' என்பது இதன்பெயர்.

## 5வது பிறந்த தின வாழ்த்து



**தனுஷன் ஸ்ரீ ஸ்கந்தராசா**

**24.09.1998**

ஏறாவூர், 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டி, நந்தன கார்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்கந்தராசா-சுசிலா தம்பதியினரின் செல்வப் புதல்வன தனுஷன் 24.09.98 அன்று 5வது பிறந்த நாளை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அம்மா, அப்பா, சூட்டி அக்கா, நிரஞ்சனா அக்கா, புத்தளம் பெரியப்பா-பெரியம்மா, ஏறாவூர் பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், காந்தச் சித்தப்பா, பத்மநாதன் தாத்தா, அமுதன் மாமா, மற்றும் உற்றார், உறவினர்கள், ஆயகலைகளுடன், சீரும் சிறப்பும்பெற்று பல்வாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்-ஸ்ரீஸ்கந்தராசா(தந்தை)

# நீராட்டம்

→ 'நீர்ப்போலோ'- தண்ணீர் தடாகத்துள் விளையாடப்படுவது. நீச்சலடித்துக் கொண்டு விளையாடும் இவ்விளையாட்டு ஏறத்தாழ உதை பந்தாட்டத்தைப் போன்றதே. போட்டியிடும் இரு பிரிவினரும் எதிர்த்தரப்பு 'கோல்' கம்பங்களுக்குள் பந்தை வீசித்தான் புள்ளிகளைப் பெற வேண்டும்.

இவ்விளையாட்டில் அபாயமுமுண்டு. விளையாட்டின்போது ஏற்படும் ஆவேசத்தில் எதிர்த்தரப்பினர் எவரையேனும் நீருள் அமுக்கும் சம்பவங்களும் இடம் பெறுவதுமுண்டு.

நீச்சலடித்துக் கொண்டு விளையாடுவதனால் இவ்விளையாட்டுக்கு 28 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டுள்ளன. ஏழு நிமிட ஆட்டத்தின் பின் இடைவேளை கொடுக்கப்படும். பெண்கள் விளையாடுவதானால் 24 நிமிடங்கள் நீடிக்கும் விளையாட்டுக்கு ஒவ்வொரு 6 நிமிடத்திலும் இடைவேளைவிடப்படும்.

நீர்ப்போலோ விளையாட்டுக்கான தடாகம் 30 மீட்டர் நீளமும் 20 மீட்டர் அகலமுமாக அமைக்கப்பட்டிருக்கும். ஒரு 'கோல் கீப்பரும்' 6 விளையாட்டுக்காரர்களும் ஒவ்வொரு அணியிலும் இருப்பர். விளையாடும்போது ஒரு கையால்தான் பந்தை வீசலாம். இரு கைகளையும் பயன்படுத்துவது ஏற்கப்படமாட்டாது. ஒவ்வொரு அணியும் வெவ்வேறு வர்ணத் தொப்பிகளை அணிவார்கள்.



படத்தில் வெள்ளைத்தொப்பி அணியும், கறுப்புத் தொப்பி அணியும் விளையாடுகின்றன. 'கோல் கீப்பர்' சிவப்பு நிறத் தொப்பி அணிந்துள்ளார்.

நீர்ப்போலோ விளையாட்டு இங்கிலாந்தில் 1870களில் தோன்றியது.

# உருவாக்கம்



← வகைவகையான மாமிசத்துண்டுகள், பாற்கட்டி, தக்காளிச் சீவல், கோவா இலை ஆகியவற்றை கோதுமையால் செய்யப்பட்ட வட்ட வடிவ-பணின் போன்ற ரொட்டியைப் பிளந்து-உள்வைத்துச் செய்யப்படும் உணவு மேலே நாடுகளில் வெகு பிரசித்தம். ஒன்றன்மீது ஒன்றை வைத்துத் தயாரிக்கப்படும் இதனை 'பேர்கர்' என்று சொல்வார்கள்.

சில 'பேர்கர்'கள் 6 அங்குல உயரம்வரைகூட இருக்கும். இதனை அப்படியே கையால் எடுத்து வாயைப் பிளந்து மென்று உண்பவர்களைப் பார்த்திருப்போரின் வாய் ஊறும். படத்தில் காணப்படுவது தான் 'பேர்கர்' பண்டம். பார்த்தாலே நமது வாயூறுகிறதல்லவா?

படத்தில் காணப்படுவது உண்பதற்கான உணவல்ல-வெறும் காட்சிப் பொருள் தான். கிளபென் ஒல்டென்பேக் என்ற சிற்பியால் உருவாக்கப்பட்ட ஒரு சிற்பம்.

1929ல் சுவீடன் நாட்டின் ஸ்டோக்ஹோம் நகரில் பிறந்து 1953ல் அமெரிக்கக் குடிமகனாகிவிட்ட ஒல்டென்பேக் என்ற சிற்பி, சிற்ப உலகில் ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியவர் என்றே சொல்லலாம். தின்பண்டங்கள், மின்சாரக் கருவிகள், பற்பசைக் கூடுகள், உதட்டுச் சாயக்குமிழ்கள், சவர்க்காரம் போன்ற பொருட்களை சிற்பங்களாக வடித்து பலரை ஏமாற்றி வருகிறார். அவருடைய சிற்பத்துக் கான 'பாத்திரங்கள்' அனைத்தும் உயிர் பெற்று உலவுவனபோன்றே தென்படும்.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார, ...